# 1979

# ஹஜ்

# வழி காட்டி



# ஹஜ் வழிகாட்டி
# 1979

தமிழ்நாடு ஹஜ் குழு
சென்னை-600 009

# HAJ GUIDE
# 1979
(TAMIL)

TAMILNADU HAJ COMMITTEE
FORT ST. GEORGE,
**MADRAS - 600 009.**

*front cover:*
THE HOLY KA'ABA IN MECCA

*back cover:*
PROPHET'S HOLY MOSQUE
IN MEDINA

தமிழ்நாடு ஹஜ் குழு ஹாஜிகளுக்கு
நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு
அவர்களின் ஹஜ் புனிதப் பயணம்
நல்ல முறையில் இன்னல்களின்றி
அமைய இறைவனைப்
பிரார்த்திக்கிறது.

''ஹஜ் வழிகாட்டி'' முதன் முதலாக 1974-ல் (டிசம்பர் ஹஜ்ஜுக்குச் செல்லும் பயணிகளுக்கு) வெளியிடப்பட்டது. அதன் 600 பிரதிகள் தமிழ்நாடு அரசின் செலவில் அச்சிட்டு இலவசமாக வழங்கப்பட்டன. 1975, 1976, 1977, 1978 ஆகிய வருடங்களில் ''ஹஜ் வழிகாட்டி''யின் 1000 பிரதிகளை தமிழ்நாடு ஹஜ் குழு அச்சிட்டு இலவசமாக ஹாஜிகளுக்கு வழங்கியது.

''ஹஜ் வழிகாட்டி 1979'' என்னும் இந்நூலின் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. ஹஜ் பயணம் செல்லவிருப்போர்களுக்கு இது இலவசமாக வழங்கப்படும்.

பிரதிகளுக்கு, ***தமிழ்நாடு ஹஜ் குழுவின் செயலாளரையோ*** [தலைமைச் செயலகம், சென்னை-600 009] அல்லது பம்பாயிலுள்ள ***"சென்னை ஹஜ் ஸர்வீஸ் சொசைட்டி"***யையோ (**Madras Haj Service Society**, 39/43, மஸ்ஜித் தெரு, மந்தவி தபால் நிலையம் அருகே, பம்பாய்-400003) அணுகவும்.

உங்களுக்கு இந்நூல் தேவையில்லையெனில் இதைப் பயன்படுத்தக் கூடிய ஒருவருக்கு அன்பளியுங்கள்.

RAJ BHAVAN
MADRAS - 600 022
*7th April 1979*

## MESSAGE

I am glad to know that the Tamil Nadu State Haj Committee, Madras-600 009, proposes to publish a Haj Guide to Hajis of Tamil Nadu and Pondicherry. I offer my best wishes to the Hajis who go to Saudi Arabia for the holy pilgrimage.

(Sd.) Prabhudas B. Patwari
GOVERNOR OF TAMIL NADU

**கா. இராசா முகமது,**
பி.ஏ., பி.எல்.,
கிராமத் தொழில் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 5—4—1979

அன்புடையீர்,

ஹஜ் புனித யாத்திரிகர்கள் பயனடையும் பொருட்டு 'ஹஜ்' கையேடு இவ்வருடமும் வெளியிடப்படுவதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். புனிதப் பயணிகள் இந்தக் கையேட்டின் மூலம் தங்கு தடையின்றி பயணம் மேற்கொள்ள ஏதுவாயிருக்கும் என நம்புகிறேன். எனது நல்வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,
**கா. இராசா முகமது.**

பெறுபவர்:

செயலாளர்,
**தமிழ்நாடு ஹஜ் கமிட்டி,**
புனித ஜார்ஜ் கோட்டை,
**சென்னை - 600 009.**

Tel : 262989
Gram : "HAJCOMMITTEE"

**haj committee**

(Constituted Under the Act of
Parliament No. 51 of 1959)

SABOO SIDDIQUE MUSAFIR KHANA,
1st FLOOR, LOKMANYA TILAK MARG,
BOMBAY - 400 001

*7th April, 1979*

My dear Ahmed Saheb,

I am very happy to note the Tamil Nadu Haj Committee proposes as usual to bring out a Haj Guide in Tamil. On the lines of the Haj Guide issued by the Haj Committee from Bombay in English and Urdu, the Haj Guide issued in Tamil by the Tamil Nadu Haj Committee contains necessary and useful information for Haj pilgrims.

On a recent visit to Madras I was very happy to meet Shri Raja Mohamed, Minister of Tamilnadu Government and Chairman, Tamil Nadu State Haj Committee and members of the State Haj Committee. I had an occasion to see the Haj Guides in Tamil issued previously and also to acquaint myself with the good work the Tamil Nadu Haj Committee has been doing. The Chairman. Members of the Haj Committee and its energetic Secretary Mr. M. Ahmed, I.A.S. deserve thanks of the pilgrims proceeding on the holy journey from that part of our country. I was told that these friends propose to construct a Haj House in Madras for the convenience of Hajis from different parts of Tamil Nadu.

I wish them success in all their endeavours for serving the cause of pilgrims. The Haj Committee would be happy to offer whatever help it can in their work and expects from them hearty co-operation in the work that is being done in Bombay. It is joint efforts of the Haj Committee in Bombay and different State Haj Committees all over the country which will enable all of us together to serve the cause of Haj pilgrims and to make available to them greater facilities in their holy journey. I Trust that Insha-Allah it will be so.

(Sd.) Moinuddin Harris,

CHAIRMAN, HAJ COMMITTEE

# தமிழ்நாடு ஹஜ் குழு

## (1—6—1979-ல் உள்ளபடி)

| வரிசை எண். | பெயர் | இடம் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| | **தலைவர் :** | | |
| 1. | திரு. கா. இராசா முகமது, பி.ஏ., பி.எல்., கிராமத் தொழில் மற்றும் வக்ஃபு அமைச்சர் | சென்னை-9 | 23118 |
| | **மாற்றுத் தலைவர் :** | | |
| 2. | திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ். | சென்னை-9 | 21517 |
| | **உறுப்பினர்கள் :** | | |
| 3. | மௌலவி ஹாபிஸ் ஹாஜி திரு. முகம்மது ஷபீக் கான் சாகிப் | சேலம் | — |
| 4. | திரு. ஹாஜி ஏ. முகம்மது உபைதுல்லா | சென்னை-1 | 26161 |
| 5. | திரு. ஹாஜி ஏ. ஏ. ரஷீத் | சென்னை-10 | 661737 |
| 6. | திரு. ஹாஜி நாகால் நஜீர் அஹமத் | சென்னை-3 | 33445 |
| 7. | டாக்டர் ஹாஜி சையத் அப்துல்காதர் | மேலப்பாளையம் | — |
| 8. | திரு. ஹாஜி டாக்டர் ஏ. ஏ. சத்தார் | மதுரை | 23422 |
| 9. | திரு. ஹாஜி எம். முகம்மது சலீம் | இராணிப்பேட்டை | — |
| 10. | திரு. மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஹ்மான் (பய்யாஸி) | பெரியகுளம் | — |
| 11. | திரு. முகம்மது யாகூப் மரைக்காயர் | மதுக்கூர் | — |
| | **செயலாளர் :** | | |
| 12. | திரு. மு. அகமது, ஐ.ஏ.எஸ். | சென்னை-9 | 29111-616<br>24706 |

# முக்கியமான தொலைபேசி எண்கள்

| வரிசை எண். | பெயர் / முகவரி | இடம் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1. | மு. அகமது, ஐ.ஏ.எஸ்., செயலாளர், ஹஜ் குழு | சென்னை-9 | 29111-616<br>24706 |
| 2. | சார்புச் செயளாளர், மற்றும் (ஹஜ்) பிரிவு 13 | சென்னை-9 | 29111-629 |
| 3. | சித்தீக் சராய் | சென்னை-3 | 31045 |
| 4. | தமிழ்நாடு பைத்துல் ஹாஜ்ஜாஜ் | பம்பாய்-3 | 330721 |
| 5. | சாபூ சித்தீக் முஸாபிர் கானா | பம்பாய்-1 | 261510 |
| 6. | பம்பாய் ஹஜ் குழு | பம்பாய்-1 | 262989 |
| 7. | தலைவர், பம்பாய் ஹஜ் குழு | பம்பாய்-1 | 268862 |
| 8. | முகல்லைன் கப்பல் நிறுவனம் (தலைமை அலுவலகம்) | பம்பாய்-1 | 256835 |
| 9. | முகல்லைன் (முஸாபிர்கானா கிளை) | பம்பாய்-1 | 261868 |
| 10. | இந்திய தூதரகம், ஷேக் முகம் மத் இப்ராஹீம் மகூத் கட்டிடம், பக்தாதியா அருகே, மதீனா சாலை, ஜித்தா | ஜித்தா | 21601<br>21602 |

# முகவுரை

தமிழ்நாடு ஹஜ் குழு 1974-லிருந்து ஆண்டுதோறும் ஹஜ் வழி காட்டி நூலை வெளியிட்டு வருகிறது; என்ற போதிலும் இப்போது வெளியிடப்படும் இந்த தமிழ் ஹஜ் வழிகாட்டி நூலானது அவற்றிலிருந்து முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டதாகும். பம்பாய் ஹஜ் குழு வெளி யிட்ட வழிகாட்டி நூலின் அடிப்படையில் முன்பு வெளியிட்ட தமிழ் ஹஜ் வழிகாட்டி நூல்கள் அமைந்திருந்தன. இந்த வழிகாட்டி நூலைப் பொறுத்த வரையில், பல்வேறு வகைப்பட்ட தகவல்களை சீராகத் தொகுக்க முயன்றுள்ளோம். அதுமட்டுமின்றி ஹஜ் புனிதப் பயணிகள் ஒரு குறிப்பிட்ட தகவலை அறிய முழு நூலையும் புரட்டுவதற்கு பதிலாக அட்டவணையின் உதவியுடன் குறிப்பிட்ட பகுதியினை எளிதாக இதில் பார்க்கலாம். இச்சிறு நூல் ஹாஜிகளுக்கு மிகவும் பயன்படும் என நம்புகிறோம்.

ஏராளமான கடிதங்கள் மூலமும், 1974-ம் ஆண்டிற்குப் பிறகு வெளியாகியுள்ள ஹஜ் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், பயணக் கட்டுரைகள் முதலியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்த்தும், தமிழக ஹஜ் பயணிகள் இக்குழு வெளியிட்ட வழிகாட்டி நூலினைப் படித்து பயன டைந்து வருகிறார்கள் என்பதை இக்குழு அறிந்து மகிழ்ச்சியடைகிறது. இந்த நூலில், மதிப்பிற்குரிய நமது ஹாஜிகளின் அனுபவங்கள், ஹஜ் குழுவின் மாண்புமிகு தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஆலோ சனைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான கருத்துக்களையும் இணைத் துள்ளோம். ஹஜ் சடங்குகள், 'உம்ரா' மற்றும் 'மதீனா பயணம்' பற்றியும் ஒரு முழு அத்தியாயத்தினையும் மேலும் பல அரபிச் சொற் களின் தமிழ் ஒலிவடிவத்தையும் இந்த நூலில் இணைத்திருக்கிறோம். ஹாஜிகளின் அனுபவங்களையொட்டி வழி முறைகள், தகவல்கள், உச்சரிப்புகள், சொற்களின் ஒலி வடிவம் முதலியவற்றுள் தவறு இருப்பின் அவற்றை சுட்டிக்காட்ட மதிப்பிற்குரிய ஹாஜிகளைக் கேட்டுக் கொள்கிறோம். அப்படிப்பட்ட ஆலோசனைகளை, "செய லாளர், தமிழ்நாடு ஹஜ் குழு, அறை எண் 1012, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009" என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

கடந்த ஆண்டு போலவே இந்த வழிகாட்டி நூலை அச்சிடுவதற்குத் தேவையான நிதி உதவியைப் பெற்றுத்தந்த தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர் திரு. ஹாஜி நாகால் நஜீர் அகமது அவர்களுக்கும், அதுபோலவே விளம்பரங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் இந்த வழி காட்டி நூலை இலவசமாக வெளியிட உறுதுணையாக இருந்த நிறு வனங்களுக்கும் இக்குழு நன்றியினைத் தெரிவிக்கிறது. அவ்வப்போது புதிய தகவல்களை நல்கியமைக்காக பம்பாய் ஹஜ் குழுவிற்கும், இந்த வழிகாட்டி நூல் சிறந்த முறையில் பயன்படும் வகையில் தயாரிக்கச் சில பார்வை நூல்களைத் தந்துதவியதற்கு பம்பாயிலுள்ள தமிழ்நாடு ஹஜ் ஸர்வீஸ் சொஸைட்டிக்கும் இக்குழு நன்றியினைத் தெரிவிக்கிறது. மற்றும், நல்ல முறையில் இவ்வழிகாட்டி நூல் வெளிவர உதவிய திரீயெம் அச்சகத்தார்களுக்கும், அச்சிடுதல் சம்பந்தப்பட்ட பணிகளை முறையுடன் செய்த தலைமைச் செயலகத்தின் ஹஜ் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கும் இக்குழு தமது நன்றியினைத் தெரிவிக்கிறது.

சென்னை-9
16-8-1979

**மு. அகமது,**
செயலர்,
*தமிழ்நாடு ஹஜ் குழு.*

# பொருளடக்கம்


பக்கம்

**I. ஹஜ் பற்றிய பொது விபரங்கள்**

ஹஜ் என்றால் என்ன? ... 1
ஹஜ்ஜின் தேதி ... 1
ஹஜ்ஜின் விண்ணப்பம் பற்றிய விபரங்கள் ... 1
இந்தியாவிலிருந்து ஹஜ்ஜிற்குச் செல்ல அனுமதிக்கப் பட்ட பயணிகளின் எண்ணிக்கை ... 2
மற்ற நாடுகளிலிருந்து ஹஜ்ஜிற்குச் செல்லும் புனிதப் பயணிகளின் எண்ணிக்கை விபரம் ... 3
கப்பல் மூலம் பயணத் திட்டம் ... 5

**II. பயணச் செலவுகள்**

கப்பலில் ஹஜ் பயணம் செய்ய கட்டணங்கள் ... 7
விமானம் மூலம் ஹஜ் பயணம் செய்ய கட்டணங்கள் ... 8
வெளிநாட்டில் செலவிற்கான அன்னியச் செலாவணி பற்றிய விபரம் ... 8
கப்பலில் சாமான்களை ஏற்றவும் கப்பலிலிருந்து சாமான்களை இறக்கவும் கூலிகளுக்கான கட்டணங்கள் ... 9
பம்பாயில் பணம் பாதுகாக்க ஏற்பாடுகள் ... 10
சவூதி அரேபியாவிலுள்ள குறிப்பிட்ட செலவுகள் ... 10

**III. ஹஜ் பயணிகள் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்கள்**

பெட்டி படுக்கைகள் ... 13
துணிகளும் மற்ற சாமான்களும் ... 14
உணவுப் பொருள்கள் ... 15

**IV. ஹஜ் பயணி எடுத்துச்செல்ல வேண்டிய சான்றுகள் / ஆதாரங்கள்**

மருத்துவச் சான்றிதழ்கள் ... 18
'B' படிவம், 'C' படிவம் ... 20
புகைப் படங்கள் ... 20
ஹஜ் பாஸ்போர்ட் ... 20
கூலி அட்டை ... 20
அடையாளக்குறி (பாட்ஜ்) (Badge) ... 21
பம்பாய் ஹஜ் குழுவிடமிருந்து ஆவணங்களைப் பெறும் முறை ... 21

**V. ஹஜ் பயணிகள் எடுத்துச் செல்லக் கூடாத (ஆகாத) பொருள்களும் நிபந்தனையுடன் கொண்டு போகக் கூடிய பொருள்களும்** ... 22

**VI. ஹாஜிகளுக்கு உதவி செய்ய ஏற்பாடுகள்**

தமிழ்நாடு ஹஜ் குழு ... 24
பம்பாய் ஹஜ் குழு ... 25
சாபூ சித்தீக் முஸாபிர்கானா, பம்பாய் ... 26
பம்பாயிலுள்ள தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ் ... 26
சென்னையிலுள்ள சித்தீக் சராய் ... 26
ஹாஜிகளின் நலனைக் கவனிக்கும் காதிமே ஹுஜ்ஜாஜ்கள் ... 27

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| பம்பாயிலுள்ள அங்கீகாரம் பெற்ற கௌரவ ஹஜ் நல அதிகாரிகள் | ... | 30 |
| அமீறுல் ஹஜ் | ... | 31 |
| **VII. பயணத்தின்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்** | | |
| உங்கள் சொந்த ஊரில் | ... | 32 |
| பம்பாய் மாநகரில் | ... | 33 |
| கப்பற் பயணம் துவங்கும் நாளில் | ... | 34 |
| பயணக் கப்பலில் | ... | 36 |
| மீகாதே ஹஜ்ஜில் | ... | 38 |
| விமானப் பயணிகளின் கவனத்திற்கு | ... | 38 |
| **VIII. சவூதி அரேபியாவில் தெரிய வேண்டிய விஷயங்கள்** | | |
| ''கஅபா'' | ... | 39 |
| ஜித்தாவிலுள்ள இந்திய தூதரகம் | ... | 39 |
| மருத்துவ ஏற்பாடுகள் | ... | 40 |
| மதீனத்துல் ஹுஜ்ஜாஜ் | ... | 41 |
| காதிமே ஹுஜ்ஜாஜ்கள் | ... | 41 |
| முஅல்லிம்கள் | ... | 41 |
| ஹிஜாஸில் உள்ளூர் நேரம் | ... | 42 |
| ஹோட்டல்கள் | ... | 42 |
| தபால் தந்தி வசதிகள் | ... | 42 |
| **IX. ஹிஜாஸில் பயண ஏற்பாடுகள்** | | |
| ஜித்தா துறைமுகத்தில் | ... | 43 |
| மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் | ... | 44 |
| வங்கி மூலம் பணம் பெறுதல் | ... | 45 |
| முஅல்லிம்களுக்கான கட்டணம் கொடுத்தல் | ... | 45 |
| ஜித்தாவிலிருந்து மக்காவிற்குச் செல்லல் | ... | 46 |
| மக்காவில் | ... | 46 |
| அரபாத்திலும் மினாவிலும் | ... | 46 |
| **X. புனித ஹஜ்** | | |
| தல்பியா | ... | 47 |
| உம்ராவின் விபரம் | ... | 47 |
| ஐந்து நாள் ஹஜ் | ... | 49 |
| மதீனாவுக்குப் பயணம் | ... | 53 |
| **XI. திரும்பி வருகை** | | |
| சாமான்களை இறக்குமதி செய்வது பற்றிய விபரங்கள் | ... | 55 |
| திரும்பி வரும் பயணத்திற்கான தொகுதித் திட்டம் | ... | 56 |
| பயணத்திற்கான ஏற்பாடுகள் | ... | 57 |
| பம்பாயிலிருந்து சொந்த ஊருக்கு பயணம் | ... | 57 |
| **இணைப்பு—I** | | |
| ஹிஜாஸில் பேசப்படும் மொழி | ... | 1 |
| **இணைப்பு—II** | | |
| நிய்யத்துகளும் துஆக்களும் | ... | 17 |

# ஹஜ் வழிகாட்டி 1979

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி எண் | தவறு | சரி |
|---|---|---|---|
| 1 | 6 | முஸ்தலிபா | முஜ்தலிஃபா |
| 1 | 21 | தொத்து | தொற்று |
| 2 | 7b | விண்ணப்ப தாரர்களுக்கு | விண்ணப்ப தாரர்களுக்கும் |
| 6 | 1b | IX | XI |
| 9 | 18 | வரைவோலை | வரைவோலை மூலம் |
| 9 | 24 | பாஸ்போர்ட்டைப் | பாஸ்போர்ட்டைத் |
| 9 | 25 | புனிதப்பயண அனுமதிச் சீட்டைத் | (விட்டுவிடவும்) |
| 11 | 10 | சாபு | சாபூ |
| 11 | 2b | செலவாணி | செலாவணி |
| 13 | 6b | பேரூந்து | பேருந்து |
| 21 | 4 | முஜ்தலிபா | முஜ்தலிஃபா |
| 22 | 21 | Non-Sterlised | Non-Sterilised |
| 22 | 10b | சர்க்கரை | சர்க்கரை, |
| 23 | 7 | பழங்கள் | பழங்கள், |
| 23 | 19 | துப்பரவு | துப்புரவு |
| 23 | 9b | அனுமதிப்பட மாட்டாது | அனுமதிக்கப்பட மாட்டாது |
| 24 | 23 | — | வரியின் முதலில் (v) சேர்க்கவும் |
| 30 | 1 | ஆலோசனங்கள் | ஆலோசனைகள் |
| 30 | 6 | அலுவலகளுக்கு | அலுவலர்களுக்கு |
| 31 | 8 | நண்பர் | நபர் |
| 31 | 10 | ஆர்வமுள்ள | ஆர்வமுமுள்ள |
| 34 | 23 | 'இஹ'ராம் | இஹ்ராம் |
| 38 | 9 | சியாரத் | ஜியாரத் |
| 41 | 11 | Consul | Vice Consul |
| 41 | 23 | அனுப்புகிறுர்கள் | அனுப்புகின்றன |
| 41 | 12b | வெளிட்டுள்ளது | வெளியிட்டுள்ளது. |
| 52 | 2 | ஆடு | (ஆடு |
| 52 | 3 | செய்தல் | செய்தல்) |
| 53 | 12 | ஹஜஜை | ஹஜ்ஜை |
| 53 | 21 | பயபக்தியுடன் | பயபக்தியுடனும் |
| 54 | 6 | மஸ்ஜிபி | மஸ்ஜித் |
| இணைப்பு 1 | 1 | சிறப்பு இணைப்பு I | இணைப்பு I |

(b கீழேயிருந்து வரி எண்)

# I. ஹஜ் பற்றிய பொது விபரங்கள்

## 1. ஹஜ் என்றால் என்ன?

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளிலொன்று ஹஜ்ஜு யாத்திரை யாகும். பண வசதியும், தேக சுகமும் உள்ள முஸ்லிம் ஒவ்வொருவரும், ஆயுளில் ஒரு முறையேனும், துல்ஹஜ் மாதம் 8-ம் நாள் முதல் 12-ம் நாள் வரை சவூதி அரேபியாவிலுள்ள மினா, அரபாத், முஸ்தலிபா ஆகிய இடங்களில் தங்கியிருந்து அந்நாட்களில் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றி மக்க மாநகரிலுள்ள திருக் 'கஅபாவை' தவாப் செய்வதற்கு ''ஹஜ்'' என்று பெயராகும்.

## 2. ஹஜ்ஜின் தேதி.

1979 அக்டோபர் 30-ந் தேதி இவ்வருடத்து ஹஜ்ஜின் முதல் தினமாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. கடைசி நாள் (5-ம் நாள்) நவம்பர் மாதம் 3-ம் தேதியாகும். இதையொட்டி நமது நாட்டில் நவம்பர் முதல் தேதி வியாழக்கிழமை பக்ரீத் எனும் ஈதுப் பண்டிகை கொண்டாடப்படும்.

## 3. ஹஜ்ஜின் விண்ணப்பம் பற்றிய விபரங்கள்

கீழ்க்கண்டவர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள இயலாதவரா வார்கள். ஆகவே இவர்கள் தவிர மற்ற எவரும் ஹஜ்ஜுக்கு விண்ணப் பிக்கலாம்.

1. கடந்த 5 வருடத்தில் ஹஜ்ஜுக்கு சென்றவர்கள்.

2. புத்தி சுவாதீனமில்லாதவர்கள், தீராத மற்றும் தொத்து வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள்.

3. கப்பலில் பயணம் புறப்படும்போது 20 வாரங்களுக்கு மேற் கொண்ட கர்பத்துடன் இருக்கும் பெண்கள்.

4. 2 முதல் 16 வயது வரை உள்ள சிறுவர்கள்.

5. சவூதி ரியால் 2000 (அதாவது ரூ. 4,860/)க்கு அன்னியச் செலாவணி கொண்டுபோக வசதியில்லாதவர்கள்.

ஹஜ்ஜின் தேதியிலிருந்து சுமார் 6 மாதங்களுக்குமுன் விண்ணப்பங் களை அனுப்பவேண்டும். ஹஜ் விண்ணப்ப படிவங்கள் இலவசமாக பம்பாய் ஹஜ் குழுவின் அலுவலகத்திலிருந்தும் மாநில ஹஜ் குழுவின் அலுவலகத்திலிருந்தும் கிடைக்கும். ஹஜ் குழுவின் விண்ணப்பப் படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் (அதாவது தகப்பனார், தாயார், மாமியார், சகோதரர்கள், மகன், திருமணமாகாத மகள், மருமகள், மருமகன், திருமணமாகாத அல்லது விதவை தங்கைகள்) விண்ணப்பங் களை ஒரே கவரில் சேர்த்து அனுப்பலாம். மற்றவர்களின் விண்ணப்பங் கள் ஒரே கவரில் இருந்தால், அதை தனியேதான் பதிவு செய்வார்கள். ஒரே கவரில் அதிகபட்சம் 5 விண்ணப்பங்களைத்தான் அனுப்பலாம்.

விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து குறிப்பிட்ட இணைப்புகளுடன் பதிவுத் தபாலில் ''ஹஜ் குழு, சாபூ சித்தீக் முஸா பிர்கானா, முதல்மாடி, லோக்மான்யதிலக் மார்க், பம்பாய்-400001'' என்ற விலாசத்திற்கு குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பவேண்டும்.

### 4. இந்தியாவிலிருந்து ஹஜ்ஜிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை.

#### (அ) கப்பல் மூலம்

பம்பாய் ஹஜ் குழு 1979-ல் 15,000 ஹஜ் பயணிகளை கப்பல்மூலம் அனுப்ப மொகல் லைன் கப்பல் நிறுவனத்துடன் கலந்து ஏற்பாடு செய்துள்ளது. ஆனால் அதற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படுவதால் மாநில வாரியான முஸ்லீம் மக்கள் தொகை, விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் குறா (சீட்டுக் குலுக்கல்) மூலம் பயணிகளுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது. இவ்வருடம் மாநில வாரியான ஹஜ் பயணிகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

| வரிசை எண் (1) | மாநிலத்தின் பெயர் (2) | விண்ணப்பங்களின் எண்ணிக்கை (3) | ஒதுக்கீடு (4) |
|---|---|---|---|
| 1. | அஸ்ஸாம்/மணிப்பூர் | 594 | 594 |
| 2. | ஆந்திர பிரதேசம் | 1,851 | 1,026 |
| 3. | உத்திர பிரதேசம் | 5,334 | 3,262 |
| 4. | ஒரிஸ்ஸா | 86 | 75 |
| 5. | கர்நாடகம் | 2,785 | 980 |
| 6. | குஜராத் | 1,244 | 613 |
| 7. | கேரளா/லட்ச தீவுகள் | 11,564 | 2,113* |
| 8. | ஜம்மு & காஷ்மீர் | — | 1,000 |
| 9. | தமிழ்நாடு/புதுச்சேரி | 1,796 | 761 |
| 10. | பீகார் | 969 | 969 |
| 11. | மத்திய பிரதேசம் | 501 | 423 |
| 12. | மஹாராஷ்டிரா | 2,602 | 1,199 |
| 13. | மேற்கு வங்காளம்/அந்தமான் தீவுகள் | 798 | 848 |
| 14. | ராஜஸ்தான் | 1,328 | 485 |
| 15. | ஹரியானா/தில்லி | 314 | 207 |
| 16. | மருத்துவர் குழுவிற்கான ஒதுக்கீடு மற்றும் இதர வகைகள் | — | 454 |
| | மொத்தம் ... | 31,766 | 15,009 |

* லட்சத்தீவுக்கான 50 இடங்களைச் சேர்த்து.

பம்பாய் ஹஜ் குழுவின் முடிவின்படி, 60 வயதிற்கு மேற்பட்ட எல்லா விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடன் பயணம் செய்ய விரும்பிய நெருங்கிய சொந்தக்காரர்களுக்கும் இவ்வருடம் நேரடியாக இடம் ஒதுக்கப்பட்டது. மீதியுள்ள காலியிடங்களில் 75 சதவீதம், 40 முதல் 60 வரை வயதுள்ளவர்களுக்கும், 25 சதவீதம், 17 முதல் 40 வரை வயதுள்ளவர்களுக்கும் ஒதுக்கப்பட்டன. இதைத் தவிர மொத்த ஒதுக்கீட்டின் 10 சதவீதம் காத்திருப்போர் பட்டியலில் (Waiting List) வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலிருந்து கப்பல்மூலம் ஹஜ்ஜிற்குச் செல்ல கடந்த சில வருடங்களில் ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :

| வருடம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1975 | 917 | 433 |
| 1976 | 528 | 363 |
| 1977 | 1347 | 796 |
| 1978 | 1010 | 647 |
| 1979 | 1796 | 761 |

**(ஆ) விமானம் மூலம்**

1979-ல் ஹஜ் செய்வதற்காக விமானம் மூலம் செல்ல 6,000 புனிதப் பயணிகளுக்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**5. மற்ற நாடுகளிலிருந்து ஹஜ்ஜிற்குச் செல்லும் புனிதப் பயணிகளின் எண்ணிக்கை விபரம்.**

| நாடுகள் | | 1978-ல் சென்ற புனிதப் பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **(அ) அரேபியா நாடுகள்** | | |
| 1. | அல்ஜீரியா | 29899 |
| 2. | ஈராக் | 68650 |
| 3. | எகிப்து | 41828 |
| 4. | ஓமன் | 3944 |
| 5. | கத்தர் | 1182 |
| 6. | குவெய்த் | 5918 |
| 7. | சிரியா | 56138 |
| 8. | சூடான் | 17408 |
| 9. | சொமாலியா | 5419 |
| 10. | ஜிபோதீ | 511 |
| 11. | ஜோர்டான் | 31811 |
| 12. | டுனிசியா | 8971 |
| 13. | தென் ஏமன் | 7721 |
| 14. | பலஸ்தீன் | 1992 |
| 15. | பஹரீன் | 2217 |
| 16. | மொரெடானியா | 572 |
| 17. | மொரோக்கோ | 26166 |
| 18. | யுனைடெட் அரபு எமிரேட்ஸ் | 5183 |
| 19. | லிபியா | 32915 |
| 20. | லெபனன் | 6648 |
| 21. | வடக்கு ஏமன் | 1,23825 |
| | மொத்தம் | 478918 |

## (ஆ) ஆசிய நாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | ஆப்கானிஸ்தான் | 8241 |
| 2. | இந்தியா | 20233 |
| 3. | இந்தோனேஷியா | 72527 |
| 4. | இலங்கை | 976 |
| 5. | ஈரான் | 48268 |
| 6. | சிங்கப்பூர் | 1175 |
| 7. | சீனு | 30 |
| 8. | ஜப்பான் | 24 |
| 9. | தாய்லாந்து | 421 |
| 10. | துருக்கி | 29969 |
| 11. | நேபாளம் | 26 |
| 12. | பர்மா | 8 |
| 13. | பாகிஸ்தான் | 61924 |
| 14. | பிலிப்பைன்ஸ் | 997 |
| 15. | புருநி | 420 |
| 16. | மலேசியா | 6756 |
| 17. | மால தீவுகள் | 22 |
| 18. | ரஷியா | 25 |
| 19. | வங்காள தேசம் | 7990 |
| 20. | பிற நாடுகள் | 34 |
| | மொத்தம் | 260066 |

## (இ) ஆப்ரிகா நாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | உகாண்டா | 2889 |
| 2. | எத்தியோப்பியா | 346 |
| 3. | ஐவரி கோஸ்ட் | 1268 |
| 4. | கானா | 1228 |
| 5. | கினியா | 2098 |
| 6. | கென்யா | 747 |
| 7. | கேமரூன் | 1414 |
| 8. | கேம்பியா | 466 |
| 9. | கோங்கோ | 25 |
| 10. | கோமொரோஸ் தீவு | 76 |
| 11. | சாட் | 3259 |
| 12. | சீர்ரா லியோன் | 191 |
| 13. | செனகல் | 3939 |
| 14. | ஜைர் | 168 |
| 15. | டன்சாணியா | 800 |
| 16. | டஹோமி (பெனின்) | 550 |
| 17. | டோகோ | 417 |
| 18. | தென் ஆப்ரிகா | 596 |
| 19. | நைஜர் | 4501 |
| 20. | நைஜீரியா | 56842 |

| | | |
|---|---|---|
| 21. | பிஜி | 42 |
| 22. | மத்திய ஆப்ரிகா | 437 |
| 23. | மலாகஸி | 12 |
| 24. | மாலி | 2765 |
| 25. | மேல் வோல்டா | 1588 |
| 26. | மொரீஸியஸ் | 456 |
| 27. | லிபீரியா | 7 |
| 28. | பிற நாடுகள் | 39 |
| | மொத்தம் | 87166 |

(ஈ) மற்ற நாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | அமெரிக்க நாடுகள் | 388 |
| 2. | ஆஸ்திரேலியா | 29 |
| 3. | இங்கிலாந்து | 1652 |
| 4. | கானடா | 52 |
| 5. | கிரீஸ் | 314 |
| 6. | ஜெர்மனி | 8 |
| 7. | திரினிதாத் | 69 |
| 8. | பிரான்ஸ் | 492 |
| 9. | யுகோஸ்லேவியா | 953 |
| 10. | ருமானியா | 15 |
| 11. | ஹாலந்து | 49 |
| 12. | பிற நாடுகள் | 65 |
| | மொத்தம் | 4086 |
| | ஆக மொத்தம் | 830236. |

## 6. கப்பல் மூலம் பயணத் திட்டம்.

1979 ஹஜ்ஜிற்கு கப்பல் வழி பயணத் திட்டம் பின்வருமாறு:

(அ) பம்பாயிலிருந்து ஜித்தா பயணம்

| வரிசை எண் | கப்பலின் பெயர் | பம்பாயிலிருந்து ஜித்தாவிற்குப் புறப்படும் நாள் | ஜித்தாவிற்குப் போய்ச் சேரும் நாள் |
|---|---|---|---|
| ரமலானுக்கு முன்பு | | | |
| 1. | நூர்ஜஹான் | 10-7-79 (செவ்வாய்) | 19-7-79 (வியாழன்) |
| 2. | அக்பர் | 14-7-79 (சனி) | 23-7-79 (திங்கள்) |
| ரமலான் மாதத்தில் | | | |
| 3. | நூர்ஜஹான் | 31-7-79 (செவ்வாய்) | 9-8-79 (வியாழன்) |
| ரமலானுககுப் பிறகு | | | |
| 4. | அக்பர் | 30-8-79 (வியாழன்) | 8-9-79 (சனி) |
| 5. | நூர்ஜஹான் | 8-9-79 (சனி) | 15-9-79 (சனி) |
| 6. | அக்பர் | 19-9-79 (புதன்) | 27-9-79 (வியாழன்) |
| 7. | நூர்ஜஹான் | 25-9-79 (செவ்வாய்) | 2-10-79 (செவ்வாய்) |
| 8. | அக்பர் | 8-10-79 (திங்கள்) | 16-10-79 (செவ்வாய்) |
| 9. | நூர்ஜஹான் | 12-10-79 (வெள்ளி) | 20-10-79 (சனி) |

## (ஆ) ஜித்தாவிலிருந்து பம்பாய் பயணம்

| வரிசை எண் | கப்பலின் பெயர் | ஜித்தாவிலிருந்து பம்பாய்க்குப் புறப்படும் நாள் | பம்பாய்க்குப் போய்ச் சேரும் நாள் |
|---|---|---|---|
| 1. | நூர்ஜஹான் | 8-11-79 (வியாழன்) | 15-11-79 (வியாழன்) |
| 2. | அக்பர் | 10-11-79 (சனி) | 18-11-79 (ஞாயிறு) |
| 3. | நூர்ஜஹான் | 25-11-79 (ஞாயிறு) | 2-12.79 (ஞாயிறு) |
| 4. | அக்பர் | 28-11-79 (புதன்) | 7-12-79 (வெள்ளி) |
| 5. | நூர்ஜஹான் | 12-12-79 (புதன்) | 19-12-79 (புதன்) |
| 6. | அக்பர் | 17-12-79 (திங்கள்) | 26-12-79 (புதன்) |
| 7. | நூர்ஜஹான் | 29-12-79 (சனி) | 5-1-80 (சனி) |
| 8. | அக்பர் | 5-1-80 (சனி) | 12-1-80 (சனி) |
| 9. | நூர்ஜஹான் | 16-1-80 (புதன்) | 23-1.80 (புதன்) |

*குறிப்பு:* திரும்பி வரும் பயணத்திற்கான தொகுதித் திட்டம் பற்றிய விபரங்களை அத்தியாயம் IXல் காணலாம்.

## II பயணச் செலவுகள்

### 1. கப்பலில் ஹஜ் பயணம் செய்ய கட்டணங்கள் :

பம்பாயிலிருந்து ஜித்தாவிற்குச் சென்று திரும்பி வருவதற்கான பயணச் சீட்டுகள் (Return Tickets) மட்டுமே ஹாஜிகளுக்கு வழங்கப் படும். பயணக் கட்டணங்கள் பின்வருமாறு :

பம்பாய் — ஜித்தா — பம்பாய்

| வரிசை எண் | வகுப்பு | பயணக் கட்டணம் (உணவுடன்) | பம்பாய் துறைமுக கட்டணம் | பாஸ் போர்ட் பதிவு கட்டணம் | ஹஜ் கட்டிட நிதி | மொத்தம் * |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | முதல் வகுப்பு: பெரியவர்கள் | 4050.00 | 20.00 | 50.00 | 100.00 | 4223.00 |
| | குழந்தைகள் (1-2 வயது) | 1012.50 | 20.00 | 50.00 | — | 1082.50 |
| 2. | பங்க் (Bunk) வகுப்பு : பெரியவர்கள் | 2100.00 | 10.00 | 50.00 | 50.00 | 2213.00 |
| | குழந்தைகள் (1-2 வயது) | 525.00 | 10.00 | 50.00 | — | 585.00 |
| | ஒரு வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகள் | — | 10.00 | 50.00 | — | 60.00 |

**வெளிநாட்டுப் பயண வரி :**

முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும் பயணிகளிடமிருந்து வெளி நாட்டுப் பயண வரியாக கூடுதலாக ரூ. 100 வசூலிக்கப்படும்.

**தனி வசதிகளுக்கு வசூலிக்கப்படும் கூடுதல் கட்டண விபரம் :**

(a) குளியலறை இணைக்கப்பட்ட முதல் வகுப்பு அக்பர்/நூர்ஜஹான் ரூ. 112—50

(b) முதல் வகுப்பு தனி அறை (நூர்ஜஹானில் மட்டும்) ரூ. 225—00

(c) டார்மிட்டரி வகுப்பு (நூர்ஜஹானில் மட்டும்) ரூ. 200—00

(d) குளிர் சாதன வசதியுடன் கூடிய பங்க் (Bunk) வகுப்பு (நூர்ஜஹானில் மட்டும்) ரூ. 50—00

* துறைமுகத்தில் வழங்கப்படும் உணவுப் பொட்டலத்திற்கு பெரியவர்களிடம் வசூலிக்கப் படும் ரூ. 3 உட்பட்டது.

**2. விமானம் மூலம் ஹஜ் பயணம் செய்ய கட்டணங்கள் :**

பம்பாயிலிருந்து ஜித்தா சென்று திரும்பி வருவதற்கான விமானக் கட்டணம் ரூ. 4830 ஆகும். இதில் பாஸ்போர்ட் கட்டணமான ரூ. 50-ம், வெளிநாட்டுப் பயண வரியான ரூ. 100-ம், ஹஜ் கட்டிட நிதிக்காக ரூ. 100-ம் அடங்கியுள்ளது.

**3. வெளிநாட்டில் செலவிற்கான அன்னியச் செலாவணி பற்றிய விபரம் :**

சவூதி அரேபியாவில் செலவிடுவதற்கு அந்நாட்டு நாணயமாகிய ரியால்கள் தேவையாகும். தற்போதைய நாணய மாற்று விகிதப் (Rate) படி ஒரு ரியால் ரூ. 2-43-க்குச் சமமாகும். இந்த விகிதம் அவ்வப்போது மாறக் கூடும்.

சவூதி அரேபியாவில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள காரணத்தால், இந்திய அரசு, 1979-ம் ஆண்டு ஹஜ்ஜிற்குச் செல்லும் புனிதப் பயணிகளுக்கு கீழ்க்கண்ட தாராள அடிப்படையில் அன்னியச் செலாவணி வழங்க முடிவு செய்துள்ளது :

| தொடர் எண் | பயணிகள் வகை | நபர் ஒருவருக்கான ஏறிய அளவு அன்னியச் செலாவணித் தொகை (சவூதி ரியாலில்) |
|---|---|---|
| (அ) | கப்பல் வழியாகச் சென்று சவூதி அரேபியாவில் 106 முதல் 120 நாட்கள் வரையில் தங்கும் பயணிகள் | 3,230 |
| (ஆ) | கப்பல் வழியாகச் சென்று சவூதி அரேபியாவில் 91 முதல் 105 நாட்கள் வரையில் தங்கும் பயணிகள் | 3,110 |
| (இ) | விமானம் மூலம் சென்று சவூதி அரேபியாவில் 45 நாட்களுக்கு மேற்படாமல் தங்கும் பயணிகள் | 2,630 |

ஹஜ் விசா (Visa) பெறுவதற்கு குறைந்தது 2,000 சவூதி ரியாலாவது எடுத்துச் செல்ல வேண்டும். இது 4,860 இந்திய ரூபாய்க்குச் சமமாகும்.

நீங்கள் எடுத்துச்செல்ல உத்தேசிக்கும் அன்னியச் செலாவணி, கீழே குறிப்பிட்ட ஏதாவது அளவுக்குச் சமமாக இருக்க வேண்டும்.

**(அ) ரமலானுக்கு முன்னதாகவும் ரமலானின்போதும் செல்பவர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| சவூதிரியால்கள் | 2,000 | ரூ. 4,860-00-க்குச் | சமம் |
| ,, | 2,500 | ரூ. 6,075-00 | ,, |
| ,, | 3,000 | ரூ. 7,290-00 | ,, |
| ,, | 3,230 | ரூ. 7,848-90 | ,, |

**(ஆ) ரமலானுக்குப்பின் செல்பவர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| சவூதி ரியால்கள் | 2,000 | ரூ. 4,860-00-க்குச் சமம் | |
| ,, | 2,500 | ரூ. 6,075-00 | ,, |
| ,, | 3,000 | ரூ. 7,290-00 | ,, |
| ,, | 3,110 | ரூ. 7,557-30 | ,, |

**(இ) விமானம் மூலம் பயணம் செய்பவர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| சவூதி ரியால்கள் | 2,000 | ரூ. 4,860-00க்குச் சமம் | |
| ,, | 2,500 | ரூ. 6,075-00 | ,, |
| ,, | 2,630 | ரூ. 6,390-90 | ,, |

விமானம் மூலம் பயணம் செய்ய 4,425 புனிதப் பயணிகளுக்குத்தான் அன்னியச் செலாவணி வழங்கப்படும். தேவையான அன்னியச் செலாவணித் தொகையை (குறைந்தது 2000 சவூதி ரியால்கள்) பயணியின் சொந்தக்காரர்கள் வெளிநாட்டிலிருந்து டிராப்டு மூலம் அனுப்புவதின் பேரில், இன்னும் 1000 புனிதப் பயணிகளுக்குக்கூட விமானத்தில் பயணம் செய்ய அனுமதி கிடைக்கும்.

இடம் ஒதுக்கீடு பற்றிய உறுதியான தகவல் கிடைத்ததும் அன்னியச் செலாவணிக்கான ரூபாயை பயணிகள் பம்பாய் ஹஜ் குழுவின் பெயருக்கு ஒரு வரைவோலை (Demand Draft) பயணத் தேதிக்கு 20 நாள் முன்னதாக பம்பாய் ஹஜ் குழுவிற்கு அனுப்பவேண்டும். அத்துடன், தனியாக ஒரு தாளில் மூன்று மாதிரிக் கையொப்பங்கள் அல்லது பெருவிரல் ரேகைகளும் அனுப்பி வைக்கவேண்டும். அவ்வாறு வரைவோலை கிடைப்பதன் பேரில், அன்னியச் செலாவணிக்கான மெயில் டிரான்ஸ்பர் (Mail Transfer) தயாரித்து வைக்கப்படும். பம்பாய் ஹஜ் குழு அலுவலகம், பயணிகளுக்கான ஹஜ் பாஸ்போர்ட்டைப் புனிதப்பயண அனுமதிச் சீட்டைத் தயாரிக்கவும் அன்னியச் செலாவணிக்கான மெயில் டிரான்ஸ்பர்களின் அடிப்படையில் அவர்களுக்கு சவூதி தூதுவர் அலுவலகத்திலிருந்து, ஹஜ் விசாவை பெறவும் இது ஏதுவாகும். வரைவோலை கிடைத்த பிறகு மேற்சொன்ன பணிகளைச் செய்ய சுமார் 20 நாட்களாவதால் பயணத் தேதிக்கு 20 நாட்கள் முன்னதாகவே வரைவோலையை பம்பாய் ஹஜ் குழுவிற்கு அனுப்ப வேண்டும். இல்லாவிடில் சிரமங்கள் ஏற்படலாம்.

மேற்கூறிய அன்னியச் செலாவணியைத் தவிர, கப்பலில் ஏற்படக் கூடிய செலவிற்காக ஒவ்வொரு பயணிக்கும் 24 அமெரிக்க டாலர்கள் அன்னியச் செலாவணியாக துறைமுகத்தில் வைத்து வழங்கப்படும். இதற்காக சுமார் 200 ரூ. செலுத்த வேண்டும். பம்பாய் துறைமுகத்தில் இயங்குகின்ற பாரத ஸ்டேட் வங்கியில் ரூபாயைச் செலுத்திவிட்டு டாலர்களைப் பெறலாம்.

### 4. *கப்பலில் சாமான்களை ஏற்றவும் கப்பலிலிருந்து சாமான்களை இறக்கவும் கூலிகளுக்கான கட்டணங்கள் :*

நீங்கள் கொண்டு செல்லும் பயணச் சாமான்களை கப்பலில் ஏற்றவும் கப்பலிலிருந்து இறக்கவும் கூலிகள் உதவுவார்கள். அதற்காக

ஒவ்வொரு பயணியும் போகும்போதும் திரும்பி வரும்போதும் பம்பாயில் கூலிக் கட்டணமாக ரூ. 50/- வீதம் வழங்கவேண்டும். இதை கட்டாய மாக கட்டிவிட வேண்டும். உங்களின் பயணப் பொருள்கள் எவ்வளவு இருந்தாலும் கட்டணம் இதுவே. ஜித்தாவில் கொடுக்கவேண்டிய கூலிக் கட்டணம் அங்கு தனியாக பெறப்படும். ஆனால், அதிக பளுவான பெட்டி களை நீங்கள் கொண்டுபோனால் ஜித்தாவிலுள்ள கூலிகள் அவற்றை தூக்குவதற்கு மிக அதிகமான கூலி வாங்குவார்கள் என்பது எடுத்துக் கூறத்தக்கது.

### *5. பம்பாயில் பணம் பாதுகாக்க ஏற்பாடுகள்*

பம்பாயிலுள்ள சாபு சித்தீக் முஸாபிர்கானாவில் இயங்குகின்ற பம்பாய் மெர்கன்டைல் கோவாபரேடிவ் பாங்கில் (கூட்டுறவு வங்கி) உங்களிடமுள்ள பணத்தை பாதுகாப்பிற்காக ஒப்படைக்கலாம். நீங்கள் சாபூ சித்தீக் முஸாபிர்கானாவை அடையும்போது அவ்வங்கி திறந்திருந் தால் உங்களிடமுள்ள பணத்தை அவ்வங்கியில் செலுத்திவிட வேண்டும். அவ்வங்கி இலவசமாக உங்கள் பணத்தைப் பாதுகாக்கும். உங்களுக்குத் தேவையான பணத்தை அவ்வப்போது வங்கியிலிருந்து திரும்பப் பெற லாம். விலை அதிகமான சிறு பொருள்கள், நகைகள் ஆகியவற்றை பாதுகாக்க அவ்வங்கியில் பாதுகாப்புப் பெட்டகங்களுமுள்ளன. அப்பெட்டகமொன்றுக்கு ஆண்டொன்றுக்கு 12 ரூபாய் வாடகையாகும். பெட்டகத்தில் நீங்களே பணத்தைப் பாதுகாத்து வைப்பதிலும் ஆட்சேபணை இல்லை.

### 6. சவூதி அரேபியாவிலுள்ள குறிப்பிட்ட செலவுகள் :

சவூதி அரேபியாவில் செலவிடுவதற்காக வழங்கப்படும் அன்னியச் செலாவணியைப்பற்றி அறிந்தீர்கள். அந்நாட்டில் ஏற்படும் குறிப்பிட்ட செலவுகளின் விபரம் கீழே தரப்படுகிறது :

### (அ) முஅல்லிமின் கட்டணங்கள் :

முஅல்லிமின் கட்டணங்கள் பின்வருமாறு. இவற்றை முஅல்லிமின் வக்கீலின் அலுவலகம் வசூலிக்கும். இக்கட்டணங்கள் கட்டாயமானவை.

| | | சவூதி ரியால்கள் |
|---|---|---|
| (i) | முஅல்லிமின் கட்டணம் | 294 00 |
| (ii) | மதீனத்துல் ஹுஜ்ஜாஜிற்கான வாடகை | 80 00 |
| (iii) | மக்கா, மதீனா, மினா, அரபாத், ஜித்தா, ஆகிய இடங்களுக்குப்போய் வர போக்கு வரத்துக் கட்டணம் | 295 00 |
| | மொத்தம் | 669 00 |

**(ஆ) மக்காவிலும், மதீனாவிலும் தங்குவதற்கான செலவுகள் :**

மக்காவிலும், மதீனாவிலும் தங்குவதற்கான ஏற்பாடுகளை புனிதப் பயணிகளே செய்து கொள்ளவேண்டும். இதை முஅல்லிம் மூலமாகவோ, தகுந்த வாடகைக்கு இடம் கிடைத்தால் நேரடியாகவோ செய்யலாம். வாடகைக்கான தொகையை அன்னியச் செலாவணியிலிருந்து கொடுக்க வேண்டும். முஅல்லிம் மூலம் ஏற்பாடு செய்தால் ஆகக் கூடிய செலவு பின்வருமாறு :

| | | சவூதி ரியால்கள் | |
|---|---|---|---|
| (i) | மக்காவில் வீட்டு வாடகையும் மினாவில் கூடாரத்திற்கான வாடகையும் | 400 | 00 |
| (ii) | மதீனாவில் வீட்டு வாடகை | 150 | 00 |
| | மொத்தம் | 550 | 00 |

**(இ) மொத்தச் செலவுகள் :**

ஒவ்வொரு பயணியும், சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும்போது குறைந்தது கீழ்க்கண்ட தொகையினைச் செலவிட நேரிடும்.

| | | சவூதி ரியால்கள் | |
|---|---|---|---|
| 1. | முஅல்லிமின் கட்டணம் | 294 | 00 |
| 2. | மதீனத்துல் ஹுஜ்ஜாஜிற்கான வாடகை | 80 | 00 |
| 3. | மக்கா, மதீனா, மினா, அரபாத், ஜித்தா ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துக் கட்டணம் | 295 | 00 |
| 4. | வீட்டு வாடகை | 550 | 00 |
| 5. | சொந்தச் செலவுகள் (உணவு வகைகளுக்காக) | 450 | 00 |
| 6. | குர்பானி | 400 | 00 |
| 7. | மற்ற செலவுகள் | 200 | 00 |
| | மொத்தம் ஒரு ஹாஜிக்குச் செலவு | 2269 | 00 |

அன்னியச் செலாவணியாக குறைந்தது 2000 ரியால்கள் இருந்தால் போதுமென்றிருந்தாலும், சுமார் 2500 ரியால்களாவது அன்னியச் செலாவணியாக எடுத்துச் செல்லாவிட்டால் கஷ்டங்கள் ஏற்படலாம்.

*குறிப்பு :* (i) முஅல்லிமின் கட்டணமான 294 ரியால்களும், மதீனத்துல் ஹுஜ்ஜாஜிற்கான வாடகை 80 ரியால்களும் சேர்த்து, மொத்தம் 374 சவூதி ரியால்களுக்கான காசோலை யொன்றினை (செக்) ஒவ்வொரு பயணியும் "மக்தபல் வுகாலா அல் மவாஹித், ஜித்தா" என்ற பெயரில் வரைந்து கொண்டு செல்ல வேண்டியதால், அத் தொகையை அன்னியச் செலவாணியிலிருந்து பிடித்தம் செய்து, ஒவ்வொரு கப்பலில் அல்லது விமானத்தில்

பயணம் செய்பவர்களுக்கு மொத்தமாக காசோலைகள் மூலம் ஜித்தாவிலுள்ள நமது தூதரகம் வழியாக அனுப்பி வைக்க பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடுகள் செய்கிறது.

**(ii)** போக்குவரத்துக் கட்டணமான 295 சவூதி ரியால்களில் 22-50 ரியால்கள் ஜித்தாவிலிருந்து மக்காவிற்குச் செல்வதற்கான கட்டணமாகும். இதையும் ஒவ்வொரு பயணியிடமிருந்தும் பம்பாய் ஹஜ் குழு பிடித்தம் செய்து மொத்தமாக அனுப்பி வைக்கும். ஆகையால் போக்குவரத்துக் கட்டணமாக மீதித் தொகையை சவூதி அரேபியாவில் செலுத்தினால் போதும்.

**(iii)** சவூதி அரேபிய அரசின் நிபந்தனைகளின்படி பயணிகள் கொண்டு செல்லும் டிராப்டுகளைப் பார்வையிடும் உரிமை அந்த அரசின் அலுவலர்களுக்குண்டு. சவூதி அரேபிய அரசின் அலுவலர்கள் பார்வைக்காக கேட்கும்போது, பம்பாயிலிருந்து நீங்கள் பெற்ற டிராப்டுகளைக் காட்ட வேண்டும்.

# III ஹஜ் பயணிகள் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்கள்

ஹஜ் புனிதப் பயணிகள் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. ஆனால், சவூதி அரேபிய அரசின் விதிப்படி நீங்கள் கொண்டு செல்லும் பொருள்களின் மொத்த எடை 100 கிலோ கிராமுக்குட்பட்டிருக்க வேண்டும். இதற்குமேல் அனுமதிக்கப்பட மாட்டாது.

## *1. பெட்டி படுக்கைகள் :*

மூன்று-நான்கு மாதங்களை வெளிநாட்டில் கழிக்க வேண்டியதால் அதற்குத் தேவையான சாமான்களை எடுத்துச் செல்லவேண்டும். ஆனால் அவசியம் தேவையில்லாத சாமான்களையும், ஏராளமான சாமான் களையும் கொண்டு செல்ல வேண்டாம். ஏனென்றால் பல சமயம் சாமான் களின் விலையைவிட கூலி அதிகமாவதுடன் இட நெருக்கடி போன்ற பல தொல்லைகளும் ஏற்படும். பொருள்கள் அனைத்தும் கீழ்க்கண்ட அளவில் உள்ள தரமான பைகள் அல்லது பெட்டிகளில் வைத்து சுற்றிலும் கயிறினால் சரியாக கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(அ) துணிகளை வைத்துக் கொள்வதற்கு மிகப் பெரிய அளவில் $75 \times 45 \times 30$ செ. மீ. (சுமார் $2\frac{1}{2}$ அடி $\times 1\frac{1}{2}$ அடி $\times 1$ அடி) அளவுடைய பெட்டி ஒன்று. இதனைத் தூங்கும் அறையில் வைத்துக் கொள்ளலாம்.

(ஆ) படுக்கைக்கட்டு ஒன்று, அல்லது உணவுப் பொருள்களும் ஏனைய அன்றாடத் தேவைப் பொருள்களும் வைத்துக் கொள்வதற்கான ஒரு சிறு கைப்பை. இதனையும் தூங்கும் அறையில் வைத்துக் கொள்ளலாம்.

(இ) சமையல் பாத்திரங்கள், மசாலாப் பொருள்கள் முதலியவை வைத்துக் கொள்வதற்கு $75 \times 45 \times 30$ செ. மீ. (சுமார் $2\frac{1}{2}$ அடி $\times 1\frac{1}{2}$ அடி $\times 1$ அடி) அளவுள்ள பெரிய பெட்டி அல்லது கூடை ஒன்று. இதனைப் பொருள்கள் வைக்கும் அறையில் வைத்துக் கொள்ளலாம்.

சவூதி அரேபிய அரசின் ஆணைப்படி நபரொன்றுக்கு துணிகள் வைக்கும் பெட்டி ஒன்று, படுக்கைக் கட்டு ஒன்று, பாத்திரங்கள் வைக்கும் பெட்டி அல்லது சாக்குக் கட்டு ஒன்று மட்டுமே இலவசமாக பேருந்து களில் ஜித்தாவிலிருந்து மக்காவிற்கு எடுத்துச் செல்லப்படும்.

ஒரு சிறிய படுக்கை, படுக்கைக்கான இரண்டு விரிப்புகள், தலையணை ஆகியவற்றையும் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டும். இவற்றை துணிகளை வைப்பதற்கான பெட்டியில் வைக்கவும்; அல்லது இன்னும் வசதியாக படுக்கைக் கட்டில் (holdall) வைக்கவும்.

## 2. துணிகளும் மற்ற சாமான்களும் :

**(அ) துணிமணிகள் :**

(1) குறைந்தது நான்கு ஜதை துணிகள்

(2) மதீனாவில் முதல் நாள் அணிந்து செல்ல புதிய ஒரு ஜதை துணி

(3) தேவையான கம்பளி ஆடைகள் அல்லது செட்டர்

(4) 4 மீட்டர் இஹ்ராம் துணி

(5) கபன் துணி

(6) லுங்கிகள் (2)

(7) துண்டுகள் (2)

(8) மப்ளர் (1)

(9) கொசுவலை

ஆகியவற்றை புனிதப் பயணிகள் எடுத்துச் செல்லவேண்டும். இவற்றில் இஹ்ராம் துணிகளையும் கபன் துணியையும் விற்க பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடு செய்கிறது.

**(ஆ) மற்ற சாமான்கள் :**

*கீழே குறிப்பிட்ட இதர சாமான்களையும் எடுத்துச் செல்வது நன்று.*

(1) 3, 4 பேர் அரிசி சமையல் செய்யும் அளவுக்கு அலுமினிய சட்டி (1), அதற்குள் அடங்கக்கூடிய சட்டிகள் (2), மூடிகளுடன்

(2) சாப்பாடு சாப்பிடும் தட்டுகள் (2)

(3) சிறிய பலகாரத் தட்டுகள் (2)

(4) குழம்புக் கொட்ராக்கள் (2)

(5) பிளாஸ்டிக் தண்ணீர் குவளை (1)

(6) 10 லிட்டர் பிளாஸ்டிக் பக்கெட்டு (1)

(7) தண்ணீர் குடிக்க டம்ளர் (2)

(8) பிளாஸ்க் (1)

(9) இடைத்தரம் மண்ணெண்ணெய் ஸ்டவ் திரியுடன் (1)

(10) குழி உள்ள வாணலி (1)

(11) ரொட்டி சுட சட்டி (1)

(12) கரண்டிகள் (3)

(13) சோப்பு, சலவைக்கான சோப்பு அல்லது சோப்புத்தூள்

(14) சிறு கத்தி (1)

(15) டார்ச்சு விளக்கு (1) பேட்டரியுடன்

(16) முகம் பார்க்கும் கண்ணாடி, கத்திரி, ஊசி, நூல்

(17) ரப்பர் செருப்பு 3 ஜோடி. தொழுகை வேளையில் செருப்பை பக்கத்தில் வைத்துக் கொள்ள ஒரு துணிப் பை

(18) பல்பொடி அல்லது பேஸ்ட், பிரஷ்

(19) ஷேவிங் செட்டு

(20) உம்ராவின்போது பணம், புத்தகம் வைத்துக்கொள்ள சிறிய பள்ளிக்கூடப் பை

(21) தீப்பெட்டி

(22) தேவையான மருந்துகள்

மேற்கூறிய சாமான்களை மக்கமாநகரிலும் வாங்கலாம். ஆனால் விலை அதிகமாக இருக்கக்கூடும். ஒரு வேளை சமையல் பொருள்களை வாங்க வேண்டுமானால் மக்கமாநகரில் ஹஜ் நாள் ஆரம்பமாவதற்கு ஒரு வாரம் முன்பாகவே தேவையான சாமான்களை வாங்கிவிட வேண்டும். ஏனென்றால், ஹஜ் நாள் நெருங்க நெருங்க கூட்டமும் மிகுதியாகும்; விலையும் ஏறும்.

### 3. உணவுப் பொருள்கள் :

சவூதி அரேபியாவில் புனிதப் பயணிகள் பயன்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு அரிசி, கோதுமை, மற்றும் சர்க்கரை வழங்க பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடுகள் செய்கிறது. புனிதப் பயணிகளுக்குக் கீழே விவரித்தாறு குறிப்பிட்ட அளவு உணவுப் பொருள்கள் வழங்கப் படுகின்றன.

### (1) அரிசி / கோதுமை :

(அ) கப்பற் பயணத்தின்போது கப்பலில் சமைத்து வழங்குவதற்காக பயணி ஒருவருக்கு தினசரி 400 கிராம் என்ற அடிப்படையில் ' மொகல்லைன் ' கப்பல் நிறுவனத்திற்கு உணவு தானியங்கள் வழங்கப் படுகின்றன. கப்பலில் சென்று வர 30 நாட்களாகும் என்ற கணக்கில் பயணி ஒருவருக்கு 12 கிலோ கிராம் உணவு தானியங்கள் கிடைக்கும்.

(ஆ) ஹிஜாஸில் தங்கியிருக்கும்போது சாப்பிட பயணிகளுக்கு தினசரி 400 கிராம் என்ற கணக்கில் உணவு தானியங்கள் வழங்கப்படும். ரமலானுக்கு முன்பு ஹஜ்ஜுக்குப் புறப்படுபவர்கள் ஹிஜாஸில் 4½ மாதம் தங்குவார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு 54 கிலோகிராம் உணவு தானியங்கள் வழங்கப்படும். மற்றவர்களுக்கு 3 மாதம் சாப்பிட 36 கிலோ கிராம் உணவு தானியங்கள் வழங்கப்படும்.

உங்கள் விருப்பம்போல் மேற்சொன்ன உணவை அரிசியாகவோ, கோதுமையாகவோ அல்லது ஒரு பங்கு அரிசியும் மீதி கோதுமையுமாகவோ கொண்டு செல்லலாம். மத்திய அரசின் கிடங்குகளிலிருந்து பம்பாய் ஹஜ் குழு இவற்றை பயணிகளுக்காக வாங்குகிறது. உயர்ந்த ரக அரிசி கிடைத்தால் அதற்கான அதிக விலை கொடுக்க வேண்டும்.

**(2) சர்க்கரை :**

(அ) சாதாரணமாக கப்பலில் அனுமதிக்கப்படும் அளவுக்கும் அதிகமாக ஒரு மூட்டை சர்க்கரை எடுத்துச் செல்ல கப்பல் நிறுவனத்திற்கு அனுமதியுண்டு.

(ஆ) ரமலானுக்கு முன்பு ஹஜ்ஜுக்குச் செல்லும் பயணி ஒருவருக்கு 7 கிலோ கிராமும், மற்ற பயணி ஒருவருக்கு 4 கிலோ கிராமும் சர்க்கரை எடுத்துச் செல்ல அனுமதி உண்டு.

*குறிப்புகள் :—*

**(அ) அரிசியை சொந்தமாக எடுத்துச் செல்லவேண்டாம் :**

அரிசி, கோதுமை, சர்க்கரை இவைகளை நீங்கள் சொந்தமாக எடுத்துச் செல்லவேண்டியதில்லை. அதன் விலையுடன் சிப்பம் கட்டுதல், அனுப்புதல் முதலிய கட்டணங்களை பம்பாயிலுள்ள ஹஜ் குழுவின் அலுவலகத்தில் (அறை எண். 14) செலுத்திஞல் அப்பொருள்களை நீங்கள் மக்காவில் மொஹல்லா-அல்ஜியாத்திலுள்ள போராருபாத்தில் வைத்துப் பெறலாம். அப்பொருள்களை நீங்களே கொண்டு செல்ல முயன்ருல் பல இன்னல்களுக்கு காரணமாகும். ஒரு வேளை நீங்களே அரிசியை சொந்த ஊரிலிருந்து எடுத்துச் சென்ருல் அதை பம்பாய் ஹஜ் குழு மூலம் அனுப்ப வேண்டும்.

**(ஆ) அரிசியை போராருபாத்தில் வைத்துப் பெறலாம் :**

புனிதப் பயணிகள் உணவுப் பொட்டலங்களைப் பெறுவதற்காக, மக்காவில் போராருபாத்தில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கின்ற அதிகாரியை நேரடியாக அணுக வேண்டும். போராருபாத், மொஹல்லா-அல்ஜியாத்தில் உள்ள ஜியாத் மருத்துவ மனைக்குப் பின்ஞல் ஹரம் ஷரீபுக்கு அருகில் அமைந்துள்ளது. புனிதப் பயணிகள் மக்காவுக்குச் சென்று சேர்ந்த பின்னர் ஒரு வாரத்திற்குள் நேரடியாக அங்கு சென்று ரசீதைக் கொடுத்துவிட்டு, உணவு தானியங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்கள், பண ரசீதை முஅல்லிமிடமோ வேறு முகவரிடமோ கொடுக்கக் கூடாது. பஜர் தொழுகைக்கும் லுஹர் தொழுகைக்குமிடையே உணவு தானியப் பொட்டலங்கள் வழங்கப்படும். இதில் புகார் ஏதேனும் இருப்பின் தூதரக அதிகாரிகளை அணுகவும்.

**(இ) மிஞ்சிய அரிசியை திரும்பிக் கொண்டுவரக் கூடாது**

சவூதி அரேபியா நாட்டிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்வதற்கு சவூதி அரசு தடை விதித்துள்ளது. இதை எவராவது மீறிஞல் அவருக்கு சவூதி ரியால் 1,000 முதல் 10,000 வரை அபராதத் தண்டனை அல்லது 1 வாரம் முதல் 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகளும் விதிக்க அவ்வரசுக்கு அதிகாரமுண்டு. எனவே, புனிதப் பயணிகள் சவூதி அரேபியாவிலிருந்து திரும்புகையில், அவர்கள் சவூதி அரேபியாவில் பயன்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்ற அரிசியில் மிச்சம் இருந்தால் அதைத் தங்களுடன் எடுத்துவரக் கூடாது என்று மிகக் கண்டிப்பாக எச்சரிக்கப்படுகிருர்கள்.

### (3) இதர உணவுப் பொருள்கள் :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள். இவற்றை வழங்க பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடு செய்வதில்லை. ஆகையால் நீங்களே நேரடியாக ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

| வரிசை எண். (1) | பொருள் (2) | அதிகபட்ச அளவு நபரொன்றுக்கு (3) | ஐந்தோ அதற்கு மேலோ அங்கத்தினர்களுள்ள குடும்பமொன்றுக்கு (4) |
|---|---|---|---|
| | | கிலோ | கிலோ |
| 1. | பருப்பு வகைகள் | 9 | 36 |
| 2. | மிளகாய் மற்றும் மிளகு | 1 | 4.5 |
| 3. | தேயிலை | 4.5 | * |
| 4. | காப்பித்தூள் | 1 | * |
| 5. | வெண்ணை மற்றும் பாலாடைக்கட்டி | 4.5 | 18 |
| 6. | ஏலக்காய் | 0.25 | 1 |

* உச்சவரம்பில்லை.

மேலும் புளி, கொத்தமல்லித் தூள், சீரகம், கடுகு, காயவைத்த கருவேப்பிலை, அப்பளம், ஊறுகாய் (சிப்பஞ் செய்த டப்பாவில்), எண்ணெய் (சிப்பஞ் செய்த டப்பாவில்), உப்பு, சேமியா ஆகியவற்றை தேவைக்கேற்ப எடுத்துச் செல்லலாம். இதுபற்றிய நிபந்தனைகளை அத்தியாயம் V–ல் பார்க்கவும். பால் பவுடர் மலிவு விலையில் சவூதி அரேபியாவில் கிடைக்கும். ஆகையால் பால் பவுடர் எடுத்துச் செல்ல வேண்டாம்.

# IV. ஹஜ் பயணி எடுத்துச்செல்ல வேண்டிய சான்றுகள் / ஆதாரங்கள்

1. மருத்துவச் சான்றிதழ்கள் :

(அ) உலக நாடுகள் சுகாதாரச் சான்றிதழ்.

ஹிஜாஸுக்குப் புனிதப் பயணம் செல்லும் அனைவரும் பெரிய அம்மை நோய்த் தடுப்பு ஊசியும், காலரா தடுப்பு ஊசியும் போட்டுக் கொண்டதற்கான உலக நாடுகள் சுகாதாரச் சான்றிதழ்களைத் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் துறைமுகம் அல்லது விமானதள சுகாதார அதிகாரி, அவர்களைக் கப்பலில் அல்லது விமானத்தில் ஏற அனுமதிக்கமாட்டார்.

உலக நாடுகள் சுகாதாரச் சான்றிதழை, ஒவ்வொருவரும் தனித் தனியாகப் பெறவேண்டும். குழந்தைகளுக்கும்கூட தனித்தனிச் சான்றிதழ்கள் வேண்டும். தாய்மார்களின் சான்றிதழ்களில் குழந்தைகளுக்கான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடாது. அந்தச் சான்றிதழில், தகுதியுள்ள பதிவுபெற்ற மருத்துவர் கையொப்பமிட்டிருக்க வேண்டும். கையொப்பத்திற்குப் பதிலாக கையொப்பம் கொண்ட முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சான்றில், மருத்துவரின் அலுவலக முத்திரையும் போட்டிருக்க வேண்டும். அந்தச் சான்று உண்மையானது என்று நிரூபிக்க, இந்திய அரசின் ஏற்பளிப்பு பெற்ற முத்திரையும் அதில் பெற வேண்டும். ஏற்பளிக்கப்பட்ட பித்தளை முத்திரையை இந்திய அரசு, மாநில அரசு மூலமாக பொதுச் சுகாதார இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், பொதுச் சுகாதார தலைமை மருத்துவ அதிகாரிகள், நிர்வாக மருத்துவ அதிகாரிகள், மாவட்ட மருத்துவ அதிகாரிகள், சிவில் சர்ஜன் (Civil Surgeon), உதவி சர்ஜன் (Assistant Surgeon) நகராட்சிகள், மாநகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் மருத்துவ அதிகாரிகள், அரசின் பொறுப்பிலுள்ள மருத்துவ அதிகாரிகள், இந்திய மருத்துவச் சங்கத்தின் உள்ளூர் கிளைகளிலுள்ள தலைவர்கள், செயலாளர்கள் முதலியோருக்கு வழங்கியுள்ளது.

**பெரியம்மை தடுப்பு ஊசிச் சான்றிதழின் செல்திறன் கால அளவு :**

ஊசி போட்டுக்கொண்ட 8-வது நாளிலிருந்து அல்லது மீண்டும் ஊசி போட்டுக் கொண்டால் அவ்வாறு மீண்டும் போட்டுக்கொண்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் வரை பெரிய அம்மை நோய் தடுப்பு ஊசிச் சான்றிதழ் செல்திறனுடையதாகும்.

**காலரா தடுப்பு ஊசிச் சான்றிதழின் செல்திறன் கால அளவு :**

தொற்று நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது நோய் பரவக்கூடிய பகுதிகளிலிருந்து வருபவர்கள் அனைவரும் அவர்கள் சவூதி அரேபியாவை அடைவதற்கு ஒரு வாரத்திற்குமுன், ஆனால் ஆறு மாதங்களுக்குள், ஒருதடவை (1 C.C) காலரா தடுப்பு ஊசிபோட்டுக் கொண்டதைக் காட்டும் சான்றிதழைத் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகளுக்குப் போடப்படும் மருந்தின் அளவு, காலரா நோய்த் தடுப்பு ஊசி போடும் மருத்துவ அதிகாரிகளால் முடிவு செய்யப்படும். சான்றிதழில் உள்ள பதிவுகள் அனைத்தும் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்தச் சான்றிதழில் எந்தப் பகுதியேனும் பூர்த்தி செய்யப் படாமலிருந்தால் அந்தச் சான்றிதழ் செல்லாது.

எழுதத் தெரியாத குழந்தைக்கு வழங்கப்படும் சான்றிதழில், அக் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் கையெழுத்திட வேண்டும். எழுதப் படிக்கத் தெரியாதவர் ஆணாக இருந்தால் அவரது இடது கைப் பெருவிரல் ரேகையும் பெண்ணாக இருந்தால் வலது கைப் பெருவிரல் ரேகையும் பதிவு செய்யப்பட வேண்டும். இதற்கு ஊசிபோடும் மருத்துவ அதிகாரி மேலொப்பமிட வேண்டும்.

ஊசி போட்டுக்கொண்டதற்கான சான்றிதழின் தேதியை நாள், மாதம், ஆண்டு என்ற வரிசையில் பதிவு செய்யவேண்டும். மாதம் ரோமன் இலக்கத்தில் எழுதப்படவேண்டும். உதாரணமாக 15—8—79 என்பதற்குப் பதிலாக 15—viii—79 என பதிவு செய்யப்பட வேண்டும். மாதத்தின் பெயரையும் பதிவு செய்யலாம். உதாரணமாக ஆகஸ்ட் 15, 1979 என்றும் பதிவு செய்யலாம்.

சான்றிதழில், எழுத்தைத் திருத்தி அதன் மேலேயே எழுதுதல் அல்லது ஒரு எழுத்தை அழித்தல் எதுவும் (குறிப்பாக நாள் பதிவுகளில்) இருக்கக்கூடாது. இந்தச் சான்றிதழ்களை வழங்கும் மருத்துவ அதிகாரிகள், தங்களது கையெழுத்தையும் நாளையும் தெளிவாகப் போடவேண்டும். அதில் அவர்களது பதவிப் பெயருடன் அலுவலக முத்திரையையும் இடவேண்டும். இல்லையேல் பம்பாயிலுள்ள துறைமுக சுகாதார அதிகாரிகள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

காலரா அல்லது அம்மை நோய்த் தடுப்பு ஊசியை, ஒரு பொது மருத்துவமனையில் அல்லது மருந்தகத்தில் அல்லது சுகாதார நிலையத்தில் போட்டுக்கொண்டால், அது போட்டுக் கொண்டதற்கான உலக நாடுகள் சான்றிதழ் வழங்குவதற்கு கட்டணமேதும் வசூலிக்கப்பட மாட்டாது. (இதற்கு ஆதாரம் இந்திய அரசின் சுகாதார அமைச்சகத்தின் 1-8-51 தேதியிட்ட கடித எண். F 305/PHY ஆகும்). அம்மை நோய்த் தடுப்பு ஊசியோ காலரா நோய்த் தடுப்பு ஊசியோ போடுவதற்காக உள்ள சுகாதார நிலையத்திலோ, பொது மருத்துவமனையிலோ, மருந்தகத்திலோ அல்லாமல் மற்ற இடங்களில் அவற்றைப் போடுமாறு மருத்துவ அதிகாரியை கேட்கக் கூடாது.

### (ஆ) இருப்பிட சான்றிதழ் (Location Certificate) :

புனிதப் பயணிகள் சவூதி அரேபியா சென்று சேருவதற்கு முன் ஐந்து நாட்கள் காலரா இல்லாத ஒரு பகுதியில் தங்கியிருந்துள்ளார் என்று காட்டும் சான்றிதழொன்றைக் கொண்டு செல்லவேண்டும். காலரா பாதிக்காத கப்பலில் பயணம் செய்யும் கால அளவும் இதற்காக அங்கீகரிக்கப்படும். ஆகையால் கப்பலில் பயணம் செய்பவர் இச் சான்றைப் பெற வேண்டாம். பம்பாய் மாநகரம் காலரா பாதிக்காத பகுதியாக சவூதி அரேபிய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் விமானத்தில் ஹஜ் பயணம் செய்யும் புனிதப் பயணிகள் பயணம் துவங்கும் நாளிலிருந்து குறைந்தது ஐந்து நாட்கள் முன்னதாக பம்பாய் சென்று

சாபூ சித்தீக் முஸாபிர்கானுவில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நிலையங்களை அணுக வேண்டும்.

**(இ) 1979 ஆகஸ்ட் 23-க்குப் பிறகு ஹஜ்ஜுக்குச் செல்லும் பயணிகளுக்கு சலுகை :**

1399 ஷவ்வால் 1 முதல் துல்ஹஜ் வரை (23-8-79 முதல் 79 நவம்பர் வரை) ஹஜ்ஜுக்குச் செல்லும் பயணிகள், சவூதி அரேபிய அரசின் தற்போதைய சுகாதார விதிகளின்படி, பெரிய அம்மை நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டதற்கான சான்றிதழ்களை எடுத்துச் சென்ருல் போதுமானது. சவூதி அரேபியாவில் நுழைவதற்கு 15 தினங்களுக்கு முன்பே இந்த சான்றிதழைப் பெற வேண்டும்.

**2. 'B' படிவம், 'C' படிவம் :**

பம்பாய் ஹஜ் குழுவிடமிருந்து உங்கள் இடத்தைப் பதிவு செய்ததற்கான "B" படிவத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள். இந்த "B" படிவமானது, குறிப்பிட்ட கப்பலொன்றில் உங்களுக்கு இடம் ஒதுக்கி அந்த கப்பல் பம்பாயிலிருந்து ஜித்தாவுக்கு புறப்படும் தேதி பற்றிய தகவலையும் அளிக்கிறது. அதை "C" படிவத்தின்மூலம் உறுதிப்படுத்திய பிறகு இரண்டு படிவங்களையும் எடுத்துக்கொண்டு, பம்பாயிலிருந்து புறப்படுவதற்கு 7 நாட்கள் முன்னர், நீங்கள் பம்பாய் சென்று சேர வேண்டும். பம்பாயிலிருந்து புறப்பட வேண்டிய தேதிக்கு சுமார் பத்து நாட்கள் முன்னதாவது "C" படிவம் உங்களுக்கு கிடைக்காவிடினும் "B" படிவத்துடன் நீங்கள் பம்பாய் புறப்பட வேண்டும்.

**3. புகைப் படங்கள் :**

நீங்கள் அண்மையில் எடுத்துக்கொண்ட பாஸ்போர்ட் அளவு புகைப் படத்தில் குறைந்தது ஆறு புகைப்படங்களையேனும் உங்களுடன் எடுத்துச் செல்லவும். அவற்றின் பின்புறம் உங்கள் பெயரை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். "B" படிவம் காணமற் போய்விட்டால் அல்லது உங்களுக்கு வந்து சேராவிட்டால் இந்தப் புகைப்படங்கள் மிகவும் உதவியாயிருக்கும்.

**4. ஹஜ் பாஸ்போர்ட் :**

ஹஜ்ஜுக்குச் செல்லும் புனிதப் பயணிகளுக்கு தனியான ஹஜ் பாஸ்போர்ட் வழங்கப்படும். இதற்கான கட்டணத்தை பயணிகள் ஏற்கெனவே செலுத்தியுள்ளதால், பம்பாய் ஹஜ் குழு பாஸ்போர்ட்டைத் தயாரித்து வைக்கும். பம்பாய் ஹஜ் குழுவின் பாஸ்போர்ட் பிரிவு சாபூ சித்தீக் முஸாபிர்கானுவில் உள்ளது. ஹஜ் குழு உங்களின் பதிவு ஏற்பாட்டை அறிவிக்கும்போது நீங்கள் வரிசையாகச் சென்று உங்களின் பாஸ்போர்ட்டைப் பெறலாம்.

**5. கூலி அட்டை :**

இதுவும் பம்பாய் ஹஜ் குழுவால் வழங்கப்படுகிறது. கூலிக்கான குறிப்பிட்ட தொகையை நீங்கள் கட்டிவிட வேண்டும். உங்களுக்கு வழங்கப்படும் கூலி அட்டையில் உங்களின் கூலியின் எண் எழுதப்பட்டிருக்கும். அந்த எண்ணுள்ள கூலியிடம் உங்களின் பயணப் பொருள்களை நம்பிக்கையுடன் ஒப்படைக்கலாம். கப்பல் பயணத்திற்கு முந்தின நாளே சாமான்களை கூலியிடம் ஒப்படைக்க வேண்டும்.

## 6. அடையாளக்குறி (பாட்ஜ்) (Badge) :

உங்கள் பெயர் எழுதப்பட்ட பாட்ஜை பம்பாய் ஹஜ் குழு வழங்கும். இதை ஹஜ் பயணத்தின்போது நீங்கள் அணிந்து கொள்ளவேண்டும். ஒரு வேளை மினா, அரபாத், முஜ்தலிபா முதலிய இடங்களில் நீங்கள் வழிதவறி விட்டால் இப்பாட்ஜ் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

## 7. பம்பாய் ஹஜ் குழுவிடமிருந்து ஆவணங்களைப் பெறும்முறை :

ஹஜ் குழு உங்கள் கப்பலுக்கான பதிவு ஏற்பாட்டை அறிவிக்கும் போது நீங்கள் ஹஜ் குழுவின் பதிவு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். 'B' படிவத்தை அங்குள்ள பதிவு எழுத்தரிடம் கொடுக்கவும். அதன் ஒரு பகுதியை அவர் எடுத்துக்கொண்டு அதற்கான ரசீதுடன் 'B' படிவத்தில் புகைப்படமொட்டிய பகுதியை உங்களிடம் திருப்பித் தருவார். பிறகு பதிவு அலுவலகத்தின் முன் பக்கமுள்ள படிக்கட்டு வழியாக கீழே இறங்கி வந்து வலதுபுறமாக கூலி அட்டை வழங்கப்படும் இடத்திற்குச் சென்று அங்கு கூலி அட்டையைப் பெறவும்.

அதன்பின் மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், பாஸ்போர்ட் பிரிவுக்குச் செல்லவும். பெண்கள், குழந்தைகள் உள்பட எல்லோரும் நேரில் சென்று பாஸ்போர்ட்டைப் பெற வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது அங்கு உங்களின் 'B' படிவத்தை வாங்கிக் கொள்வார்கள். பிறகு பாஸ்போர்ட்டையும் 'B' படிவத்தையும் உங்களிடம் தருவார்கள்.

பாஸ்போர்ட்டையும் ' B ' படிவத்தையும் எடுத்துக் கொண்டு நீங்கள் பாட்ஜைப் பெற அதற்காகவுள்ள முகப்புக்குச் செல்லவும். அங்குள்ள எழுத்தர் உங்களின் கையொப்பத்தை அல்லது ரேகையைப் பெற்ற பிறகு உங்களின் பாட்ஜைத் தருவார். இதன் ஒரு பக்கத்தில் உங்கள் பெயரும் மறு பக்கத்தில் பாஸ்போர்ட் எண்ணும் எழுதப்பட்டிருக்கும். ஹஜ் துஆக்களடங்கிய புத்தகத்தையும் பயணி ஒருவருக்கு 10 லேபில்கள் என்ற அடிப்படையில் மூட்டை முடிச்சுகளில் ஒட்டவேண்டிய லேபில்களையும் அங்கிருந்து பெறலாம்.

உங்களுடைய பாஸ்போர்ட்டைச் சரி பார்க்கவும். அத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களையும் சரி பார்த்துக் கொள்ளவும் :

1. திரும்பி வர பயணச் சீட்டு (ஜித்தா-பம்பாய் / பம்பாய்-ஜித்தா பயணச் சீட்டை ஹஜ் குழு நிறுத்தி வைத்துக் கொள்ளும்).
2. ஜித்தா கார்டு (அராபிய மொழியில்).
3. கப்பலில் ஏறுவதற்கான அனுமதிச் சீட்டு.
4. சுகாதார சான்று : சவூதி அரேபிய அரசின் விதிப்படி ஒவ்வொரு புனிதப் பயணியும் தமது சுகாதார நிலைமைபற்றிய சான்று ஒன்றைப் பெற வேண்டும். உடல் நலம் நன்றாக உள்ளது என்றும் ஹஜ் சம்பந்தமான கடமைகளைச் செய்ய உடல் நலம் உண்டு என்றும், மற்றவர்களுக்குப் பரவக்கூடிய நோய்கள் ஒன்றும் புனிதப் பயணிக்கு இல்லை என்றும் இச் சான்றில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

## V. ஹஜ் பயணிகள் எடுத்துச் செல்லக் கூடாத (ஆகாத) பொருள்களும் நிபந்தனையுடன் கொண்டு போகக்கூடிய பொருள்களும்

நீங்கள் ஹஜ் பயணம் செய்வதால் வணிகப் பொருள்கள் எதனையும், அல்லது சவூதி அல்லது இந்திய அரசால் தடை விதிக்கப்பட்ட போதை மருந்து, சாராயம், கஞ்சா, அபின், கசகசா முதலியன போன்ற ஆட்சேபகரமான பொருள்கள் எவற்றையும் எடுத்துச் செல்லக்கூடாது. அவ்வாறு நீங்கள் எடுத்துச் சென்றால் விரும்பத்தகாத நிலையை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்தியாவில் காலரா பரவியுள்ள அல்லது பரவக்கூடிய பகுதிகளிலிருந்து உணவுப் பொருள்களையும் ஏனையவற்றையும் சவூதி அரேபியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கு பொதுவான விதிமுறைகள் கீழே தரப் பட்டுள்ளன.

முதலாவது: இந்தியாவில் காலரா பரவியுள்ள அல்லது பரவக் கூடிய பகுதிகளிலிருந்து சவூதி அரேபியாவிற்கு கீழ்க்கண்ட பொருள் களையும், உணவுப் பொருள்களையும், ஏற்றுமதி செய்வதற்குக் கண்டிப்பான தடை விதிக்கப்பட்டுள்ளது :—

வெண்ணெய், மீன், நண்டு, பல்வேறு வகை சிப்பிகள், ஐஸ்கிரீம், இனிப்பூட்டப்பட்ட எலுமிச்சை, தானியங்கள், பலவகை மாமிசம், யோகர்ட் பாலாடைக்கட்டி, உறிஞ்சித்தாள், தூய்மைப்படுத்தப்படாத (Non-Sterlised) உறையவைத்த (Frozen) உணவுப் பொருள்கள்.

இரண்டாவது: கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களும் உணவுப் பொருள்களும் காலரா பரவியுள்ள அல்லது பரவக் கூடிய பகுதி களிலிருந்து எடுத்துக் கொண்டு புறப்பட்ட நாளிலிருந்து குறைந்தது ஏழு நாட்களாவது ஆகியிருந்தால் அவற்றை சவூதி அரேபியாவிற்குள் கொணடு செல்ல அனுமதிக்கப்படலாம்:

முந்திரி போன்ற பருப்புகள் (Nuts), பார்லி தண்ணீர், பிஸ்கட்டுகள், எல்லாவகை மசாலாப் பொருள்கள், தானியங்கள் (விதை அல்லது அரைக்கப்பட்டது), எலுமிச்சம்பழம், சர்க்கரை குழம்புக்கான பேஸ்ட் (Curry Paste), சோளம், பேரீச்சம்பழம், முட்டை, வாழைப்பழம், கால்நடைக் கொழுப்பு (வெண்ணெய், பாலேடு, நீங்கலாக), சிறு தானியங்கள், காப்பிக்கொட்டை, தேயிலை, தேன், பயறு வகைகள், ஊறுகாய்கள், சோயா குழம்பு, வினீகர், பழக்காரம், நிலக்கரி (உலர்ந்தது), சிமெண்டு, நாணயங்கள், கண்ணாடி, தோல் உரிவைகள், உலோகங்கள், சாதாரண தாள், அச்சிட்ட பொருள்கள், செய்தித்தாள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், புகையிலை, மரக்கட்டை, (உலர்ந்தது), உலர்ந்த பழங்கள், இனிப்பூட்டப்பட்ட பழங்கள், இனிப்பு வகைகள், சாக்லேட்டுகள், கால்நடைத் தீவனம்.

மூன்றாவது : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களும் உணவுப் பொருள்களும் காலரா பரவியுள்ள அல்லது பரவக்கூடிய பகுதிகளிலிருந்து எடுத்துக்கொண்டு புறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குப் பிறகு அவற்றை சவூதி அரேபியாவிற்குள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப் படலாம் :—

எல்லாவகை ரொட்டிகள், எல்லாவகை பச்சைக் காய்கறிகள், புதிய பழங்கள் தாவர எண்ணெய், தாவரக் கொழுப்பு.

நான்காவது : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களும் உணவுப் பொருள்களும், காலரா பரவியுள்ள அல்லது பரவக்கூடிய பகுதிகளி லிருந்து எப்போது வேண்டுமானாலும் சவூதி அரேபியாவிற்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படலாம் :

தொற்றுநோய்க் கிருமிகள் உட்புக வாய்ப்பு ஏதுமின்றி சுகாதார முறையில், இயந்திரங்களைக் கொண்டு சிப்பஞ் செய்யப்பட்ட டப்பாவில் அடைக்கப்பட்ட (Canned) உணவு, அதில் தொகுதி எண் குறிப்பிட் டிருக்க வேண்டும்; (அதே நிபந்தனைகளின்படி புட்டிகளில் அடைக்கப் பட்ட பன்னீரும், காடி நீரும் கொண்டு செல்லலாம்); மென்னீர் (Soft water); கனிவள நீர் (Mineral water).

ஐந்தாவது : உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லும் முறையின் அல்லது போக்குவரத்தின் துப்பரவு பற்றியும், அது காலரா தொற்றுநோயினின்றும் தடுக்கப்பட்டதுதான் என்பது பற்றியும் ஜித்தா துறைமுகத்தில் சவூதி அரேபிய சுகாதார அதிகாரிகளுக்கு முழு திருப்தி ஏற்பட வேண்டும். இதுபற்றி ஐயமேதேனும் இருந்தால் உணவுப் பொருள் எதனையும் இறக்குவதற்குத் தடை விதிக்க உள்ளூர் சுகாதார அதிகாரிக்கு உரிமையுண்டு.

ஆறாவது : டப்பாவில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் உட்பட உணவுப் பொருள்கள் அனைத்தும், இது குறித்து சவூதி அரேபிய அரசால் வரையறுக்கப்பட்ட தரங்களுக்கும் அளவுகளுக்கும் ஒத்திருக்க வேண்டும். உணவுப் பொருள்களின் ஒரு சில மாதிரிகளை இரசாயன முறையிலும் நுண்ணுயிரியல் அடிப்படையிலும் பகுப்பாய்வு செய்து, அவை குறிப்பிடப்பட்ட தரங்களுக்கும் அளவுகளுக்கும் ஒத்திருக் கின்றனவா என்று சரிபார்க்க உள்ளூர் சுகாதார அதிகாரிக்கு உரிமை உண்டு.

ஏழாவது : சவூதி அரேபிய அரசு சுகாதார அமைச்சகத்தின் ஒப்புதலை முன்னதாகவே பெற்றிருந்தாலொழிய, மேற்சொன்ன பத்திகளில் குறிப்பிடப்படாத பொருள்கள் எதுவும் சவூதி அரேபியா வுக்குக் கொண்டுசெல்ல அனுமதிப்படமாட்டாது.

எட்டாவது : நுண்ணுயிரியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்ய ரியாதில் உள்ள பொதுச் சுகாதார மத்திய ஆய்வுக்கூடமும், ஜித்தாவில் உள்ள குவாரண்டைன் ஆய்வுக்கூடமும் மட்டுமே ஏற்பளிக்கப்பட்ட இரண்டு ஆய்வுக் கூடங்களாகும்.

*குறிப்பு:* தடை விதிக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை பயணிகள் எடுத்துச் செல்லாமலிருப்பது நன்று. திரவ நிலையிலுள்ள உணவுப் பொருள்களையும் எடுத்துச் செல்லவேண்டாம்.

# VI. ஹாஜிகளுக்கு உதவி செய்ய ஏற்பாடுகள்

ஹாஜிகளுக்கு பலவிதமான உதவிகளைச் செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஆலோசனைப்படி பல குழுக்கள் இயங்குகின்றன. பல தொண்டர்களும் ஹாஜிகளின் நலனைக் கவனிக்கிறார்கள். அவை பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

## 1. தமிழ்நாடு ஹஜ் குழு :

ஹாஜிகளின் நலனைக் கவனிக்க ஒவ்வொரு மாநிலத்திலும் ஹஜ் குழுககள் உள்ளன. தமிழ்நாட்டில் மாநில ஹஜ் குழுவைத் தவிர மாவட்டந்தோறும் உபகுழுக்கள் உள்ளன. தமிழ்நாடு ஹஜ் குழுவின் தலைவர் மாண்புமிகு வக்ப் அமைச்சர் ஆவார். மாவட்ட ஹஜ் உப குழுக்களுக்கு மாவட்ட கலெக்டர்கள் தலைமை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு ஹஜ் குழு ஹாஜிகளின் நலனுக்காக முக்கியமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிறது :

(i) ஹஜ்ஜிற்கான விண்ணப்ப படிவங்களை நேரடியாகவும் உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட கலெக்டர்கள் மூலமாகவும் ஹாஜிகளுக்கு வழங்குதல்;

(ii) நடைமுறைகள் பற்றி ஹாஜிகள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில்கள் அனுப்புதல் ;

(iii) ஹாஜிகளின் நலனைக் கவனிக்க காதிமே ஹு"ஜ்ஜாஜ்" களை நியமித்து அனுப்புதல் ;

(iv) வருடந்தோறும் தமிழில் ஹஜ் வழிகாட்டி ஒன்றினை ஹாஜிகளுக்காக இலவசமாக வெளியிடுதல்.

ஹாஜிகள் எடுத்துக்கூறும் குறைகளை மத்திய அரசுக்கும் பம்பாய் ஹஜ் குழுவுக்கும் எடுத்துக் கூறி இயன்ற வரை நிவர்த்தி செய்தல்.

தமிழ்நாடு ஹஜ் குழுவின் முகவரி :

"செயலர், தமிழ்நாடு ஹஜ் குழு,
வணிகவரி மற்றும் அறக்கட்டளைகள் துறை,
கோட்டை, சென்னை-600 009."

தொலைபேசி எண்கள்

தலைவர் திரு. கெ. ராஜா முகமது,
அலுவலகம் : 23118
வீடு : 72783

செயலர் திரு. மு. அகமது,
அலுவலகம் : 24706 (TNSC Bank)
29111-616 (கோட்டை)
வீடு : 613800

2. பம்பாய் ஹஜ் குழு :

பாராளுமன்றம் 1959-ல் நிறைவேற்றிய 51-வது சட்டத்தின்கீழ் பம்பாய் ஹஜ் குழு இயங்குகிறது. இந்தியாவிலிருந்து நேரடியாக ஹஜ்ஜிற்குச் செல்லும் எல்லா பயணிகளுக்கும் பம்பாய் ஹஜ் குழு ஒரு நுழைவாயிலாகும். இந்நாட்டு புனிதப் பயணிகள் ஹஜ்ஜிற்காகப் போகும் வழியிலும் ஹஜ்ஜை நிறைவேற்றிய பிறகு திரும்பி வரும் போதும் அவர்களுக்கு சேவை செய்வதே இக்குழுவின் முக்கிய பணியாகும். ஹாஜிகளுக்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவும் மாநில ஹஜ் குழுக்கள், ஹஜ் சேவை நிறுவனங்கள் முதலியன மூலமாகவும் வழங்குவதும் ''குறா'' முறையில் ஹாஜிகளைத் தேர்ந்தெடுப்பதும், ஹாஜிகளுக்கான கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துக்களை ஏற்பாடு செய்வதும், சுகாதாரச் சான்றிதழ்கள், ஹஜ் பாஸ்போர்ட்டுகள், ஹஜ் விசாக்கள், அன்னியச் செலாவணி, ஹிஜாஸில் தேவையாகும் உணவு தானியங்கள் போன்றவற்றை ஹாஜிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்வதும் இக்குழுவாகும். ஹஜ் சம்பந்தமான அலுவல் நடைமுறைகளைக் காட்டும் வழிகாட்டிகளை ஆங்கிலத்திலும் உருதுவிலும் வெளியிடுவது மட்டுமின்றி, ஹஜ் துஆக்களடங்கிய மனாஸிக்குல் ஹஜ் என்ற சிறு நூலையும் இக்குழு வெளியிடுகிறது. ஹஜ் சம்பந்தமான நடைமுறைகள் பற்றியும் அவற்றிலுள்ள மாற்றங்கள் பற்றியும் இக்குழு மாநில ஹஜ் குழுக்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் ஹாஜிகளுக்கு அறிவுரை வழங்குகிறது. மாநில ஹஜ் குழுக்களுக்கு இக்குழு சிறு அளவில் மானியமும் வழங்குகிறது.

ஹாஜிகளுக்குத் தங்குவதற்காக பம்பாயில் ஒரு ஹஜ் இல்லம் கட்டுவது பம்பாய் ஹஜ் குழுவின் திட்டங்களிலொன்றாகும். இக்குழுவின் முகவரி பின்வருமாறு :

'' ஹஜ் குழு '',<br>
முதல் மாடி,<br>
முகம்மது ஹாஜி சாபூ சித்தீக் முஸாபிர் கானா,<br>
லோக் மான்ய திலக் மார்க்,<br>
பம்பாய்-400 001.

அல்லது சுருக்கமாக,

'' ஹஜ் குழு, சாபூ சித்தீக் முஸாபிர் கானா,<br>
பம்பாய்-400 001. ''

இதன் தொலைபேசி எண்கள் : 262989<br>
268862

இதன் முக்கிய அதிகாரிகள் :

தலைவர் திரு. மொய்னுத்தீன் ஹாரிஸ்,<br>
தொலைபேசி எண். 262989,

நிர்வாக அதிகாரி, திரு. காஸி முஹம்மது அமீன்,<br>
தொலைபேசி எண். 262989.

### 3. சாபூ சித்தீக் முஸாபிர்கானா, பம்பாய் :

முஹம்மது ஹாஜி சாபூ சித்தீக் முஸாபிர்கானா, பம்பாய்-400 001, லோக்மான்ய திலக் மார்க்கில் உள்ளது. இது பம்பாய் சாண்டாகுருஸ் விமான நிலையத்திலிருந்து சுமார் 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது 'விக்டோரியா டெர்மினஸ்' ரெயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவிலும் 'பம்பாய் சென்ட்ரல்' ரெயில் நிலையத்திலிருந்து சுமார் 3 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த முஸாபிர்கானாவில் சுமார் 2000 புனிதப் பயணிகள் தங்கலாம். பெரும்பாலான ஹாஜிகள் தங்குமிடமும் பிரயாணம் மேற்கொள்வதற்கு வேண்டிய நடைமுறை ஏற்பாடுகள் அனைத்தும் கவனிக்கப்படும் இடமும் இதுவே. ஹாஜிகளுக்கு மட்டும் இலவசமாக இங்கு இடம் அளிக்கப்படும். மற்றவர்களுக்கு கிடையாது. பம்பாய் ஹஜ் குழு இந்த முஸாபிர்கானாவில் இயங்குகிறது. இதன் தொலைபேசி எண். 261510.

### 4. பம்பாயிலுள்ள தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ் :

பம்பாயில், 'தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி' என்ற நிறுவனம் தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ் என்ற விடுதியை நிர்வகித்து வருகிறது. இந்த விடுதி பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் ரெயில் நிலையத்திலிருந்து சுமார் 1.6 கிலோ மீட்டர் (1 மைல்) தொலைவிலும், பம்பாய் ஹஜ் குழு அலுவலகத்திலிருந்து சுமார் 0.8 கிலோ மீட்டர் (½ மைல்) தொலைவிலும் அமைந்துள்ளது. தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜில், ஹாஜிகளுக்கு இலவசமாகத் தங்க வசதியுண்டு. ஹாஜிகளை வழி அனுப்ப, அல்லது வரவேற்க வருபவர்கள், சொற்ப கட்டணத்தில் (முதல் 8 நாட்களுக்கு மொத்தம் ரூ. 20; அடுத்த 3 நாட்களுக்கு மொத்தம் ரூ. 10) இங்குள்ள பொது அறையில் தங்கலாம். இது நன்கொடையாக வசூலிக்கப்படுகிறது. இங்கு முதலில் வருபவர்களுக்கு முதலில் என்ற அடிப்படையில் இடம் ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜில், குளிக்கும் வசதிகள் இணைந்த நவீன முறையிலுள்ள 14 பெரிய அறைகளும் 2 பெரிய பொது அறைகளும் உள்ளன. இங்கு ஒரே நேரத்தில் சுமார் 200 பேர் தங்கலாம். மாடியிலுள்ள அறைகளுக்குச் செல்ல லிப்டும் பொருத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு அறையிலும் வெந்நீர் வசதியும் உண்டு. ஹாஜிகளுக்கு சாப்பாடு சமைக்கவும் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு தங்கும் ஹாஜிகளின் பணம் மற்றும் ஏனைய பொருள்கள் பாதுகாப்பாக இருக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஹஜ் சம்பந்தமான பிற உதவிகளும் இங்கு செய்யப்படுகிறது.

இதன் முகவரியானது: "எண் 39/43, மஸ்ஜித் தெரு, மந்தவி தபால் நிலையம் அருகே, பம்பாய்-400003"; தொலைபேசி எண்கள் 330721; 348822; தந்தி "Safamarwa" பம்பாய்-400003.

### 5. சென்னையிலுள்ள சித்தீக் சராய் :

சென்னை மாநகரத்தில், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கெதிரே, "சித்தீக் சராய்" அமைந்து உள்ளது. இது சென்னை மத்திய ரெயில் நிலையத்திலிருந்து

சுமார் 0.2 கிலோ மீட்டர் (1 பர்லாங்) தொலைவிலும், சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்திலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் (5 பர்லாங்) தொலைவிலும், சென்னை '' பூங்கா '' (மின்சார) ரயில் நிலையத்துக்கு மிக அருகாமையிலுமாக உள்ளது. ஹஜ் யாத்திரிகர்களுக்குத் தங்குவதற்காக இங்கு தனி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இங்கு தங்கும் பயணிகளிடமிருந்து முதல் 3 நாட்களுக்கு வாடகை வசூப்பதில்லை. ஆயினும் நான்காவது நாளிலிருந்து அறையொன்றுக்கு தினசரி ரூ. 5-50 வீதம் வாடகையாக வசூலிக்கப்படுகிறது. நோன்பு நாட்களில் நோன்பு திறக்க, தனி ஏற்பாடுகள் இங்கு செய்யப்படுகின்றன.

சித்தீக் சராயில் 43 அறைகளும் 2 பள்ளிவாசல்களும் உள்ளன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாகத் தங்க இரண்டு பெரிய பொது அறைகளும் உள்ளன. குளிப்பதற்கும் மற்றும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

புனித ஹஜ் பயணிகள் சென்னை வழி ஹஜ்ஜிற்குச் செல்லும் போதும், திரும்பி வரும்போதும் இங்கு தங்கி பயனடையலாம். இதன் நிர்வாக அதிகாரிக்கு கடிதம் போட்டு விட்டால் அவர் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வார். சித்தீக் சராயின் முகவரியாவது: ''எண். 5, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, சென்னை-600003.'' தொலைபேசி எண் : 31045.

**6. ஹாஜிகளின் நலனைக் கவனிக்கும் காதிமே ஹுஜ்ஜாஜ்கள் :**

1979-ல் நடைபெறவிருக்கும் புனித ஹஜ்ஜுக்கு தமிழ்நாடு ஹஜ் குழுவின் சார்பாக இரண்டு தொண்டர்கள் (காதிமே ஹுஜ்ஜாஜ்) அனுப்பப்படுகிறுர்கள். அவர்களின் பெயரும், முகவரியும் பின்வருமாறு :

1. **திரு. எஸ். அப்துல்கனி,**
   முதல்வர்,
   தாருல் உலூம் அரபிக் மத்ரஸா,
   அத்திக்கடை அஞ்சல்,
   தஞ்சாவூர் மாவட்டம்.

2. **திரு. ஏ. முகம்மது யாசீன்,**
   161, சாந்தி நகர்,
   குரோம்பேட்டை,
   சென்னை-600044.

இந்த காதிமே ஹுஜ்ஜாஜ்கள் அவரவர் பெயருக்குக் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த புனிதப் பயணிகளுக்கு உதவி செய்வர் :

1. **திரு. ஏ. முகம்மது யாசீன் :**
   1. சென்னை
   2. கோயம்பத்தூர்
   3. வடஆற்காடு

4. செங்கல்பட்டு
5. நீலகிரி
6. தென்ஆற்காடு,
7. சேலம்
8. தருமபுரி.

2. திரு. எஸ். அப்துல் கனி:

1. தஞ்சாவூர்
2. திருநெல்வேலி
3. இராமநாதபுரம்
4. திருச்சிராப்பள்ளி
5. புதுக்கோட்டை
6. மதுரை
7. கன்னியாகுமரி.

புதுவை மாநிலத்தைச் சேர்ந்த புனிதப் பயணிகளையும் திரு. எஸ். அப்துல் கனி கவனித்துக் கொள்வார்.

புனித ஹஜ் யாத்திரை வேளையில் ஹஜ் பயணிகளுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் அவர்கள், சம்பந்தப்பட்ட காதிமே ஹுஜ்ஜாஜை அணுகிக் கொள்ளலாம். காதிமே ஹுஜ்ஜாஜ்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வார்கள். இவர்களின் குறிப்பிட்ட சில பணிகள் கீழே விவரிக்கப்படுகின்றன :—

1. ஹஜ்ஜுக்காக சவூதி அரேபியாவிற்குச் செல்லும் புனிதப் பயணிகள் சில நேரங்களில் தேவையற்ற பல சாமான்களை எடுத்துச் செல்கின்றனர். இதனால் ஜித்தா துறைமுகத்திலும் சுங்கச் சோதனைச் சாவடிகளிலும் அவர்களது பொருள்கள் அனைத்தும் ஒன்றாகக் கிடைப்பதில் அசௌகரியமும், இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன. இதைக் குறைக்க ஹஜ் தொண்டர் தமது மாநிலத்திலிருந்து செல்லும் புனிதப் பயணிகள் அவர்களது சொந்த நன்மையையும் வசதியையும் கருதி சவூதி அரேபியாவில் தங்களது உணவுச் செலவிற்கு மிக மிக இன்றியமையாத பொருள்களை மட்டும் தம்முடன் எடுத்துச் செல்வது குறித்து அவர்களுக்கு ஆலோசனை கூறுவார்.

2. புனிதப் பயணி ஒருவருக்கும், முஅல்லிமுக்கும் இடையே சச்சரவு ஏதேனும் ஏற்பட்டால், ஹஜ் தொண்டர் இதில் தலையிட்டு நியாயமான முறையில் அதைத் தீர்த்து வைப்பார்.

3. மக்காவில் இருக்கும்போது ஹஜ் அதிகாரி மக்காவிற்கு வரும் போதெல்லாம், அவரைச் சந்தித்து இந்தியாவிலிருந்து வந்த ஹாஜிகளின் பிரச்சினைகளைப் பற்றி அவருக்குத் தெரியப்படுத்த முயற்சிப்பார். இதற்காக ஹஜ் அதிகாரி கூட்டும் வாரந்தரக் கூட்டங்களுக்கும் அவர் செல்வார்.

4. ஹஜ் தொண்டர், ஏனையவற்றுடன், புனிதப் பயணிகளின் உடல் நலனைக் கண்காணிப்பார். இந்திய ஹஜ் மருத்துவர் குழுவிட மிருந்து, தேவைப்படும்போது மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளுமாறு புனிதப் பயணிகளைத் தூண்டுவதோடு அவர்களுக்கு உதவியும் நல்கு வார். கடும் நோயுற்றவர் குறித்து உடனடியாக மருத்துவக் குழுவிற்குத் தெரிவிப்பார். ஹஜ் முடிந்ததும் உடனடியாக இந்தியாவிற்கு அவர் களைத் திருப்பி அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டால் மருத்துக் குழுவின் மூலமாக இதுபற்றி ஹஜ் அதிகாரிக்கு தெரியப்படுத்துவார்.

5. சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும்போது தமது மாநிலத்தைச் சேர்ந்த புனிதப் பயணிகளில் எவரேனும் ஒருவர் எதிர்பாராத நிகழ்ச்சி களிலோ விபத்திலோ சிக்கிக் கொண்டால் ஜித்தாவிலுள்ள இந்தியத் தூதர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியை முதலில் கலந்தாலோசிக்க வேண்டும். அவரின் ஆலோசனையின்றி சவூதி அரேபி யாவின் போக்குவரத்து நிறுவனம், முஅல்லிம் அல்லது உள்ளூர் காவலர் கள் அரபி மொழியில் உள்ள வாக்குமூலம் எதிலும் கையொப்பம் இடச் சொன்னால் இடுவது சரியல்ல. ஹஜ் தொண்டர் இதுகுறித்து தேவை யான அறிவுரை வழங்குவார்.

6. ஹஜ் முடிந்தபிறகு புனிதப் பயணிகள் இந்தியாவிற்குத் திரும்பு வது, சவூதி அரேபிய நாட்டு விதிமுறைகளின்படியே நடைபெறும். உடனடி மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய தனி நேர்வுகளில் மட்டுமே இந்த விதிகளைத் தளர்த்த முடியும். இந்த நேர்வுகளில் ஹஜ் தொண்டர் இதை மருத்துவ அதிகாரி மற்றும் துணைக் கன்ஸலின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*குறிப்புகள் :—*

1. ஹஜ் தொண்டர்களை விரைவில் அடையாளம் கண்டு கொள்ள அவர்கள் ஒரு பச்சை நிற பாட்ஜையோ மற்ற அடையாளத் தையோ அணிந்திருப்பது நன்று.

2. ஹாஜிகளுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் அதை ஹஜ் தொண்டர் உடனடியாக மாநில ஹஜ் குழுவிற்கும் ஹாஜியின் உற்றார்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

3. ஹஜ் கப்பல்கள் பம்பாயிலிருந்து ஜித்தாவிற்கு வரும்போது ஹஜ் தொண்டர்கள் துறைமுகத்திற்குச் செல்வது நன்றாக இருக்கும்.

4. அவர்களின் செயல்களைப்பற்றி ஹஜ் தொண்டர்கள் அடிக்கடி மாநில ஹஜ் குழுவின் செயலாளருக்கு தகவல் அனுப்ப வேண்டும்.

5. ஹஜ் தொண்டர்கள் இயன்றவரை பம்பாய்க்கு கடைசியாக வந்து சேரும் ஹஜ் கப்பலில்தான் திரும்பிவர வேண்டும்.

6. ஹஜ் தொண்டர்களை ஹாஜிமார்கள் தங்களது வேலைக்காரர் களைப்போல் நினைக்கலாகாது. ஹஜ் தொண்டர்கள் செய்யும் பணிகளை ஹாஜிகள் பயன்படுத்திக் கொள்வது மட்டுமின்றி,

சகோதர முறையில் ஆலோசனங்கள் கூறி அவர்களின் சேவைகளை நன்கு நிறைவேற்ற உதவுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

7: பம்பாயிலுள்ள அங்கீகாரம் பெற்ற கௌரவ ஹஜ் நல அதிகாரிகள் :

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கவனிக்க பம்பாயில், மூன்று கௌரவ நல அலுவலகளுக்கு தமிழ்நாடு அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது. இந்த அலுவலர்களின் விபரம் பின்வருமாறு :

(1) கௌரவ நல அலுவலர்
(Honorary Haj Welfare Officer)
திரு. ஏ. ஹாஜி அப்துல் ரஹீம்,
தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி,
எண். 39/43, மஸ்ஜித் தெரு,
பம்பாய்-400 003.
(தொலைபேசி எண். 330721)

(2) கௌரவ நல கூடுதல் அலுவலர்கள்
(Honorary Additional Welfare Officers)

(i) திரு. எஸ். கே. அமீன் அகமது,
எண். 3/44, கமால் மான்சன்,
ஆர்தர் பந்தர் சாலை,
பம்பாய்-400 005.
(தொலைபேசி எண். 219121-492)

(ii) திரு. எச். முகமது அப்ஸல்,
5, அல்கரீம் மன்ஜில் முதல் மாடி,
பால்டன் சாலை,
பம்பாய்-400 001.
(தொலைபேசி எண். 267650)

இந்த கௌரவ நல அலுவலர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகள் பம்பாயிலிருக்கும்போது அவர்களுக்கு இலவசமாக, தங்களாலியன்ற உதவிகளைச் செய்வார்கள். இவர்களது பணி கௌரவப் பணியாகுமென்பதும், இவர்களது பணி, பணியாளரமைப்பு முதலியவற்றிற்கு, தமிழ்நாடு அரசோ, தமிழ்நாடு ஹஜ் குழுவோ செலவுகள் ஏதும் செய்வதில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. புனித ஹஜ் பயணிகளுக்குத் தேவையான உதவிகளுக்கு இவர்களையும் அணுகி பயனடையலாம்.

## 8. அமீறுல் ஹஜ் :

புனிதப் பயணிகளின் கப்பல் பயண வேளையில் அவர்களுக்கு உதவி செய்யும் தொண்டர் ''அமீறுல் ஹஜ்'' என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு ஹஜ் கப்பலிலும் ஒரு அமீறுல் ஹஜ் நியமனம் செய்யப்படுவார். பம்பாயிலிருந்து புறப்படும் கப்பலில் பம்பாய் ஹஜ் குழுவும் ஜித்தாவிலிருந்து திரும்பிவரும் கப்பலில் ஜித்தாவிலுள்ள இந்திய தூதரகமும் அமீறுல் ஹஜ்ஜை நியமிக்கின்றன. பயணிகளுக்குச் சேவை செய்வதில் அக்கரையும் ஆர்வமும் காட்டக்கூடிய நண்பர்களைத்தான் அமீறுல் ஹஜ் ஆக நியமிப்பார்கள். அமீறுல் ஹஜ் தமக்கு உதவிசெய்ய அதுபோல் அக்கரையும் ஆர்வமுள்ள சிலரை தொண்டர்களாக நியமித்துக்கொள்வார்.

கப்பல் கம்பெனியார் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறார்களா என்று கண்காணித்துக் கொள்வதும் குறைகள் ஏதேனுமிருந்தால் அதை கப்பலின் கேப்டனின் அல்லது சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்து அக்குறைகளை நிவர்த்தி செய்வதும், இல்லாவிட்டால் அதுபற்றிய புகார்களை பம்பாய் ஹஜ் குழுவிற்கோ ஜித்தாவிலுள்ள இந்திய தூதரகத்திற்கோ எழுதி அனுப்புவதும் அமீறுல் ஹஜ்ஜின் பொறுப்புகளாகும். மூன்று நகல்களாக ஓர் அறிக்கையினை அமீறுல் ஹஜ் பம்பாய் ஹஜ் குழுவிற்கு அனுப்புவார். அவாகள் தம்முடைய அறிக்கையையோ புகார்களையோ மற்ற யாருக்காவது அல்லது பத்திரிகைகளுக்கு அனுப்பமாட்டார்.

ஹஜ் பயணிகள் தம்மை எளிதாக சந்திக்க இயலும் முறையில் அமீறுல் ஹஜ் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் அமர்ந்திருப்பார். கீழே குறிப்பிட்ட பணிகளையும் அமீறுல் ஹஜ்ஜும் அவரின் தொண்டர்களும் செய்வார்கள் :

(1) கப்பலில் தினமும் எட்டு மணி நேரம் மட்டும் தரப்படும் குடி தண்ணீரையும் குறிப்பிட்ட காலயளவில் மட்டும் தரப்படும் குளிர்ந்த தண்ணீரையும் சிக்கனமாக பயன்படுத்துவது பற்றி பயணிகளுக்கு அறிவுரைகளை வழங்குதல் ; குழாய்கள் சரியாக இயங்குகின்றனவா என்று பார்வையிடுதல் ;

(2) கப்பலிலுள்ள கிப்லா காட்டியை கப்பலின் திசை மாறும் போதெல்லாம் சரியாக பொருத்துதல் ;

(3) பயணிகளுக்கான உணவின் அளவைச் சரிபார்த்தல், சமைத்த உணவை பார்வையிடுதல் ;

(4) கப்பலிலுள்ள சிறிய நூலகத்தில் பயணிகளுக்குத் தேவையான புத்தகங்கள் உண்டா என்று பார்வையிடுதல் ; இல்லாவிட்டால் அமீறுல் ஹஜ்ஜின் அறிக்கையில் அதுபற்றி குறிப்பிடுதல், முதலியன.

கப்பல் பயண வேளையில் புனிதப் பயணிகளுக்கு ஏதாவது இடர்பாடுகள் ஏற்பட்டால், உடனடியாக அமீறுல் ஹஜ்ஜின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். கப்பல் சென்று சேரவேண்டிய துறைமுகத்தை அடைந்ததும் அமீறுல் ஹஜ்ஜின் பொறுப்புகளும் வேலைகளும் முடிவடைகின்றன.

# VII. பயணத்தின்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்

**1. உங்கள் சொந்த ஊரில் :**

பம்பாயிலிருந்து ஜித்தா சென்று திரும்பி வருவதற்கான பயணத் திட்டத்தைப் பார்த்து அதற்கேற்ருர்போல் உங்கள் புனிதப் பயணத்திற்கு நீங்கள் ஆயத்தம் செய்யவும், திரும்பும் நாள் குறித்து ஏற்பாடு செய்து கொள்ளவும் வேண்டும். பம்பாய் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் பயணச் சீட்டுகளை வாங்கிக் கொள்ள, பம்பாய்-ஜித்தா-பம்பாய் பயண அட்டவணை உதவும். பம்பாய் ஹஜ் குழு 'C' படிவத்தில் குறிப்பிடு கின்ற தேதியிலாவது நீங்கள் அங்கு சென்று சேரும் விதம் ஏற்பாடுகளை செய்யவும்.

ஹிஜாஸ் மாகாணத்தில் (சவூதி அரேபியாவில்) தங்கியிருக்கையில் அரபி மொழி மிகவும் உதவியாக இருக்கும். அன்ருடப் பேச்சு வார்த்தை யில் வரக்கூடும் சில அரபி வார்த்தைகளும் தமிழ் மொழி பெயர்ப்பும் இணைப்பு I-ல் தரப்பட்டுள்ளன. அதை நீங்கள் பயின்று கொள்வது நன்று.

ஹஜ் பயணத்திற்காக 3-4 மாதங்களைச் செலவிடப் போகிறீர்கள். அதற்கிடையே பல சூழ்நிலைகளை நீங்கள் நேரிடக்கூடும். கீழே குறிப் பிட்டுள்ள விஷயங்களை நீங்கள் நன்ருகத் தெரிந்திருப்பது அவசியமாகு மென்று அனுபவமிக்க ஹாஜிகள் தெரிவிக்கின்றனர்.

(i) தயம்மும் பற்றிய விபரம்

(ii) ஜனுஸாத் தொழுகை பற்றிய விபரங்கள்

இந்த வழிகாட்டியின் முக்கிய நோக்கம் ஹஜ் சம்பந்தப்பட்ட அலுவல் நடைமுறைகளை விளக்குவதாகும். ஹஜ்ஜின் முறையை நன்கு அறிய நம்பகமான மார்க்கப் புத்தகங்களை நீங்கள் படிக்கவேண் டும். இல்லாவிட்டால் உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இஹ்ராம் பற்றிய விதிகள், மக்காவிலும் மதீனுவிலும் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய விவரங்கள், தவாபு, ஸயீ முதலியன பற்றிய விவரங்கள், துஆக்களை ஓதும் முறை, சலாம் சொல்லும் முறை, குர்பானி கொடுக்கும் முறை இப்படியான எல்லா விஷயங்களையும் தெரிந்திருப்பது நன்று. இந்த வழிகாட்டியின் அடுத்த ஓர் அத்தியாயத் தில் ஹஜ்ஜின் ஐந்து நாட்கள் பற்றி சுருக்கமாக சொல்லப் பட்டுள்ளது. அதை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். ஹாஜிகள் ஓதக்கூடிய துஆக்கள் இணைப்பு II—ல் தரப்பட்டுள்ளன. பம்பாய் ஹஜ் குழு வழங்கும் 'மனுஸிக்குல் ஹஜ்ஜின்' அடிப்படையில் தயார் செய்த இந்த துஆக்களை நீங்கள் நன்ருகப் படிப்பது உங்களுக்கு உதவியா யிருக்கும்.

நீங்கள் பம்பாய் புறப்படுமுன் தேவையான பயணச் சாமான்களை வாங்கவும் பயணத்திற்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும்

வேண்டும். சொந்த ஊரிலேயே உற்றார் உறவினரிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களை பம்பாய்க்கு அழைத்துச் சென்ருல் இடவசதி போன்ற பல பிரச்சினைகள் எழக்கூடும். ஹாஜிகள் பலர் சேர்ந்து பம்பாய்க்கு பயணம் செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இஸ்லாமிய ஒழுங்கு முறைகளைக் கடைபிடித்துக் கொள் ளுங்கள். பணத்தையும் ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். அன்னியச் செலாவணிக்கான தொகையை, நீங்கள் புறப்படும் முன்பே பம்பாய் ஹஜ் குழுவிற்கு அனுப்பி வைத்திருப்பீர் களல்லவா ?

சென்னை வழி நீங்கள் பயணம் செய்தால், தேவையாளுல் சித்தீக் சராயில் தங்கலாம். உதவிகளுக்கு தமிழ்நாடு ஹஜ் குழுவையும் அணுகலாம்.

2. பம்பாய் மாநகரில் :

நீங்கள் பம்பாய்க்கு விமானம் மூலம் பயணம் செய்தால், சாண்டா குரூஸ் விமான நிலையத்தையும், ரெயில் மூலம் பயணம் செய்தால் 'விக்டோரியா டெர்மினஸ்' ரெயில் நிலையத்தையும் அடைவீர்கள். சென்னை-தாதர் விரைவு வண்டி தாதரில் நின்றுவிடும். பம்பாயை அடையும்போது லைசென்ஸ் பெற்ற ரெயில்வே கூலிகள், பம்பாய் ஹஜ் குழுவின் பதிவுபெற்ற மஸ்தூர்கள், பிளாட்பாரத்தில் பணியாற்றும் காவலர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுங்கள். மீட்டர் பொருத்தாத வாடகை வண்டியிலோ அல்லது குதிரை வண்டியிலோ நீங்கள் பயணம் செய்தால், கட்டணம் என்னவென்று முதலிலேயே தெரிந்து கொள்ளுங்கள். விமான நிலையத்திலிருந்து முஸாபிர்கானா செல்ல வாடகைக் கார் கட்டணம் சுமார் ரூ. 30 ஆகும். உங்கள் பெட்டி படுக்கைகளை கவனமாக வைத்துக் கொண்டு, சாபூசித்தீக் முஸாபிர் கானாவுக்கோ அல்லது தமிழ்நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜுக்கோ செல்லுங்கள். முஸாபிர்கானாவில் தங்கவேண்டுமானால் 'B' படிவத் துடன் முஸாபிர்கானா அதிகாரிகளைச் சந்தித்து இடவசதி பெறவும்.

நீங்கள் பம்பாயில் தங்கியிருக்கையில் சுகாதாரத்தை கவனித்துக் கொள்ளவேண்டும். உங்களின் உடைமைகளை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். புதியவர்களையும் பழக்கமில்லாதவர்களேயும் நம்ப வேண்டாம். உங்களுக்கு தொல்லைகள் எவையேனுமிருப்பின் ஹஜ் குழுவுடன் தொடர்பு கொள்ளலாம். ஹஜ் குழுவினரால் அனுப்பப்பட்ட காவலர்கள் முஸாபிர்கானாவில் இரவும் பகலும் பணியாற்றி வருகின்றனர். தேவையானால் அவர்களுடைய உதவியை நாடுங்கள். பம்பாய் சுமார் 70 லட்சம் ஜனத்தொகையுள்ள பெரிய நகரமாகும். பம்பாயை நன்கு அறிந்திருந்தாலொழிய, சுற்றி வருவதைத் தவிர்க்க வேண்டும். ஓய்வு நேரத்தை, தொழுகைக்காகப் பயன்படுத்தவும்.

ஹஜ் குழு உங்கள் கப்பலுக்கான பதிவு ஏற்பாட்டை அறிவிக்கும் போது நீங்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளைக் கவனிக்க வேண்டும் :—

'B' படிவம், உலக நாடுகள் சுகாதாரச் சான்றிதழ் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு நீங்கள் 3-ஆம் எண்ணுள்ள அறைக்குச் செல்ல வேண்டும். வெளியிலிருந்து முஸாபிர்கானவிற்கு வரும்போது அதன்

நுழைவாயில் பக்கம் வலது புறம் திரும்பி இந்த அறைக்குச் செல்லலாம். 3-ஆம் அறையிலிருக்கும் மருத்துவ அலுவலரிடம் உங்கள் சுகாதாரச் சான்றிதழைக் காட்டவும். நீங்கள் ஏற்கனவே பெரிய அம்மை தடுப்பு ஊசியும் காலரா தடுப்பு ஊசியும் போட்டுக் கொண்டதற்கான சுகாதாரச் சான்றிதழைப் பெற்று ஒழுங்காக வைத்திருந்தால் அதைச் சரிபார்த்து மருத்துவ அலுவலர் அதன் மேலும், 'B' படிவத்திலும் முத்திரையிடுவார். நீங்கள் ஏற்கனவே மேற்சொன்ன தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளவில்லையெனில், காலரா தடுப்பு ஊசியை இங்கு போட்டுக் கொள்ளலாம்.

அறை எண் 6-ல் பெண்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்படும். அதேபோல் பெரியம்மை தடுப்பு ஊசி ஆண்களுக்கு அறை எண் 8-லும் பெண்களுக்கு அறை எண் 7-லும் போடப்படும். கர்ப்பிணிகள் எத்தனை மாத கர்ப்பமென்பதையும் அறை எண் 7-ல் சோதனை செய்யப்படுவார்கள். கர்ப்பிணிகள் தாங்கள் எத்தனை மாத கர்ப்பமென்று சரியாகச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் கப்பலில் ஏற அனுமதி மறுக்கப்படலாம். பம்பாயிலிருந்து கப்பல் புறப்படும்போது 5 மாதமோ அதற்கு மேலோ கர்ப்பமுள்ள பெண்கள் ஹஜ்ஜுக்குச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மேற்சொன்ன வேலையை முடித்த பின் நீங்கள் பதிவு அலுவலகத்திற்குச் சென்று அத்தியாயம் IV பத்தி 7-ல் கூறியபடி மற்ற ஆவணங்களைப் பெற வேண்டும்.

நீங்கள் ஹஜ்ஜுக்கு செல்லும்போது கொண்டு செல்ல வேண்டிய 'இஹ்ராம் உடைகளையும் 'கபன்' துணியையும் விற்க பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. அவற்றை சம்பந்தப்பட்டமுகப்பிலிருந்து வாங்கிக் கொள்ளவும். அறை எண் 14-ல் சென்று சவூதி அரேபிய நாட்டில் உங்களுக்குத் தேவையான உணவு தானியங்களுக்கு ஏற்பாடு செய்துக் கொள்ளலாம்.

கப்பலில் நீங்கள் பயணம் துவங்கு முன், கப்பலில் சிறு பொருள்கள் வாங்குவதற்கான கூப்பன்களைப் பெறலாம். இந்த கூப்பன்களை "மொகல்லைன்" கப்பல் நிறுவனத்தாரிடமிருந்து பணம் கொடுத்து வாங்கலாம். கூப்பன்களைக் கொடுத்துத்தான் கப்பலிலிருந்து அதிகமான தேநீர், சிகரெட்டு, குளிர்ந்த பானங்கள் முதலியவற்றை வாங்க முடியும். பயன்படுத்தாத கூப்பன்களுக்கு பணம் திரும்பத் தரப்பட மாட்டாது.

### 3. கப்பற் பயணம் துவங்கும் நாளில் :

கப்பற் பயணம் துவங்கும் நாளுக்கு ஒருநாள் முன்னதாகவே உங்களின் மூட்டை முடிச்சுகளை கூலியாள் வந்து எடுத்துச் செல்வார். பயணத்தின்போது அவசியம் வைத்திருக்க வேண்டிய பொருள்களை மட்டும் உங்களிடம் வைத்துக்கொண்டு மீதமுள்ள அனைத்தையும் மேற்படி மூட்டை முடிச்சுகளில் கட்டிவிட வேண்டும். ஒவ்வொரு மூட்டை முடிச்சின் மீதும் ஹஜ் குழு வழங்கிய லேபிலை ஒட்டி விடவும். லேபிலில் சம்பந்தப்பட்ட விபரங்களை எழுதியிருக்க வேண்டும். அடையாளத்திற்காக உடுக்குறியை மட்டும் போடக் கூடாதென்பது முக்கியமாகும். இது சவூதி அரேபிய அரசின் விதி ஆகும்.

உங்களின் உற்றார் உறவினர் யாராவது துறைமுகத்துக்கு வர வேண்டுமென பிடிவாதம் செய்தால் உங்களின் பாஸ்போர்ட் எண்ணை அவர்களிடம் குறித்துக் கொடுக்கவும். பாஸ்போர்ட் உங்களிடமே இருக்கவேண்டும். உற்றார் உறவினர்கள் 'யெல்லோ கேட்' (Yellow Gate) காவல் நிலையத்திற்குச் சென்று தலா ரூ. 2 வீதம் செலுத்தி நுழைவுச் சீட்டை பெற்று உள்ளே செல்லலாம்.

கப்பற்பயணம் துவங்கும் நாளில் உங்களுடைய வசதிப்படி வண்டி ஒன்றை ஏற்பாடு செய்து, குறிப்பிட்ட கப்பல் துறையை அடையுங்கள். பொதுவாக பல்லார்டு வாராவதி (Ballard Pier) மோல் நிலையம் (Mole Station) புனிதப் பயணிகளின் கப்பல் துறையாக உள்ளது. இது முஸாபிர்கானாவிற்கு 2 மைல் தொலைவில் உள்ளது. கப்பல் புறப்படுவதற்கு குறைந்தது ஆறு மணி நேரத்திற்கு முன்னதாக நீங்கள் கப்பல் துறையை அடைய வேண்டும். அங்கே உங்களுக்கு உதவுவதற்கும், ஆலோசனை கூறுவதற்கும் ஹஜ் குழுவின் உறுப்பினர்கள், மற்றும் பணியாளர்கள், கப்பல் போக்குவரத்து, கப்பல் சுங்கம், சுகாதாரம் ஆகிய துறைகளின் அலுவலர்கள், சமூகநல ஊழியர்கள், காவலர்கள் ஆகியோர் இருப்பர். நீங்கள் கப்பல் துறையில் இருக்கும்போது உங்கள் பயணத்திற்கான ஆவணங்கள் மற்றும் பயணப் பெட்டிகளின் சாவிகளை உங்களிடம் வைத்துக் கொள்ளவேண்டும்.

கப்பல் துறையை நீங்கள் அடைந்ததும் கீழ்க்கண்ட நடைமுறைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

1. உங்களின் மூட்டை முடிச்சுகளைச் சரி பார்க்கவும். உங்கள் பாஸ்போர்ட்டையும், உங்களுடன் பயணம் செய்யும் பெண் பயணிகளின் பாஸ்போர்ட்டுகளையும் கையில் வைத்துக் கொள்ளவும். கப்பலில் ஏறுவதற்கான அனுமதிச் சீட்டின் மீது சம்பந்தப்பட்ட அதிகாரியின் கையெழுத்துப் பெறவும்.

2. மூட்டை முடிச்சுகள் அனைத்தையும் சரி பார்த்த பிறகு பெண்களின் பாஸ்போர்ட்டை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து அவர்களை பெண் பயணிகளுக்கான அறைக்கு அனுப்பவும். ஆண்கள், ஆண்களுக்கான அறைக்குச் செல்லவும்.

3. அங்குள்ள முகப்பில் வேலை பார்க்கும் காவல் அதிகாரியிடம் உங்களின் பாஸ்போர்ட்டைக் கொடுக்கவும். அவர் கேட்கும் கேள்விகளுக்கு சரியாக பதிலளியுங்கள். பிறகு கப்பலில் ஏறுவதற்கான அனுமதிக் கார்டில் அவர் தம் கையெழுத்தையும், முத்திரையையுமிட்டு பாஸ்போர்ட்டை உங்களிடம் திருப்பித் தருவார். ஆண்களுக்கும், பெண்களுக்கும் நடைமுறை ஒன்றேதான். ஆனால் இடங்கள் மட்டும் தனியாக இருக்கும்.

4. ஹஜ் குழுவின் மருத்துவ அலுவலர் உங்களின் சுகாதாரச் சான்றினை சரிபார்த்த பிறகு உங்களை முன்னேற அனுமதிப்பார்.

5. துறைமுக சுகாதார அதிகாரி உங்களின் சுகாதாரச் சான்றிதழைப் பரிசோதனை செய்து கப்பலில் ஏறுவதற்கான அனுமதிச் சீட்டில் அவரின் முத்திரையைப் பதிப்பார். இங்கு திரும்பி வருவதற்கான பயணச் சீட்டு பாஸ்போர்ட்டிலிருந்து அகற்றப்படும். பெண்களுக்கான

ஆய்வு இடத்தில் அவர்கள் கர்ப்பவதியானால் அதன் கால அளவை சரி பார்ப்பார்கள். பெண் பயணிகள் இங்குள்ள பெண் சுங்க அதிகாரியிடம் சொல்லி தாங்கள் அணிந்திருக்கும் நகைகளின் விபரத்தை பாஸ்போர்ட்டில் தவறாமல் குறிப்பிட ஏற்பாடு செய்ய வேண்டும். பெண்கள் 5,000 ரூபாய்க்கு மேற்படாத அணிந்துக் கொள்ளும் நகைகளை எடுத்துச் செல்லலாம்.

6. ஹஜ் குழுவின் எழுத்தர் உங்களின் கூலி அட்டையைச் சரி பார்த்து உங்களின் இருக்கை பற்றிய விபரம் தெரிவிப்பார். சிற்றுண்டிப் பொட்டலமொன்றையும் உங்களிடம் தருவார்கள்.

7. இப்போது நீங்கள் கப்பலை நோக்கிச் செல்லலாம். உங்களுடன் பயணம் செய்யும் பெண் புனிதப் பயணிகள் வருவதற்காக நீங்கள் காத்திருக்கவேண்டாம். ஏனென்றால், அவர்கள் பெண்களுக்கான ஆய்வு இடத்தினின்று நேரடியாக கப்பலுக்குச் சென்றுவிடுவார்கள்.

8. கப்பலில் ஏறுவதற்கான ஏணியினருகே நிற்கும் காவலர்கள் உங்கள் பாஸ்போர்ட்டிலிருந்து கப்பலில் ஏறுவதற்கான அனுமதிச் சீட்டை எடுத்துக் கொள்வார்கள். பிறகு நீங்கள் கப்பலில் ஏறலாம்.

## 4. பயணக் கப்பலில் :

பம்பாய்க்கும் ஜித்தாவிற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 2,300 மைல்களாகும் (Nautical miles). மொகல் லைனின் கப்பலில் ஜித்தா செல்வதற்கு 7 முதல் 9 நாட்களாகும். புயல் போன்ற காலநிலை இல்லாவிட்டால் பொதுவாக பயணம் சௌகரியமாகவே இருக்கும். ஆனால் ''சொகோட்ரா'' (Socotra) என்னும் இடத்தில் அடிக்கடி புயல் போன்ற நிலை உருவாகிறது. இந்நிலை குறுகிய கால அளவே இருப்பதால் புனிதப் பயணிகள் இதைக் குறித்து பீதி அடையத் தேவையில்லை.

கப்பல் பயணத்தின்போது புனிதப் பயணிகள் அனைவரும் அவர்கள் நம்பிக்கையின் அடிப்படைக் கொள்கைகளான தோழமை, சகோதரத்துவம் ஆகிய கொள்கைகளைப் பின்பற்றுங்கள். எவரும் தங்களது விருப்பங்களுக்காகவும் வசதிகளுக்காகவும் பிறருக்குத் தொல்லை விளைவிக்கக்கூடாது. சிறிய சச்சரவுகளை இது தவிர்க்கும். பிறருக்கு, குறிப்பாக உடல்நலம் குன்றியவர்கள், முதியவர்கள், மகளிர் ஆகியோருக்கு உதவி செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும். தொழுவதிலும், கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதிலும் ஓய்வு நேரத்தை செலவிட வேண்டும்.

கப்பல் தளத்தில், கிப்லா காட்டும் கருவியும், ஒன்றுகூடி இமாம் ஜமாஅத்தாக தொழுகை நடத்துவதற்கு இடவசதியும் உண்டு. மத சம்பந்தமான நூல்கள் அடங்கிய நூலகம் ஒன்றும் அமைந்துள்ளது. முடிதிருத்தும் வசதியும், சலவை செய்யும் வசதியும் செய்து தரப்பட்டுள்ளன. பயணிகளின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்குச் சிற்றுண்டிச்சாலை உண்டு. விரும்பினால், முதல் வகுப்பு பயணிகளுக்கு ஓய்வு அறையும் பெண்களுக்கு காற்று வசதிக்கான இடமும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கப்பலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியான குளியல் அறைகளும், கழிப்பிடங்களும் உள்ளன. கழிப்

பிடங்கள் தினமும் நான்கு முறை துப்புரவு செய்யப்பட்டு, தொற்றுநோய் பரவாமல் மருந்து தெளிக்கப்படும். பொதுவான உபயோகத்திற்கு கடல்நீர் வழங்கப்படுகிறது. பருகுவதற்கு குளிர்ந்த தண்ணீரும் கிடைக்கும். குளிர் நீர், குடிநீர் இவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பிடப்பட்ட காலை உணவு, மதிய உணவு, பிற்பகல் தேநீர், இரவு உணவு முதலியவை அவரவர் இருக்கைகளில், அவரவர் பாத்திரங்களில் வழங்கப்படும். காலைச் சிற்றுண்டிக்கு தேநீருடன் 2 ரொட்டித் துண்டுகளோ, அல்லது 2 பிஸ்கட்டுகளோ, அல்லது ஒரு முட்டையோ, அல்லது தந்தூர் ரொட்டியும் கூட்டுக் கறியுமோ, அல்லது முட்டையும் தந்தூர் ரொட்டியுமோ, அல்லது தந்தூர் ரொட்டியும் பருப்புமோ, அல்லது 2 பிஸ்கட்டுகளும் சேமியா பாயாசமுமோ, அல்லது உருளைக் கிழங்கும் இறைச்சியும் சேர்த்த கீமாவும் தந்தூர் ரொட்டியுமோ, அல்லது தந்தூர் ரொட்டியும் உருளைக் கிழங்குக் கூட்டுக் கறியுமோ வழங்கப்படும்.

பயணிகளுக்கு ஒதுக்கப்படும் அறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். தங்களுக்கு ஒதுக்கியதைக் காட்டிலும் அதிக இடத்தை பயணிகள் எடுத்தால் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படும். கப்பல் கம்பெனியார் ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் 450 கிராம் துவைக்கும் சோப்பு வழங்குவார்கள். இதை கப்பலில் சலவைக்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

முறையான மருத்துவமனை கப்பலின் தளத்தில் உள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக புறநிலைச் சிகிச்சை பெறவும், மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவும் வசதி உள்ளது. நோயுற்ற பயணிகளுக்குத் தனி உணவு கொடுக்கப்படும். பயணிகளில் யாருக்கேனும் தொற்றுநோய் பீடித்திருப்பதாகத் தெரிந்தால் அவர்கள் தனியாக ஒதுக்கி வைக்கப்படுவார். தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க பயணிகள் கப்பலின் சுகாதார நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும். சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் எதனேயும் பயணிகள் செய்யக் கூடாது. துப்புரவாக இருக்கவேண்டும்; கப்பல் தளத்தில் எச்சில் துப்பக்கூடாது; ஆடைகளையும் பாத்திரங்களையும் குறிப்பிட்ட இடங்களிலன்றி வேறு இடங்களில் கழுவக்கூடாது; கழிப்பிடங்களேயும் குளியலறைகளையும் அழுக்காக்கக் கூடாது; இருக்கைகளின்மேல் வாந்தி எடுக்கக்கூடாது. இதற்கு மாருக நடந்தால் அது மற்ற பயணிகளுக்கு அசௌகரியத்தை அளிப்பது மட்டுமின்றி சுகாதாரத்தையும் பாதிக்கும்.

பயணிகளுக்குத் தேவைப்படுகிற தண்ணீர், உணவு, மருத்துவம் முதலிய வசதிகள் சம்பந்தமாக அசௌகரியமோ, இடர்ப்பாடோ, வசதிக் குறைவோ ஏற்பட்டால் அக்குறைகளை நீக்குவதற்கு அமீறுல் ஹஜ்ஜிடம் தொடர்பு கொள்ளவேண்டும். முக்கிய அறிவிப்புகளைத் தெரிவிக்க ஒலி பெருக்கியும் வைக்கப்பட்டுள்ளது. இது மூலம் அமீறுல் ஹஜ் வழங்கும் அறிவுரைகளின்படி நீங்கள் செயல்பட வேண்டும். கப்பலில் புகார் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. தேவையானுல் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. **மீகாதே ஹஜ்ஜில் :**

நீங்கள் செல்லும் கப்பல் ''யலம் லம்'' (Yalam lam) என்ற இடத்தை அடையும்போது அது ''மீகாதே ஹஜ்'' எல்லைக்குள் உள்ளது. யலம் லம் அடைவதற்கு முன்னதாகவே நீங்கள் முடிதிருத்திக் கொள்ளவும், குளித்த பிறகு தையலுள்ள ஆடைகளை கழற்றிவிட்டு இஹ்ராம் உடையை அணிந்துக் கொள்ளவும் வேண்டும். இதற்கு அமீருல் ஹஜ்ஜின் ஆலோசனையையும் உதவியையும் நாடலாம்.

(முந்திய கப்பலில் நீங்கள் பயணம் மேற்கொண்டு, முதலில் சியாரத்திற்காக மதீனாவுக்குச் செல்ல வேண்டியிருந்தால் ''யலம் லம்'' என்ற இடத்தில் இஹ்ராம் உடை அணிய வேண்டாம். இவ்வாறு நேருமாயின் மதீனாவிலிருந்து மக்காவுக்குத் திரும்பி வரும்போது ''பீர் அலி'' என்ற இடத்தில் இஹ்ராம் உடை அணிந்துக் கொள்ளவேண்டும். ''பீர் அலி'' என்ற இடம் மதீனாவிலிருந்து மக்கா செல்லும் பயணிகளுக்கு ''மீகாத்'' ஆகும்).

6. **விமானப் பயணிகளின் கவனத்திற்கு :**

ஏர் இந்தியா, சவூதி அரேபிய விமான கம்பெனி (Saudia) ஆகியவற்றின் விமானங்களை வாடகைக்கு எடுத்து, பம்பாய் ஹஜ் குழு புனிதப் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறது. ஹஜ்ஜுக்குச் செல்லும்போதும், ஹஜ்ஜை முடித்து திரும்பும்போதும் இடையில் எவ்விடத்திலும் நிற்காத விமானங்களை இந்த விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் ஏற்பாடு செய்கின்றன. பம்பாயிலிருந்து ஜித்தாவுக்குச் செல்ல சுமார் 5 மணி நேரம் ஆகும்.

சவூதி அரேபியாவில் ஒவ்வொரு பயணியும் 45 நாட்கள் தங்கும் வகையில், திரும்பி வருவதற்கான விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. பம்பாய்—ஜித்தா—பம்பாய் பயணச் சீட்டுகள் மட்டுமே கொடுக்கப்படுகின்றன. அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான விண்ணப்பங்கள் வந்தால் பயணிகளுக்கான இருக்கைகள் சீட்டு குலுக்கல் மூலம் ஒதுக்கப்படுகின்றன. திரும்பி வருவதற்கான சீட்டை உபயோகப்படுத்தாவிட்டால் அதற்கான கட்டணத்தை திரும்பப் பெறமுடியாது.

விமானத்தில் இலவசமாகக் கொண்டு செல்லக்கூடிய பயணச் சாமான்களின் எடை பயணி ஒருவருக்கு 30 கிலோ கிராமாகும். ஒரு விமானத்தில் மொத்தமாக இரண்டு கைக் குழந்தைகளுக்குமேல் அனுமதிக்கப்படமாட்டாது.

# VIII. சவூதி அரேபியாவில் தெரிய வேண்டிய விஷயங்கள்

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத் ஆகும். அந்நாடு மன்னரால் ஆட்சி செய்யப்படுகிறது. ஹஜ் பயணிகள் அந்நாட்டின் மேற்கு கடலோரத்திலுள்ள ஜித்தா துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் சென்று அங்கிருந்து மக்கா, மதீனா முதலிய புண்ணியத்தலங்களுக்கு பயணமாகிறார்கள். இத்தலங்கள் இருக்கின்ற மாகாணத்தின் பெயர் ஹிஜாஸ் ஆகும். ஹிஜாஸில் ஹாஜிகளின் நலனுக்காக உள்ள ஏற்பாடுகளும், மற்ற விபரங்களும் இந்த அத்தியாயத்தில் தரப்படுகின்றன.

## 1. "கஅபா" :

புனித ''கஅபா''வானது மக்க மாநகரத்தின் மையத்திலுள்ள புனித மசூதியில் உள்ளது. இது கிப்லாவைக் குறிக்கிறது ; அதாவது இத் திசையை நோக்கியே இறைவணக்கம் நிறைவேற்றப்படுகின்றது. ஒரே ஒரு மையத்தைக் கொண்டுள்ள ஒரு வட்டத்தின் சுற்றளவைப்போல் இவ் வுலக முஸ்லீம்கள் இயங்குகிறார்கள் என்பதை இது குறிக்கிறது. கஅபா, வணங்கும் திசையை மட்டுமே குறிப்பது. அது வணங்குவதற் குரிய பொருள் அல்ல.

மார்க்கத் தந்தை எனப் போற்றப்படும் நபி இப்ராஹீம் (அ) அவர் களும் அவர்களின் தவப்புதல்வர் இஸ்மாயில் (அ) அவர்களும் இறை வனின் முதல் வீடான கஅபாவை கட்டி இறைவனை வணங்குவதற்காக அதனை அர்ப்பணம் செய்து விட்டார்கள். இந்த கஅபா (அர்த்தம் கன சதுரம்) பலமுறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் வடிவம் எடுத்துக் கூறும் முறையில் மாற்றியமைக்கப்படவில்லை. அதன் நீளம் 12 மீட்டர், அகலம் 10 மீட்டர், உயரம் சுமார் 16 மீட்டர். திருக் கஅபாவின் நுழைவாயிலுக்கருகேயுள்ள மூலையில் ''ஹஜ்றுல் அஸ்வத்'' எனும் புனித கறுப்பு நிற கல் பொருத்தப்பட்டுள்ளது.

புனித கஅபாவானது திருக்குர்ஆன் ஆயத்துக்களை பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட்ட கறுப்பு நிற வெல்வெட் போர்வை ஒன்றால் போர்த்தப்பட்டுள்ளது. அதுவே கிலாப் அல்லது கிஸ்வா என அழைக்கப் படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புனித ஹஜ்ஜிற்கு முன்பாக கஅபா தூய்மைபடுத்தப்பட்டு அதன் கிஸ்வா சவூதி மன்னரால் மாற்றப்படுகிறது.

## 2. ஜித்தாவிலுள்ள இந்திய தூதரகம் :

ஜித்தாவில், மதீனாசாலையில், 'பக்தாதியா' அருகே, ஷேக் முகம்மது இபுராகீம் மசூத் கட்டிடத்தில் இந்திய தூதரகம் இயங்குகிறது. இதன் தொலைபேசி எண்கள் 21601, 21602.

இந்தியாவிலிருந்து புனிதப் பயணிகள் ஜித்தாவைச் சென்றடையும் போது, இந்தியத் தூதரகம் அவர்களுக்கு உதவ சுங்கச் சாவடியில்

மருத்துவமனைப் பிரிவு ஒன்றை நடத்துகிறது. மதீனத்துல் ஹுஜ்ஜாஜி லுள்ள மருத்துவமனைப் பிரிவிலும் மருத்துவ உதவியினை அளிக்கிறது. தூதரக அலுவலர்களை இந்த மருத்துவமனைப் பிரிவுகளிலும் சந்திக்கலாம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இந்தியத் தூதர், மற்றும் ஹஜ் அதிகாரி அல்லது உதவி ஹஜ் அதிகாரி, தவறாமல் மக்காவிற்கு வருகின்றனர். பிற நாட்களிலும் வருவார்கள். புனிதப் பயணிகள் அவர்களை மக்காவில் உள்ள இந்திய மருத்துவமனையில் சந்திக்கலாம். மேலும் புனிதப் பயணிகளைக் கவனிக்க மக்காவில் உள்ள இந்திய மருத்துவமனையில் உள்ள ஹஜ் அலுவலகத்தில் காலை 2-00 மணி முதல் 6-00 மணி வரை (அராபியா நேரப்படி) எழுத்தர் இருப்பார். தூதர், ஹஜ் அதிகாரி, உதவி ஹஜ் அதிகாரி, ஆகியோா அடுத்த முறை மக்காவிற்கு வருவது பற்றிய தகவல் இவ்வெழுத்தரிடம் கேட்டுத் தெரியலாம்.

உங்களுடைய வசதிகளுக்காக மினாவில் ஜும்ரா அவ்வல் என்னும் இடத்திற்கு அருகிலுள்ள ஒரு கட்டிடத்தில் நமது தூதரகம் தன்னுடைய முகாம் அலுவலகத்தை அமைக்கும். தற்காலிக மருத்துவமனையும் அங்கு அமைக்கப்படும். மினாவில் மூன்று மண்டல மருத்துவப் பிரிவு களை முக்கிய முஅல்லிம்களின் முகாம்களில் தூதரகம் ஏற்பாடு செய்யும்.

அரபாத்தில் தூதரக தற்காலிக அலுவலகமும், மருத்துவமனையும் கூடாரங்களில் செயல்படும். அவைகளின் மேல் நமது தேசியக்கொடி பறக்கும். உங்களுக்கு உதவி செய்ய, தூதர், ஹஜ் அதிகாரி, உதவி ஹஜ் அதிகாரி இவர்களும் ஏனைய தூதரக அதிகாரிகளும் அங்கு இருப் பார்கள்.

### 3. மருத்துவ ஏற்பாடுகள் :

நமது நாட்டைச் சேர்ந்த புனிதப் பயணிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் நாட்களில் மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு இந்திய அரசு விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளது. ஹஜ் பயணக் காலங்களில் புனிதப் பயணிகளைக் கவனிக்க மருத்துவ அதிகாரிகளை அரசு ஹிஜாஸிற்கு அனுப்புகிறது.

மொஹல்லா ஷோபைக்கா, மக்கா, மதீனா ஆகிய இடங்களில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நோயாளிப் பயணிகளைக் கவனிக்க ஜித்தாவிலுள்ள சுங்கச்சாவடி, மதீனத்துல் ஹுஜ்ஜாஜ் (ஜித்தா துறைமுகம்), மொஹல்லா மிஸ்பாலா (மக்கா), மொஹல்லா ஜியாத் (மக்கா) ஆகிய இடங்களில் இந்திய தூதரகத்தின் மருத்துவ மனைப் பிரிவுகள் செயல்படும். இது தவிர, மினாவிலும் அரபாத்திலு முள்ள இந்தியத் தூதரக முகாம் அலுவலகங்களிலும், மினாவிலுள்ள முக்கிய முஅல்லிம்களின் முகாம்களில் மூன்று இடங்களிலும், நமது தூதரகத்தின் மருத்துவமனைப் பிரிவுகள் செயல்படும்.

நோயாளிகள் நடக்க முடியாத நிலையிலிருக்கும்போதும், மிக அவசரமான வேளைகளிலும் மட்டுமே மருத்துவர்களை நோயாளிகள் தங்குமிடத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளலாம். ஏனென்றால், அதிகப்படியான பயணிகளை அவர் மருத்துவமனையிலேயே கவனிக்க வேண்டியுள்ளது.

தேவைப்படும் எந்நேரத்திலும் நோயாளிகளுக்கு இலவசமாக மருத்துவர் சிகிச்சை அளிப்பார். இடர்பாடு நேரிட்டால் இதுபற்றி இந்திய தூதருக்கு அல்லது ஜித்தாவிலுள்ள ஹஜ் அலுவலகத்திற்குத் தெரிவிக்கவும். இது தவிர, மக்காவில் இந்திய மருந்தகத்திலுள்ள மருத்துவ அதிகாரி-மற்றும்-துணைக் கன்ஸலுக்கும் (Medical Officer-Cum-Consul) தெரிவிக்கலாம்.

## 4. மதீனத்துல் ஹுஜ்ஜாஜ் :

மதீனத்துல் ஹுஜ்ஜாஜ் என்பது புனிதப் பயணிகளுக்கு தங்குவதற்காக சவூதி அரேபிய அரசு கட்டிய முகாம் ஆகும். இது ஜித்தாவிலிருந்து சிறிது தொலைவில் இருக்கிறது. ஜித்தாவில் இறங்கிய பிறகு புனிதப் பயணிகள் மக்காவுக்கோ மதீனாவுக்கோ புறப்படும் வரையில் இங்கு தங்குகிறார்கள். மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் பள்ளிவாசல்களும் கடைகளும் உள்ளன.

## 5. காதிமே ஹுஜ்ஜாஜ்கள் :

பெரும்பாலான மாநில ஹஜ் குழுக்கள் அவர்களுடைய மாநிலத்தைச் சேர்ந்த புனிதப் பயணிகளைக் கவனிக்கவும், மற்றும் ஹிஜாஸில் அவர்களுக்கு இடர்பாடுகள் ஏற்பட்டால் உதவவும் தொண்டர்களை (காதிமே ஹுஜ்ஜாஜ்) அனுப்புகிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த காதிமே ஹுஜ்ஜாஜ்களின் இருப்பிடத்தை மக்காவில் உள்ள தூதரகத்திலிருந்தும் ஹஜ் அதிகாரிகளிடமிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

## 6. முஅல்லிம்கள் :

நீங்கள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும்போது உங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு முஅல்லிம்கள் உள்ளனர். இந்தியாவிலிருந்து செல்லும் புனிதப் பயணிகளைக் கவனிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முஅல்லிம்களின் பெயர்ப்பட்டியலை பம்பாய் ஹஜ் குழு வெளிட்டுள்ளது. அந்தப் பட்டியலிலிருந்து உங்கள் முஅல்லிமைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களுக்கோ அல்லது உங்கள் கப்பலுக்குப் பிறகு வரும் கப்பலில் அல்லது விமானத்தில் வருகின்றவர்களுக்கோ உங்களுடன் சேர்ந்து ஒரே முஅல்லிமிடம் இருக்க வேண்டுமானால் அந்த விபரத்தை ஜித்தாவில் உங்களுக்கு முஅல்லிமை ஒதுக்கீடு செய்கின்ற அலுவலரிடம் கூற வேண்டும். அந்த அலுவலர், முடிந்தால் அப்படியே ஏற்பாடு செய்வார்.

முஅல்லிம்கள் ஏராளமான புனிதப் பயணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருப்பதால் அதற்கு உதவ வக்கீல்கள் என்று அழைக்கப்படும் உதவியாளர்களை நியமித்துள்ளார்கள். பெரும்பாலும் வக்கீல்கள் தான், முஅல்லிமின் சார்பில் நேரடியாக ஏற்பாடுகளைச் செய்து தருவார்கள்.

## 7. ஹிஜாஸில் உள்ளூர் நேரம் :

சூரியன் மறையும் போது சவூதி அரேபியாவிலுள்ள கடிகாரங்கள் 12 மணி அடிக்கின்றன. அந்த நேரத்தில் புதிய நாள் ஆரம்பமாகிறது. அப்படி சூரியன் மறைந்த 4 மணி நேரம் கழித்து சவூதி அரேபிய கடிகாரம் 4 மணி அடிக்கிறது. காலையில் சாதாரண நிர்ணயப்படி 8 மணி ஆகும்போது, சவூதி அரேபிய கடிகாரம் 2 மணி அடிக்கிறது. ஒருவர் அரேபிய உள்ளூர் நேரத்தைக் கணக்கிட வேண்டுமானால் அதற்கிணையான சாதாரண நேரத்துடன் 6 மணியைக் கூட்டிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஹிஜாஸிலிருக்கும் முதல் நாளிலேயே சவூதி அரேபிய நேரத்திற்கு உங்கள் கடிகாரத்தை மாற்றி வைத்துக் கொண்டால் எளிதாக இருக்கும்.

## 8. ஹோட்டல்கள் :

மக்கா, மதீனா, ஜித்தா ஆகிய இடங்களில் ஹோட்டல்கள் உள்ளன. ஹோட்டலுக்கான அராபிய வார்த்தை ''பந்தூக்'' ஆகும். மக்காவிலும், மதீனாவிலும் தங்குவதற்கான ஏற்பாடுகளை முஅல்லிம் மூலம் செய்துகொள்ளலாம். மக்காவிலும், மதீனாவிலுமுள்ள ருபாத்துகளில் புனிதப் பயணிகள் தங்குவதில் சவூதி அரசுக்கு எந்தச் சம்பந்தமுமில்லை. மக்காவிலும், மதீனாவிலும் ஹரம் ஷரீபில் தங்குவதற்கு அனுமதியில்லை.

மினாவிலும், அரபாத்திலும் தங்கும் விஷயத்தில், புனிதப் பயணிகளுக்கு முழு உரிமையுண்டு. அவர்கள் தங்களின் முஅல்லிம்கள் ஏற்பாடு செய்யும் கூடாரங்களில் தங்கினால் அதற்கான கட்டணத்தை முஅல்லிமுக்கு வழங்க வேண்டும்.

## 9. தபால் தந்தி வசதிகள் :

அஞ்சலுக்கு அராபிய மொழியில் ''பாரித்'' என்றும், தந்திக்கு ''பார்குய்யா'' என்றும் சொல்லப்படுகிறது. மக்கா, மதீனாவில் தபால், தந்தி வசதிகள் நல்ல முறையில் உள்ளன. இந்தியாவிற்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கு 13 குருஷ் அஞ்சல் தலைகள் ஒட்ட வேண்டும். ஹிஜாஸில் உள்ளூரில் அனுப்பப்படும் கடிதங்களில் 4 குருஷ் அஞ்சல் தலைகள் ஒட்டப்பட வேண்டும். இந்தியாவிலிருந்து புனிதப் பயணிகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் அவர்களுடைய முஅல்லிம்களின் முகவரியை (C/o Moallim) எழுத வேண்டும்.

# IX. ஹிஜாஸில் பயண ஏற்பாடுகள்

## 1. ஜித்தா துறைமுகத்தில் :

நீங்கள் ஜித்தாவில் வந்து சேர்ந்ததும் இலேசான பொருள்களை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு உங்கள் பாஸ்போர்ட்டுடன் கப்பலி னின்று இறங்குவதற்கான ஏணிப்படியருகே சென்று வரிசையாக நிற்கவும். உங்களுடைய பளுவான பயணப் பொருள்களை கையில் எடுத்துச் செல்லவேண்டாம். அவை கூலிகளால் எடுத்துச் செல்லப்படும். உங்களின் முறை வந்ததும் உங்கள் பாஸ்போர்ட்டை சவூதி அலுவல ரிடம் காட்டுங்கள். அவர் அதை பார்வையிட்டபிறகு கப்பலைவிட்டு நீங்கள் வெளியே செல்ல அனுமதிப்பார்.

கப்பலை விட்டு இறங்கியதும் துறைமுகக் கட்டிடத்தின் முதல் மாடி யிலுள்ள சுங்கச் சாவடிக்குச் செல்லவும். அங்கு வரிசையாக நிற்கும் போது உங்கள் குழுவைச் சேர்ந்த எல்லோரும் ஒன்றாக நிற்கவேண்டும். சுங்கச் சாவடியில் உங்களின் ஜித்தா கார்டு, சுகாதாரச் சான்றிதழ் ஆகியவற்றை உங்கள் பாஸ்போர்ட்டிலிருந்து அகற்றுவார்கள். உங்கள் பாஸ்போர்ட்டை எடுத்து உங்களின் முஅல்லிமின் பெயருள்ள ஒரு சீட்டை இணைத்து வைத்துக் கொள்வார்கள். மற்றொரு சீட்டை உங்களது ஆடையின்மீது இணைப்பார்கள். நீங்கள் ஒரு குழுவாகச் சென்றால் குழு விலுள்ள எல்லோரின் பாஸ்போர்ட்டுகளையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பாஸ்போர்ட்டுகளை மதீனத்துல் ஹுஜ்ஜாஜில், முஅல்லிமுக் கான கட்டணங்களை வசூலித்த பிறகு திருப்பித்தருவார்கள். ஆகையால் உங்களிடம் கொடுத்த சீட்டைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள்.

இதற்குள் உங்கள் பயணப் பொருள்கள் அங்கு வந்துவிடும். மூட்டை முடிச்சுகள் ஆங்காங்கே கிடக்கும். அவற்றை தேடி எடுத்துக் கொண்டு சுங்க அதிகாரியிடம் செல்லவும். சுங்க அதிகாரி இடதுகையில் பச்சை நிற பாட்ஜை அணிந்திருப்பார். அதிலிருந்து அவரை அடையா ளம் தெரிந்து கொள்ளலாம். சுங்க அதிகாரியிடம் உங்களின் மூட்டை முடிச்சுகளைத் திறந்து காட்டவேண்டும். அவர் அவற்றை சோதனை செய்த பிறகு உங்களின் பயணப் பொருள்மீது அதற்கான குறியிடுவார். இந்த வேலை முடிந்த பிறகு நீங்கள் இலேசான பொருள்களை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு வெளியே செல்லலாம். கனமான மற்ற பொருள்களை கூலியாட்கள் எடுத்து லாரியில் ஏற்றுவார்கள். அந்த லாரியின் எண்ணைக் குறித்து வைக்க முடிந்தால் நன்று. பிறகு அங்கு உங்களுக்காகக் காத்து நிற்கும் பேருந்துகளுக்குச் செல்லவும். இந்தப் பேருந்துகள் உங்களை மதீனத்துல் ஹுஜ்ஜாஜுக்குக் கொண்டு செல்லும்.

உங்களின் பயணப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கான மஸ்தூர் கட்டணம், லாரி கட்டணம், உங்களின் பஸ் கட்டணம், மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் தங்குவதற்கான வாடகை ஆகியவற்றை ஏற்கனவே கப்பற் பயணக் கட்டணத்துடன் வசூலித்துள்ளார்கள். ஆகையால் இப் போது நீங்கள் கட்டணமொன்றும் செலுத்த வேண்டாம். உங்கள் பயணப் பொருள்களில் சில சுங்கச் சாவடியில் கண்டுபிடிக்க முடியவில்

லையாளுல், மதீனத்துல் ஹுஜ்ஜாஜை அடைந்தவுடன் நீங்கள் இதை தூதரக அதிகாரியின் கவனத்திற்கும் உங்களுடைய வக்கீலின் கவனத்திற்கும் கொண்டு வர வேண்டும்.

ஜித்தா துறைமுகத்தில் புனிதப் பயணிகளை கப்பலில் ஏற்றுதல் மற்றும் இறக்குதல் போன்றவற்றை ஜித்தாவில் உள்ள இந்திய தூதர், ஹஜ் அதிகாரி, உதவி ஹஜ் அதிகாரி, இந்திய தூதரகத்திலுள்ள மற்ற அலுவலர்கள் ஆகியோர் கவனிக்கிருர்கள். ஆளுல் அந்நாட்டு விதிகள் படி சுங்க அதிகாரிகளால் சோதனை செய்யப்படுவதற்கு முன்னர், தூதரக அதிகாரிகள் புனிதப் பயணிகளோடு தொடர்பு கொள்ளமுடியாது. எனினும் ஹஜ் அதிகாரி மற்றும் தூதரக அதிகாரிகள் துறைமுகத்திலும் குடியேற்றி இடத்திலும் (Immigration Counter) சுங்கச் சாவடியிலும் வந்து புனிதப் பயணிகட்கு உதவ தங்களாலான முயற்சிகளைச் செய்கின்றனர். அவர்கள் அணிந்திருக்கும் மூவர்ண பாட்ஜ் (Badge) மூலம் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

## 2. மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் :

மக்காவுக்கோ, மதீனாவுக்கோ புறப்படும் வரையில் நீங்கள் மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் தங்கியிருப்பீர்கள். நீங்கள் முதலில் மக்காவிற்குச் செல்வதானால் இந்த முகாமில் பொதுவாக 24 மணி நேரத்திற்குமேல் தங்க நேரிடாது. நீங்கள் முதலில் மதீனாவுக்குச் செல்லுவதாயிருந்தால், மதீனாவிற்குத் தனிப்பட்ட பேருந்தினை விடுமளவுக்கு பயணிகளை வக்கீல்கள் சேர்க்க வேண்டியிருப்பதால், முகாமில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தங்க நேரிடும். முதலில் மதீனாவிற்குச் செல்லும் புனிதப் பயணிகள், தங்களுடைய பயணப் பொருள்கள் அனைத்தும் தாங்கள் போகவேண்டிய பேருந்தில் பாதுகாப்பாக ஏற்றப்பட்டுள்ளனவா என்பதையும் தங்களுடைய நண்பர்களில் சிலர் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனரா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில், அவர்களுடைய பயணப் பொருள்கள் தவறாக இடம் மாறிவிடக் கூடும்.

சவூதி அரசு, விமானப் பயணிகளுக்கும் இத்தகைய வசதிகளை ஜித்தா விமான நிலையத்தின் அருகில் செய்து தருகிறது. இதற்கான வாடகையும் விமானப் பயணக் கட்டணத்துடன் ஏற்கனவே வசூலிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் காலத்தில் ஜித்தாவிலுள்ள ஹோட்டல்களில் வாடகை மிக அதிகமாக இருப்பதாலும், மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் உங்கள் பயணப் பொருள்களை வைத்திருப்பதாலும் நீங்கள் இங்கு ஹோட்டல்களில் தங்க வேண்டாம்.

மதீனத்துல் ஹுஜ்ஜாஜில் உங்களுடைய வக்கீலுடைய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும். அவர்கள் உங்களுடைய பயணப் பொருள்களைக் கண்டுபிடிக்க உதவுவார்கள். அதன் பிறகு குளித்த பின்னர் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். அங்கு உங்களுக்கு மனநிறைவு ஏற்படாவிட்டால் ஹஜ் அதிகாரி அல்லது அவரது உதவியாளரைக் காணலாம். இவர்கள், மதீனத்துல்

ஹஜ்ஜாஜிலுள்ள இந்திய மருத்துவப் பிரிவில் நமது தூதரகம் அமைத்திருக்கும் தற்காலிக ஹஜ் அலுவலகம்-மற்றும்-தூதரக தகவல் நிலையத்தில் இருப்பார்கள். மருத்துவமனையும் தகவல் நிலையமும் இரவு ஆகும் வரை திறந்து வைக்கப்படுகின்றன.

உங்களின் பயணப் பொருள்களை பல லாரிகளில் கொண்டு வருவதால் அவை முன்னே பின்னே வந்து சேரக்கூடும். பயணப் பொருள்களில் சில காணவில்லையெனில் முகாமில் அவற்றை தேடுவதற்கு வக்கீலின் உதவியை நாடுங்கள். உங்களால் கண்டுபிடிகக முடியவில்லையெனில் அப்பயணப் பொருள்களின் விபரங்களை, குறிப்பாக அடையாளக் குறிகளை ஹஜ் அலுவலகத்திற்கும் இந்திய தூதரகத்தின் தகவல் நிலையத்திற்கும் தெரிவிக்க வேண்டும்.

உங்கள் உடல் நிலை சரியில்லாமலிருந்தால் உடனே இந்திய மருத்துவமனைக்குச் சென்று சோதனை செய்து கொள்ளவேண்டும். மருத்துவ வசதிகள் இங்கு இலவசமாகக் கிடைக்கும். உங்கள் உடல் நிலை நன்ருக இருந்தால் வேறு யாராவது நோயுற்றிருக்கிருர்களா என்று கவனித்துப் பார்ப்பது உசிதமாயிருக்கும். அப்படியாராகிலும் இருந்தால் அந்த நோயாளியை இந்திய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவோ, நோயாளி நடக்க முடியாத நிலையில் இருந்தால் இந்திய மருத்துவமனையின் மருத்துவருக்குத் தெரிவிக்கவோ வேண்டும். பொதுவாக இந்தியப் பயணிகளுக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்பு அறைகளைப் பார்வையிட மாலையில் மருத்துவ அதிகாரி வருவார்.

### 3. வங்கி மூலம் பணம் பெறுதல் :

மதீனத்துல் ஹஜ்ஜாஜில் உங்கள் பயணப் பொருள்களை வைத்த பின்னர், மதீனத்துல் ஹஜ்ஜாஜிலுள்ள நேஷனல் வங்கிக்குச் சென்று உங்களுடைய டிராப்டைக் (Draft) கொடுத்து ரியால்களைப் பெற்றுக் கொள்ளவும். இந்திய தூதரகப் பணியாளர்கள் உங்களுக்கு உதவுவார்கள். உங்களுடைய பணத்தை பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஹிஜாஸில் தங்கியிருக்கும் காலம் முழுவதும் திருடர்கள் குறித்து கவனமாக இருக்கவும். நீங்கள் அன்னியர் எவரிடமும் பணத்தைக் கொடுக்கக் கூடாது. வக்கீல் அல்லது முஅலிம்களிடம் பணம் கொடுக்கும்போது கூட ரசீதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### 4. முஅல்லிம்களுக்கான கட்டணம் கொடுத்தல் :

முஅல்லிம்களுக்கான கட்டணத்தை உங்களுடைய வக்கீலின் அலுவலகத்தில் செலுத்திவிட வேண்டும். குறிப்பிட்ட தொகையை விட அதிகம் கொடுக்க வேண்டாம். இத்தொகையையும், பேருந்து கட்டணத்தையும் செலுத்திய பின்னர், 'தனாசுல்' என்று அழைக்கப்படும் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். வக்கீல் புனிதப் பயணிகளுக்கான தனிப்பட்ட பேருந்துகளை ஏற்பாடு செய்யும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். வக்கீலால் ஏற்பாடு செய்யப்பட்ட தனிப் பேருந்துகளில் செல்வது உகந்ததும் பாதுகாப்பானதும் ஆகும். நீங்களே வாடகை வண்டியை ஏற்பாடு செய்தால் வீண் செலவு ஆகும்.

5. ஜித்தாவிலிருந்து மக்காவிற்குச் செல்லல் :

மக்காவிற்குச் செல்ல வாகன ஏற்பாடு உங்களுடைய வக்கீலால் செய்யப்படுகிறது. ஜித்தாவிற்கும், மக்காவிற்கும் இடையிலுள்ள தொலைவு சுமார் 76 கி.மீ., அதாவது சுமார் 47 மைல்கள். உங்களுடைய பேருந்து (1) உம்மூ சலாம், (2) பஹரா, (3) ஹாத்தா, (4) ஷம்ஸியா (அல்லது ஹுதைபியா) ஆகிய நான்கு இடங்களில் நிற்கும். உம்மூசலாம் என்ற இடத்தில் பாஸ்போர்ட்டுகள் சோதனை செய்யப்படுகின்றன. பஹ்ராவில் பேருந்துகள் சற்று அதிக நேரம் நிற்கும்.

6. மக்காவில் :

மக்காவின் எல்லையில் நுழையும்போது உங்களுடைய பாஸ்போர்ட் மீண்டும் சோதனை செய்யப்படும். மக்காவில் நீங்கள் இறங்கியவுடன் முஅல்லிம்கள் அல்லது அவர்களுடைய ஆட்கள் உங்களை வரவேற்று அவர்களுடைய இடத்திற்கு அழைத்துச் செல்லுவார்கள்.

மக்காவில் உங்களின் தேவைகளுக்கேற்ப ஹோட்டல் அல்லது வேறு இடங்களில் தங்க முஅல்லிம் ஏற்பாடு செய்வார். தொலைவிடங்களைவிட ஹரம் ஷரீபிற்கு அருகிலுள்ள இடங்களில் வாடகை கூடுதலாக உள்ளது. பலர் ஒன்று சேர்ந்து வாடகைக்கு அறையெடுத்தால் மலிவாகயிருக்கும். மக்காவில் இருக்கும்பொழுது ''தவாப்'' செய்வதிலும் ஏனைய பிரார்த்தனைகளிலும் உங்கள் நேரத்தைச் செலவிடுங்கள். மக்கா ஒரு பெரிய மாநகரம். இங்கு உணவு, தண்ணீர், இடவசதி ஆகியவை வெகு எளிதில் கிடைக்கும். இங்கு நீங்கள் உள்ளூர் சவூதி மக்களையல்லாமல் உலகெங்குமிருந்து வரும் மக்கள் பலரையும் சந்திப்பீர்கள். மொழிப் பிரச்சனைதான் பெரிய பிரச்சனையாக இருக்கும். எல்லா நாட்டு மக்களுடனும் நல்ல தொடர்பும், சுமுக உறவும் கொள்ள முயலுங்கள். நீங்கள் நம் நாட்டின் அதிகார சார்பற்ற நல்லெண்ண தூதர்கள் என்பதை மறக்காதீர்கள். நம் நாட்டைப் பற்றிய உயரிய கருத்தினை அவர்கள் மனதில் நீங்கள் ஏற்படுத்த வேண்டும். இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

7. அரபாத்திலும் மினாவிலும் :

அரபாத்திலும் மினாவிலும், ஹஜ் நாட்களில் துல்ஹஜ் 8-வது நாள் முதல் 13-வது நாள் வரை மட்டுமே நீங்கள் தங்க வேண்டும். அரபாத்தில் நீங்கள் ஒரு நாளும், மினாவில் நான்கு அல்லது ஐந்து நாட்களும் தங்கியிருக்க வேண்டும். மினாவிலும் அரபாத்திலும், நீங்கள்விரும்பினால் கூடாரத்திற்கான ஏற்பாடு முஅல்லிம்களால் செய்யப்படுகிறது. மினாவிலுள்ள வீடுகளுக்கு வாடகை மிக அதிகமாக உள்ளது.

மினா, அரபாத் ஆகிய இடங்களில் புனிதப் பயணிகள் வழி தவறக் கூடும். அப்படி நேரிட்டால் நீங்கள் தூதருக்கும் ''இதாரத்துல் ஹஜ்ஜு''க்கும் உடனடியாக தெரிவிக்க வேண்டும். மினா, அரபாத் ஆகிய இடங்களில் உங்களின் பெயர், உங்கள் முஅல்லிமின் பெயர், மினாவில் அவரின் வீட்டு எண் ஆகியவற்றைக் கொண்ட அடையாள அட்டையை எப்போதும் கையில் வைத்துக் கொள்ளவும். மினாவுக்குப் பயணம் செய்யும் முன்னர், ஹஜ் பயணிகளில் ஒவ்வொருவரும் தங்களின் அடையாள அட்டையை தன்னுடனேயே வைத்துக் கொள்ளவேண்டும்.

# X. புனித ஹஜ்

1. தல்பியா :

'' லப்பைக்க.
அல்லாஹும்ம லப்பைக்க.
லப்பைக்க லாஷரீக லக லப்பைக்க.
இன்னல் ஹம்த வன்னிஃமத லக
வல் முல்க்க லா ஷரீக லக ''

பொருள் :

'' நான் வந்து விட்டேன்.
இறைவா, நான் வந்து விட்டேன்.
நான் வந்து விட்டேன் ;
உனக்கு கூட்டாளி யாருமில்லை ;
நான் வந்து விட்டேன்.
சந்தேகமின்றி எல்லா புகழும் உனக்கே ;
எல்லா மேலாதிக்க உரிமையும் உனக்கே ;
உனக்கு கூட்டாளி யாருமில்லை.''

2. உம்ராவின் விபரம் :

*(துஆக்களுக்காக இணைப்பு II-ஐ பார்க்கவும்)*

1. விமானம் மூலம் பயணம் செய்யும் ஆண் புனிதப் பயணிகள் பம்பாயில் குளித்து விட்டு இஹ்ராம் உடையை அணிந்துக் கொள்ளவும். கப்பலில் செல்லும் புனிதப் பயணிகள், 'யலம்லம்' செல்வதற்கு முன் குளித்து விட்டு இஹ்ராம் உடையை அணிந்துக் கொள்ளவேண்டும். பெண் புனிதப் பயணிகள் அவர்களின் உடைகளை அணிந்துக் கொள்ள லாம், ஆனால் தலையை மறைத்துக் கொள்ளவும்.

2. கணுக்கால் வெளியே தெரியும்படி செருப்பை அணிந்துக் கொள்ளவும்.

3. இஹ்ராம் துணியினால் தலையை மறைத்துக் கொண்டு இஹ்ராமின் நிய்யத்துடன் இரண்டு ரகாஅத் நபில் தொழவும். பிறகு தலையை மறைக்காமல் உம்ராவின் நிய்யத்தைச் செய்யவும்.

4. மெல்லிய குரலில் மூன்று தடவை தல்பியாவைப் படிக்கவும்.

5. நிற்கும் போதும், அமரும் போதும், படிகளில் ஏறி இறங்கும் போதும், மற்றவர்களுக்கு சலாம் சொல்லும் போதும் மற்றவர்களுடன் கை குலுக்கும் போதும் தல்பியாவை ஓதிக்கொண்டே இருக்க வேண்டும்.

6. ஆண் புனிதப் பயணிகள் இஹ்ராம் உடையை அணிந்திருக்கும் போது தொழுகை வேளையில் தலையை மறைக்கக் கூடாது.

7. ''காேன கஅபா''வில் நுழையுமுன், இஹ்ராம் உடையை ''இத்திபா''வாக அணிய வேண்டும். இடது தோள் மறைத்து வலது தோள் பார்வைக்குத் தெரிகிற விதத்தில் இஹ்ராம் ஆடையை அணிவது தான் ''இத்திபா.''

8. கஅபா பார்வையில் தெரிந்ததும் தல்பியா ஓதுவதை முடித்துக் கொண்டு, துஆ செய்து கொள்ளவும்.

9. ''ஹஜ்றுல் அஸ்வதி''ன் முன் செல்லும்போது தவாபு செய்வதற்கான நிய்யத்தை ஓதவும்.

10. கூட்டம் அதிகமில்லாமலிருந்தால் புனித ''ஹஜ்றுல் அஸ்வதை'' (கறுப்பு நிற கல்—The sacred black stone) ''பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்'' என்று சொல்லிக் கொண்டு முத்தமிடவும். அப்படி முடியவில்லையெனில் உங்களின் இரு உள்ளங்கைகளையும் அதற்கு நேரே உயர்த்திய பிறகு அவற்றை முத்தமிடவும்.

11. ஹஜ்றுல் அஸ்வதினின்று ஆரம்பித்து, வெளியிலிருந்து ''ஹதீ''மைத் தாண்டியவாறு, கஅபாவை ஒரு தடவை சுற்றி, ஹஜ்றுல் அஸ்வதுக்குத் திரும்புவது ஒரு தவாபு (சுற்று) ஆகும். ஏழு முறை அப்படி சுற்றவும். முதல் மூன்று சுற்றுகளின்போது சிறு காலடிகள் வைத்து, தோள்களை அசைத்து, வளையாமல் நடக்கவும். இதற்கு ''ரமல்'' என்று பெயர். பெண் புனிதப் பயணிகள் ''ரமல்'' செய்ய வேண்டியதில்லை. மீதமுள்ள நான்கு சுற்றுகளின்போதும் சாதாரணமாக நடப்பதைப்போல் நடந்து தவாபை முடித்துக் கொள்ளவும்.

12. தவாபுடைய சுற்றுகளின்போது அதற்கான துஆக்களை ஓதவும். இல்லாவிட்டால் உங்கள் மொழியிலேயே விருப்பப்படி துஆ செய்து கொள்ளவும். ''ரப்பனா ஆத்தினா, பித்துன்யா ஹஸனத்தவ் வ பில் ஆகிரத்தி ஹஸனத்தவ் வக் கினா அசாபன்னாரி, வத்-கில்னல் ஜன்னத ம-அல் அப்ராரி, யா அஸீஸு யா கப்பாரு, யா ரப்பல் ஆலமீன்'' என்று ''ருக்னே இமானி''க்கும் (புனித கறுப்பு நிற கல்லிலிருந்து கஅபாவின் 3-வது மூலை) ஹஜ்றுல் அஸ்வதுக்கும் இடையே ஓதுவது சிறப்பானது.

13. 7-வது சுற்றுக்குப் பிறகு இரண்டு ரகாஅத் ''வாஜிபுத் தவாப்'' தொழுகையை மகாமே இபுராஹி மில் தொழுது, துஆ செய்து கொள்ளவும்.

14. ஹஜ்றுல் அஸ்வதுக்கும், கஅபாவின் நுழை வாயிலுக்கு மிடையேயுள்ள மதிலின் பெயர் ''முல்தசீம்.'' அங்கு ஆழ்ந்த இரக்கத்துடன் பாவ மன்னிப்பைத் தேடிக் கொள்ளவும்.

15. பிறகு ''ஜம் ஜம்'' கிணற்றின் பக்கம் சென்று வேண்டிய அளவு தண்ணீரை அருந்தி துஆ செய்து கொள்ளவும்.

16. ''சபா''விற்குச் சென்று சபாவின் துஆவை ஓதிய பிறகு ''மர்வா''விற்குச் செல்லவும்.

17. ''மீலைனி அக்ளரைனி'' என்று சொல்லப்படும் பச்சைத் தூண்களுக்கிடையே (அங்கு பச்சை டியூப் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன) ஆண் புனிதப் பயணிகள் வேகமாக நடக்க வேண்டும். பெண் புனிதப் பயணிகள் வேகமாக நடக்கவேண்டியதில்லை.

18. சபாவிற்கும் மர்வாவிற்குமிடையே ஒரு முறை நடப்பது ஒரு சுற்று ஆகும். சபாவிலிருந்து ''ஸயீ''யை ஆரம்பித்து 7-வது சுற்றை மர்வாவில் முடிக்கவேண்டும்.

19. கஅபாவை நோக்கி, துஆக்களை முடித்த பிறகு, ''ஹலாக்''கை (தலை முடியை சவரம் செய்தல்) அல்லது கஸ்ஸரை (முடியை சற்று வெட்டுதல்) செய்யவும். முதலில் கூறியது சிறந்தது. பெண்கள் அவர்களின் முடியை ஒரு அங்குலம் அளவிற்காவது வெட்ட வேண்டும்.

20. இத்துடன் ''உம்ரா'' முடிகிறது. இப்பொழுது சாதாரண ஆடைகளை அணியலாம்.

மேற்கூறியவாறு, நீங்கள் மக்காவிலிருக்கும்போது பலமுறை உம்ராவைச் செய்து பயனடையலாம். எல்லாத் தொழுகைகளுக்குப் பிறகும் நபில் தவாபைச் செய்யவும். அதற்கு இஹ்ராம் உடை தேவை யில்லை. ஸயீயும் அத்துடன் செய்யத் தேவையில்லை.

## 3. ஐந்து நாள் ஹஜ் :

### (அ) முதல் நாள் (துல்ஹஜ் 8)

1. குளித்துவிட்டு இஹ்ராமின் ஒரு துணியை அணிந்துக் கொண்டு மற்றதை உடலில் சுற்றிக் கொள்ளுங்கள். இஹ்ராமில் செய்யக் கூடாதவைகளிலிருந்து விலகிக் கொள்ளவும்.

2. இஹ்ராமின் நிய்யத்துடன் இரண்டு ''ரகாஅத்'' நபில் தொழுது கொள்ளுங்கள். அப்பொழுது இஹ்ராம் துணியினால் தலையை மறைத்துக் கொள்ளவேண்டும். தொழுத பின் துணியை தலையிலிருந்து நீக்கி விட்டு ஹஜ்ஜின் நிய்யத்தைச் செய்து கொள்ளுங்கள்.

3. தல்பியாவை சத்தமாக மூன்று முறை ஓதவும்.

4. புனித பள்ளிவாசலை அடையும் பொழுது நபில் தவாபை முடித்துக் கொள்ளுங்கள்.

5. ''தவாப் ஜியாரத்தின்'' அம்சமாகிய, ஸபா-மர்வாவின் ஸயீயை (துல்ஹஜ் 10-ம் நாள் அன்று செய்யவேண்டியது) இன்றே செய்து முடிக்க விரும்பினால் செய்யலாம். ஸபா-மர்வாவின் ஸயீயை நபில் தவாபிற்குப் பிறகு, ''ரமல்'' மற்றும் ''இத்திபா'' உடன் செய்ய வேண்டும்.

6. பிறகு, முஅல்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேருந்து களில் மினாவிற்குச் செல்ல வேண்டும். மக்கா, மதீனா, மினா,

அரபாத், ஜித்தா ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துக் கட்டணத்தை முஅல்லிமின் வக்கீல் முன்னதாகவே வசூலிக்கிறார். மினாவிற்குப் புறப்படுமுன் முஅல்லிமின் முகவரியைத் தெரிந்துகொள்ளவும். மக்காவிற்கும் மினாவிற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 5 கிலோ மீட்டர் ஆகும்.

7. மினாவில் ''மஸ்ஜிதே கைஃப்'' பிற்கு அருகில் தங்கியிருப்பது நல்லது. முடியாவிட்டால் உங்கள் கூடாரங்களிலேயே தங்கிக் கொள்ளுங்கள்.

8. மினாவில் துல்ஹஜ் 8-வது நாளைக் கழிக்கவேண்டும். லுஹர், அஸர், மஃரிப், இஷா மற்றும் துல்ஹஜ் 9-ம் நாளுடைய பஜ்ர் தொழுகைகளை மினாவிலேயே நிறைவேற்றுங்கள்.

9. நேரத்தை புனிதமான பேச்சு வார்த்தைகளிலும், இறைவனின் நினைவிலும், புனித குர்ஆன் ஓதுவதிலும் இறைவனைப் புகழ்வதிலும் செலவிடுங்கள்.

## (ஆ) இரண்டாம் நாள் (துல்ஹஜ் 9)

1. சூரிய உதயத்திற்குப் பின் மினாவிலிருந்து அரபாத் செல்ல வேண்டும். மினாவிற்கும் அரபாத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 17 கிலோ மீட்டர் ஆகும். தல்பியாவை சத்தமாக ஓதியபடி இருக்க வேண்டும்.

2. அரபாத் மைதானத்தை சென்றடையும்போது ''ஜபலே ரஹ்மத்'' (மலை) தென்பட்டவுடன் துஆச் செய்துகொள்ள வேண்டும்.

3. முடிந்தால் ''மஸ்ஜிதே நம்ராவை'' நடுப் பகலிற்கு முன்பே அடைந்து ''லுஹருடைய'' நேரத்தில் லுஹர், அஸர் ஆகிய இரு தொழுகைகளையும் ஒரே அசானுடனும், ஆனால் இரண்டு இகாமத்துடனும், தொழவும். (இதில் கருத்து வேற்றுமையிருந்தால் உங்கள் மத்ஹபின் முறைப்படி தொழவும்).

4. இரண்டு தொழுகைக்கும் இடையில் சுன்னத் முஅகதா மற்றும் நபில் தொழக் கூடாது.

5. அரபாத்தில் ''ஜபலே ரஹ்மத்திற்கு'' அருகில் தங்குவது நல்லது. முடியாவிட்டால் முஅல்லிம் ஏற்படுத்திய கூடாரங்களில் தங்கவும். ஜபலே ரஹ்மத்மீது ஏறுவதற்கு முயற்சி செய்ய வேண்டாம்.

6. ''மஸ்ஜிதே நம்ரா''வை அடைய முடியாவிட்டால் தொழுகைகளை குறிப்பிட்ட நேரங்களில் உங்கள் கூடாரத்திலேயே தொழுது கொள்ளுங்கள்.

7. அரபாத்தில் தங்கும் காலம் நடுப்பகலில் ஆரம்பமாகிறது. இந்நேரத்தில் அரபாத்தில் இருப்பது மிகவும் அவசியம். ஹஜ்ஜை மேற்கொள்வதற்கு இன்று லுஹருக்கும் மஃரிபுக்கும் இடையே நீங்கள் கட்டாயம் அரபாத்தில் இருக்க வேண்டும். உங்கள் நேரத்தை புனித குர்ஆனை ஓதுவதிலும் தரூது ஷரீப் மற்றும் தல்பியாவை ஓதுவதிலும் செலவிடுங்கள்.

தருது ஷரீப்: ''லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து பியதிஹில் கய்ரு வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்''

8. உங்களது கூடாரங்களைவிட்டு வெளியே போனால் உங்கள் பொருட்களை இழக்க நேரிடும்.

9. நீங்கள் அரபாத்தில் இருக்கின்ற துல்ஹஜ் 9-ம் நாள் வெள்ளிக் கிழமையாக இருந்தால் நீங்கள் ''ஹஜ்ஜுல் அக்பர்'' செய்தவரா வீர்கள்.

10. சூரியன் மறைந்தவுடன் மஃரிப் தொழுகையை முடிக்காமல் முஜ்தலிஃபாவை நோக்கிச் செல்லுங்கள். முஜ்தலிஃபா என்ற இடம் அரபாத்திற்கும் மினாவிற்குமிடையே அரபாத்திலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

11. முஜ்தலிஃபாவை அடைந்ததும், இஷாவின் நேரத்தில் முதற் கண் மஃரிப் தொழுகையையும் பிறகு இஷா தொழுகையையும் ஒரு அசானுடனும் ஒரு இகாமத்துடனும் நிறைவேற்றவும். இரண்டு தொழுகைகளுக்குமிடையில் நபிலும், சுன்னத்தும் தொழக்கூடாது.

12. முஜ்தலிஃபாவில் நீங்கள் கூடாரமில்லாத, திறந்த வெளியில், நிலவொளியில் முழு இரவையும் கழிக்க வேண்டும். ராமியை நிறை வேற்ற இஹ்ராம் உடுத்திக் கொண்டு 49 சிறு கூழாங்கற்களை சேகரித்துக் கொள்ளவும். துல்ஹஜ் 13-ம் நாளும் மினாவில் தங்கி ராமியை நிறைவேற்ற விரும்பினால் 70 கற்களை எடுக்க வேண்டும். மேற்பட்டு கொஞ்சம் கற்கள் கூடுதலாக எடுத்து வைப்பது நன்று.

## (இ) மூன்றாம் நாள் (துல்ஹஜ் 10)

1. பஜர் தொழுகைக்குப் பின் முஜ்தலிஃபாவை விட்டு மினாவை நோக்கிச் செல்லவும்.

2. மினாவை அடைந்தவுடன் முதலில் ''ஜும்ரா அகபா''வின் ''ராமி''யை (இறுதி ஷைத்தான் மேல் கல்லெறிதல்) பூர்த்தி செய்யுங்கள். இன்று நீங்கள் அந்த ஷைத்தானின் மீது தான் கற்களை எறிதல் வேண்டும்.

3. ''ஜும்ரா''வின் (ஷைத்தான்) முன் நின்று கொண்டு வலது கையின் பெருவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையில் சிறு கூழாங் கற்களைப் பிடித்து பின்வரும் சொற்களை ஓதியபடி ஏழு கற்களை ஒன்றின் பின் ஒன்றாக ஜும்ராவை நோக்கி எறியவும்.

''பிஸ்மில்லாஹ்; அல்லாஹு அக்பர்; ரஜ்மன் லிஷ் ஷைத்தானி வ ரிசன் லிர்ரஹ்மானி; அல்லாஹும்ம அஜல்ஹு ஹஜ்ஜன் மப்ரூரன் வ ஸஃயன் மஷ்கூரன் வ சன்பன் மக்ஃபூரன்.''

4. இப்போது தல்பியா ஓதுவதை நிறுத்தி விடுங்கள்.

5. ஜும்ரா அகபாவின் ராமியை பூர்த்தி செய்தபின் குர்பானி செய்யும் இடத்திற்குச் சென்று ''ஸாபிஹா''வை ஆடு முதலியவற்றைக் குர்பானி செய்தல் முடிக்கவும்.

6. குர்பானிக்குப் பிறகு தலை முடியைச் சவரம் செய்து கொள்ளுங்கள்; அல்லது முடியைச் சற்று வெட்டி ''கஸ்ஸரை'' முடியுங்கள். முதலில் கூறியது சிறந்தது.

7. இப்பொழுது நீங்கள் இஹ்ராம் ஆடையைக் கழற்றி விட்டு, உங்கள் வழக்கமான உடைகளை அணிந்து கொள்ளலாம்.

8. பிறகு மக்காவிற்குச் சென்று கஅபாவின் ''தவாப் ஜியாரத்தை''ச் செய்யுங்கள்.

9. துல்ஹஜ் 8-ம் நாள் நீங்கள் ''ஸயீ''யை நிறைவேற்றா விட்டால் அதனை இப்பொழுது நிறைவேற்றவும்.

10. மஃரிபுக்கு முன்பே மினாவிற்குத் திரும்பி வரவேண்டும். இரவை மினாவிலேயே கழிக்கவும்.

## (ஈ) நான்காவது நாள் (துல்ஹஜ்-11)

1. ளுஹர் தொழுகைக்குப் பின்னர் ஏழு கூழாங்கற்களை எறிந்து ஜும்ரா அவ்வலின் (முதல் ஷைத்தான்) ராமியை நிறைவேற்றுங்கள். ராமியை முடித்தபின் ''கஅபா''வை நோக்கி துஆச் செய்யவும்.

2. மிகுந்த நெருக்கடியான கூட்டத்திற்கிடையே ராமியை நிறைவேற்றுவதால் உங்களைத் தக்க முறையில் நீங்களே பாதுகாத்துக் கொள்வது மிக அவசியம்.

3. ஏழு கற்களை எறிந்து ''ஜும்ரா வஸ்தா''வின் (இடையிலுள்ள ஷைத்தான்) ராமியை முடித்து துஆச் செய்யவும்.

4. இறுதியில் ஏழு கற்களை எறிந்து ''ஜும்ரா அகபா''வின் ராமியைச் செய்யவும். பிறகு துஆச் செய்யாமலே முன்னேறுங்கள்.

5. இன்று மினாவிலேயே நீங்கள் தொடர்ந்து தங்க வேண்டும்.

## (உ) ஐந்தாம் நாள் (துல்ஹஜ் 12)

1. ளுஹர் தொழுகைக்குப் பின்னர், நேற்று செய்ததுபோல் மூன்று ஜும்ராக்களின் ராமியையும் மறுபடியும் நிறைவேற்ற வேண்டும்.

2. ராமிக்குப் பிறகு மஃரிபுக்கு முன், மக்கா திரும்பிச் செல்ல வேண்டும்.

3. துல்ஹஜ் 13-ம் நாள் நீங்கள் மினாவில் தங்கியிருந்து ராமியை மீண்டும் நிறைவேற்ற விரும்பினால் அப்படியே செய்யலாம். அப்படியானால் துல்ஹஜ் 13-ம் நாள் பிற்பகலில் மூன்று ஜும்ராக்களின் ராமியைப் பூர்த்தி செய்தபிறகு மக்காவுக்குத் திரும்பவும்.

4. மக்காவிற்குத் திரும்புவதற்காக, உங்களுக்குப் பேருந்து ஏற்பாடு செய்யுமாறு உங்கள் முஅல்லிமை நீங்கள் வற்புறுத்த வேண்டும். ஏனெனில் அந்நாளில் தனியார் கார்கள் நியாயமான கட்டணங்களுக்கு எளிதாகக் கிடைக்காது.

5. நீங்கள் மக்காவிற்குத் திரும்பி வந்ததும் ஹஜ் முடிகிறது. மக்காவைவிட்டு புறப்படுமுன் ''தவாபே விதா''வைச் (விடைபெறும்/தவாப்) செய்து கொள்ளவும்.

**4. மதீனாவுக்குப் பயணம்:**

மக்காவிலிருந்து சுமார் 460 கிலோ மீட்டர் தொலைவிலும் ஜித்தா விலிருந்து சுமார் 424 கிலோ மீட்டர் தொலைவிலும் மதீனு உள்ளது. மதீனுவுக்குச் செல்வது ஹஜ்ஜின் அம்சமல்ல. ஆயினும் ஹாஜிகள் ஹஜ்ஜை ஒட்டி மதீனு சென்று ஜியாரத்துச் செய்வது வழக்கம். முன் கூட்டி ஹிஜாஸுக்குச் செல்பவர்கள் ஹஜ்ஜிற்கு முன்னும், மற்றவர்கள் பின்னும் மதீனுவுக்குச் செல்கிருர்கள். ஹஜ்ஜுக்குமுன் மதீனுவில் ஜியா ரத்திற்கு நீங்கள் செல்லவில்லையெனில் பிறகு நீங்கள் முறைப்படி மதீனு வுக்கு அனுப்பப்படுவீர்கள். அதுவரையில் மக்காவைச் சுற்றியுள்ள புனித இடங்களுக்குச் சென்று தரிசிக்கலாம். ''உம்ரா''வும் செய்யலாம்.

1. மதீனாவுக்குப் போகும் வழியில் ''தரூது ஷரீபை'' ஓதிக் கொண்டேயிருக்கவும்.

2. மதீனாவுக்குச் சென்றதும் குளித்துவிட்டு, முடிந்தால் புத்தாடை களை உடுத்தி நறுமணங்களைப் பூசிக்கொண்டு, பயபக்தியுடன் மரியாதையுடனும் ''மஸ்ஜிதுந் நபவி''க்குள் நுழையவும்.

3. மஸ்ஜிதுந் நபவிக்கு மரியாதை செலுத்தும்படி இரண்டு ரகாஅத் ''தஹிய்யத்துல் மஸ்ஜித்'' தொழவும். நபிகள் நாயகம் (ஸல்) தொழுதயிடத்தில் தொழ முடிந்தால் ஏற்றமாயிருக்கும்.

4. கிப்லாவைப் பின்புறமாகக் கொண்டு, நபிகள் நாயகத்தின் (ஸல்) அடக்கத்தலத்திற்குமுன் நின்று நபிகள் நாயகத்திற்கு (ஸல்) ஸலாம் சொல்லவும். (அட்டவணை IIஐ பார்க்க).

5. பிறகு, வலது பக்கம் சென்று ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு சலாம் சொல்லவும்.

6. மீண்டும் வலது பக்கம் சென்று ஹஸ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்களுக்கு சலாம் சொல்லவும்.

7. பயபக்தியுடனும், தாழ்மையுடனும், நேர்மையுடனும் துஆச் செய்யவேண்டும்.

8. மதீனாவில் நீங்கள் சுமார் 10 நாட்கள் தங்குவீர்கள். அந்நாட் களில் எல்லாத் தொழுகைகளையும் மஸ்ஜிதுந் நபவியில் இமாம் ஜமாஅத் தாகத் தொழவும்.

9. மதீனாவைச் சுற்றி மார்க்கத் தலைவர்கள் பலரை அடக்கம் செய்யப்பட்ட "ஜன்னத்துல் பஃகீ"யையும் பிற புனித இடங்களையும் பார்வையிடுங்கள்.

10. முடியுமானால், (1) மஸ்ஜிதே குபா, (2) மஸ்ஜிதுல் ஜுமா, (3) மஸ்ஜிதுல் கிப்லத்தைன், (4) மஸ்ஜிதுல் பத்தாஹ், (5) மஸ்ஜிதுல் மஸ்லா, (6) மஸ்ஜித் அலி இப்னி அபீதாலிப், (7) மஸ்ஜிபி அபீ பக்ர், (8) மஸ்ஜித் உமர் இப்னுல் கத்தாப், (9) மஸ்ஜிதுஷ் ஷாஜரா, (10) மஸ்ஜிதில் பாதிஹ்ஷ் ஷம்ஸ், (11) மஸ்ஜிதுல் ஸக்கியா, (12) மஸ்ஜித் அபீ ஸர் ஆகிய புகழ்பெற்ற மஸ்ஜிதுகளையும் பார்வையிடவும்.

11. மதீனாவை விட்டுத் திரும்பும்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கபரிடத்தில் சென்று விடைபெற்று அதற்கான துஆவை ஓதவும்.

# XI. திரும்பி வருகை

புனித ஹஜ் முடித்து சவூதி அரேபியாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வரும்போது கவனிக்க வேண்டியவற்றை இந்த அத்தியாயத்தில் காணலாம்.

**1. சாமான்களை இறக்குமதி செய்வது பற்றிய விபரங்கள் :**

மக்கா, மதீனா ஆகிய இடங்களில் நீங்கள் தங்கியிருக்கும்போது ஆவலைத் தூண்டும் அங்காடிகளுக்குச் செல்ல வேண்டாம். அனுவசிய மான, தேவையற்ற பொருள்களை வாங்கினால் பம்பாய் சுங்க நிலையத் தில் தொல்லைகள் நேரிடும்.

ஹஜ்ஜை முடித்து திரும்பி வரும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களை நீங்கள் கொண்டுவர தற்போதைய அரசு விதிமுறைகள் அனுமதிக்கின்றன.

**(அ) சுங்கத் தீர்வையின்றி :**

1. சொந்தமாகப் பயன்படுத்தப்பட்ட அணியும் பொருள்கள் (நகைகள் நீங்கலாக) ;
2. வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய பயணி சொந்தமாகப் பயன்படுத்தும் பொருள்கள் ;
3. சொந்தமாகப் பயன்படுத்திய, ஆனால் 500 ரூபாய்க்குமேல் மதிப்பில்லாத, கைக்கடிகாரம் ஒன்று ;
4. ரூ. 1000/- வரை மதிப்புள்ள பொருள்கள் (அப்பொருள்கள் பயணியின் அல்லது அவர் குடும்பத்தின் உபயோகத்திற் காகவோ அல்லது நன்கொடை அளிப்பதற்காகவோ கொண்டு வரப்படுகின்றன என்று உரிய அதிகாரி திருப்தியுற்றால் மட்டும்).

*குறிப்பு :—* (i) 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் ரூ. 250/- வரை மதிப்புள்ள பொருள்களைத்தான் கொண்டு வரலாம்.

(ii) வாசனைப் பொருள்கள், துணிகள், ஆடைகள் போன்றவற்றின் மதிப்பு 500 ரூபாய்க்குமேல் ஆகக் கூடாது.

(iii) நியாயமான அளவிற்குமேல் ஒரு பொருளும் அனுமதிக்கப்படமாட்டாது.

**(ஆ) சுங்கத் தீர்வை கட்டியபின் :**

மேற்குறிப்பிட்ட பொருள்களுடன், சுங்கத் தீர்வை செலுத்திவிட்டு ரூ. 2000 வரை மதிப்புள்ள பொருள்களை சொந்த உபயோகத்திற் காகவோ, அல்லது குடும்பத்தின் உபயோகத்திற்காகவோ கொண்டு வரலாம்.

குறிப்பு :— டெலிவிஷன் செட், எயர் கண்டிஷ்னர், ரிப்ரிஜரேட்டர். ப்ரீஜ் (Deep Freeze) ஆகியவைகளைக் கொண்டு வர விதிமுறைகளில் அனுமதியில்லை.

**(இ) அபராதம் :**

அனுமதித்ததைவிட அதிகப் பொருள்கள் கொண்டு வந்தால் செயலில் உள்ள விதிகளின்படி தீர்வையும் அபராதமும் விதிக்கப்படும். சில நேர்வுகளில் அவை பறிமுதல் கூட செய்யப்படும்.

**2. திரும்பி வரும் பயணத்திற்கான தொகுதித் திட்டம் :-**

சவூதி அரேபிய அரசு புனிதப் பயணிகளுக்குத் திரும்பிவர தொகுதித் (batch) திட்டத்தை வகுத்துள்ளது. அதைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். இல்லையெனில் அங்கு குழப்பமும் சங்கடமும் ஏற்படும். ஒரு கப்பலில் பம்பாயிலிருந்து வெளிப் பயணத்தை மேற் கொள்ளும் ஹஜ் பயணிகள் அனைவரும் ஜித்தாவில் இறங்கியவுடன் ஒரு தொகுதியாக அமைக்கப்படுவார்கள். இந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஹஜ் முடிந்த பின்னர், சவூதி விதிகளின் கீழ் ஒரே தொகுதியாகத் திருப்பி அனுப்பப் படுவார்கள். உதாரணமாக, பம்பாயிலிருந்து ஐந்தாவது கப்பலில் அவர்கள் வந்தால், ஹஜ் முடிந்தபின் புறப்படும் ஐந்தாவது கப்பலில் அவர்கள் திரும்ப வேண்டும். இதற்கு கப்பலின் பெயர் முக்கிய மல்ல ; கப்பற் பயணத்தின் தொடர் எண்தான் முக்கியம். ஆகையால், புனிதப் பயணிகள் தங்களுடைய முறைவரும் வரை காத்திருக்க வேண்டும். அவர்கள் அவசரப்படவோ தங்களுடைய முறைக்கு முன்னரே தங்களுடைய பயணச் சீட்டைப் பெற முயலவோ கூடாது. அப்படிச் செய்வது தங்களுக்கு முன்னதாக ஹிஜாஸுக்கு வந்துள்ள பயணிகளின் உரிமையைப் பறிப்பதாகும்.

ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு மாறுவதைத் தெரிவிக்கும் படிவங்கள் மக்காவில் ஷோபைக்காவிலுள்ள இந்திய மருத்துவக் கட்டடத்திலமைந்திருக்கும் ஹஜ் அலுவலகத்தில் கிடைக்கின்றன. நோயாளிப் பயணிகள் போன்ற உண்மையான நேர்வுகளில் தான் ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு மாற்றுவதற்கு இந்திய தூதரகம் உதவும். கப்பல் மாற்றுவதற்கான விண்ணப்ப படிவத்திற்கு 2 சவூதி ரியால்கள் கட்டணமாக வசூலிக்கப்படும். குறிப்பிட்ட கப்பலுக் குச் சென்று சேராவிட்டால் கட்ட வேண்டிய அபராதத் தொகை 10 சவூதி ரியால்களாகும். குறிப்பிட்ட கப்பலில் திரும்பி வராவிட்டால் பிறகு வரும் கப்பல்களிலுள்ள இடவசதியைப் பொறுத்து இடமளிக்கப்படலாம். மொகல்லைன் கம்பெனியாரின் கப்பலில் திரும்பிவர விரும்பாதவர்களும் இந்தியத் தூதரகத்திற்கு சம்பந்தப்பட்ட படிவத்தில் முன் கூட்டி தகவல் கொடுக்க வேண்டும். தவறினால் 10 சவூதி ரியால்கள் அவர்கள் உபயோகப்படுத்தாத பயணச் சீட்டின் விலையிலிருந்து அபராதமாகக் கழிக்கப்படும்.

*குறிப்பு:* நம்முடைய புனிதப்பயணக் கப்பல்களில் அல்லது விமானங் களில் பயணம் செய்யும் புனிதப் பயணிகள் அனைவரும் இந்தியாவிற்குத் திரும்பும்போது தேவையாகும் ''வெளியேறும் விசா'' (Exit Visa)வைப் பெற வக்கீல்கள் ஏற்பாடு செய்வார்கள். வழக்கமாக மேற்சொன்ன பணிகளுக்காக வக்கீல்கள் கப்பல் பயணிகளிடமிருந்து 2 சவூதி ரியால் களும் விமானப் பயணிகளிடமிருந்து 4 சவூதி ரியால்களும் கட்டணமாக வசூலிக்கின்றனர். இதற்கு சவூதி அரேபிய அரசு ஏற்பளிக்காவிட்டா லும் நீண்ட காலமாக இது நடைமுறையில் இருந்து வருகிறது.

### 3. பயணத்திற்கான ஏற்பாடுகள் :

ஹஜ் முடித்து திரும்பி வரும்போது, இந்தியாவிலிருந்து ஹஜ் ஜிற்குப் புறப்படும்போது செய்யப்பட்ட அதே ஏற்பாடுகளை கப்பலில் நீங்கள் காணலாம். புனிதப் பயணிகளிடையேயிருந்து இந்திய தூதரகத் தால் நியமிக்கப்பட்ட '' அமீறுல் ஹஜ் '' இம்முறை உங்களுக்கு உதவி செய்வார். நீங்கள் பம்பாயை 7-9 நாட்களில் அடைவீர்கள்.

கப்பலில் காவல் துறையினரின் நடைமுறைகள் அனைத்தும் முடிந்த வுடன் நீங்கள் கரையில் இறங்கி சுங்கச் சாவடிக்கு பயணப் பொருள் களின் சோதனைக்காக செல்ல வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுத்த மஸ்தூர் உங்களுடைய பயணப் பொருள்களை சுங்கச் சாவடிக்கு எடுத்து வருவார். சுங்கச் சாவடியில் நீங்கள் காத்திருக்கும்போது உங்களுக்கு உணவுப் பொட்டலங்களை பம்பாய் ஹஜ் குழு அளிக்கும். குழுவின் உறுப்பினர்களும், பணியாளர்களும், சமூக நல ஊழியர்களும் உங்க ளுக்கு உதவுவார்கள்.

### 4. பம்பாயிலிருந்து சொந்த ஊருக்கு பயணம் :

உங்களுடைய சொந்த ஊருக்கு ரெயில்வே பயணச் சீட்டு கிடைக்கும் வரையில் நீங்கள் முஸாபிர்கானாவிலோ அல்லது தமிழ்நாடு பைத்துல் ஹஜ்ஜாஜிலோ தங்கியிருக்கவும். முஸாபிர்கானாவில் மத்திய, மேற்கு இந்திய ரெயில்வேக்கள் ரெயில் பயணச்சீட்டு கொடுக்கும் அலுவலகங் களைத் தொடங்குகின்றன. ரெயில்வே அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் காஷ்மீருக்கும், அஸ்ஸாமிற்கும் தனிப்பட்ட ரெயில்களை விடவும், பிற மாநிலங்களிலுள்ள பல்வேறு இடங்களுக்குத் தனி ரெயில் பெட்டிகளை இணைக்கவும் ஹஜ் குழு ஏற்பாடு செய்கிறது. உங்களுக்கு இடவசதி கிடைத்ததும் சொந்த ஊருக்குத் திரும்பி புனித ஹஜ் பயணத்தை சிறப்பாக முடித்துக் கொள்ளவும்.

# சிறப்பு இணைப்பு 1

## ஹிஜாஸில் பேசப்படும் மொழி

புண்ணிய பூமியான சவூதி அரேபியாவில் நீங்கள் காலடி எடுத்து வைத்ததும் அங்கு வாழும் மக்கள் அரபி பேசுவதைக் கேட்கலாம். இலக்கண மொழிக்கும் பொதுவாக அங்கு பேசப்படும் மொழிக்குமிடையே பெருத்த வேறுபாடு உள்ளது. அன்றாடப் பேச்சு வழக்கிலுள்ள அராபியமொழி வாக்கியங்கள் சில அடுத்த பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண விதிப்படி இந்த வாக்கியங்கள் சரியானவையாக இல்லாதபோதிலும் ஹிஜாஸில் குறுகிய கால அளவில் நீங்கள் தங்கியிருக்கும்போது அன்றாடம் உரையாடுவதற்கு அவை மிகவும் பயனுள்ளவையாக இருக்கும். தேவை ஏற்படும்போது புனிதப் பயணிகள் தங்கள் கருத்தை அரபி மொழியில் எளிதாக வெளிப்படுத்த, இவ்வாக்கியங்கள் உதவு மென்று நம்பப்படுகிறது.

| | |
|---|---|
| ஒன்று — வாஹிதுன் | وَاحِدٌ |
| இரண்டு — இஸ்னானி | اِثْنَانِ |
| மூன்று — ஸலாஸுன் | ثَلَاثٌ |
| நான்கு — அர்பவுன் | اَرْبَعٌ |
| அய்ந்து — خகம்சுன் | خَمْسٌ |
| ஆறு — சித்ததுன் | سِتَّةٌ |
| ஏழு — சப்அதுன் | سَبْعَةٌ |
| எட்டு — ஸமானியதுன் | ثَمَانِيَةٌ |
| ஒன்பது — திஸ்அதுன் | تِسْعَةٌ |
| பத்து — அஷருன் | عَشَرَ |
| பதினொன்று — அஹத அஷர | اَحَدَ عَشَرَ |
| பனிரண்டு — இஸ்னஅஷர | اِثْنَا عَشَرَ |
| இருபது — இஷ்ரீன் | عِشْرِيْنَ |
| முப்பது — ஸலாஸீன | ثَلَاثِيْنَ |
| நாற்பது — அர்பஈன | اَرْبَعِيْنَ |
| ஐம்பது — خகம்சீன | خَمْسِيْنَ |
| அறுபது — சித்தீன | سِتِّيْنَ |
| எழுபது — சப்ஈன | سَبْعِيْنَ |

| | |
|---|---|
| எண்பது — ஸமானீன | ثَمَانِيْنَ |
| தொண்ணூறு — திஸ்ஈன | تِسْعِيْنَ |
| நூறு — மிஅதுன் | مِأَةٌ |
| இருநூறு — மிஅதைனி | مِأَتَيْنِ |
| ஆயிரம் — அல்ஃபுன் | اَلْفٌ |
| தண்ணீர் — மூயா | مُوْيَا (مَاءٌ) |
| கயிறு — ஹப்லுன் | حَبْلٌ |
| படுக்கை — ஃபிராஷுன் | فِرَاشٌ |
| ரொட்டி — ஃகுப்ஜுன் | خُبْزٌ |
| நிலக்கரி — ஃபஹ்முன் | فَحْمٌ |
| ஸ்டவ் — தாஃபூதுன் | دَافُوْدٌ |
| மண் — துராபுன் | تُرَابٌ |
| நிறுவனம் — ஷிர்கதுன் | شِرْكَةٌ |
| பால் — ஹலீபுன் | حَلِيْبٌ |
| தயிர் — லபனுன் | لَبَنٌ |
| ஒட்டகம் — ஜமலுன் | جَمَلٌ |
| பசு — பகருன் | بَقَرٌ |
| ஆடு — ஃகனமுன் | غَنَمٌ |

குளியலறை — மிர்வஷுன் مِرْوَشٌ

ஆண்கள் — ரிஜாலுன் رِجَالٌ

பெண் — ஹரீமுன் حَرِيْمٌ

பையன் — திஃப்லுன் طِفْلٌ

மகன் — வலதுன் وَلَدٌ

சுவர் — ஜிதாருன் جِدَارٌ

கடிகாரம் — ஸாஅதுன் سَاعَةٌ

நிமிடம் — தகீகதுன் دَقِيْقَةٌ

பெட்டி, படுக்கை — அஃபஷுன் عَفَشٌ

வெள்ளரிக்காய் — கிஸ்ஸாவுன் قِثَّاءٌ

என்னுடைய தகப்பனார் — அபூய اَبُوْيَ

என் சகோதரன் —அக்கூயா اَخُوْيَا

என் தாயார் — உம்மீ اُمِّىْ

என் சகோதரி — உக்தீ اُخْتِىْ

வேலையாள் — காதிமுன் خَادِمٌ

குல்லாய் — கூஃபியா كُوْفِيه

தலைப்பாகை — அமாமதுன் عَمَامَةٌ

சொக்காய் — ஸவ்புன் ثَوْبٌ

துணி — குமாஷுன் قَمَاشٌ

கைக்குட்டை—மின்தீலுன் مِنْدِيلٌ

பெரிய கைக்குட்டை-இஹ்ராமுன் إِحْرَامٌ

ஐஸ் கட்டி — ஸல்ஜுன் ثَلْجٌ

கரண்டி — மில்அகதுன் مِلْعَقَةٌ

தட்டு, பிளேட் — ஸிஹனுன் صَحْنٌ

பெட்டைக் கோழி — தஜாஜதுன் دُجَاجَةٌ

கொசு — நாமூசுன் نَامُوسٌ

தீ — நாருன் نَارٌ

ரொட்டி — அய்ஷுன் عَيْشٌ

முட்டை — பய்ளுன் بَيْضٌ

சோறு — ருஜ்ஜுன் رُزٌّ

இறைச்சி — லஹ்முன் لَحْمٌ

மாவு—தகீகுன் دَقِيقٌ

நெய் — சமனுன் سَمْنٌ

வெங்காயம் — பசலுன் بَصَلٌ

பருப்பு—அதஸுன் عَدَسٌ

கீரை— பக்லுன் بَقْلٌ

| | |
|---|---|
| கொடு — அஃதி | أَعْطِ |
| எனக்கு வேண்டும் — அப்கீخ | اَبْغِى |
| குடிப்பதற்குக் கொடு — அஸ்கி | اَسْقِ |
| எடு, வாங்கு, பிடி — خகுத் | خُذْ |
| நான் வந்தேன் — ஜிஃது | جِئْتُ |
| நல்லது — தய்யிபுன் | طَيِّبٌ |
| எவ்வளவு ? — கம் | كَمْ |
| அது என்ன ? — அய்ஷு | اَيْشُ |
| கீழே இறங்குங்கள் — அன்ஜிலூ | اَنْزِلُوْا |
| நீ எவ்வளவு எடுத்துக் கொள்வாய் ? — கம் தஃகுது | كَمْ تَأْخُذُ؟ |
| அஞ்சல் — அல்பரீது | اَلْبَرِيْدُ |
| தந்தி — பர்கியா | بَرْقِيَة |
| பின்னால் — வராஅ | وَرَاءَ |
| துறைமுகம் — மீனாவு | مِيْنَاءُ |
| காகிதம் — வரகுன் | وَرَقٌ |
| உறை — ளர்ஃபுன் | ظَرْفٌ |
| மழை — மதருன் | مَطَرٌ |
| செய்தித்தாள் — ஜரீதா | جَرِيْدَةٌ |

| | |
|---|---|
| குழம்பு — இதாமுன் | إِدَامٌ |
| சாலை — ஷாரிஉன் | شَارِعٌ |
| சுங்கம் — ஜும்ருகுன் | جُمْرُكٌ |
| வீடு — பைதுன் | بَيْتٌ |
| மோட்டார் — சய்யாரதுன் | سَيَّارَةٌ |
| கோச்சு வண்டி — அரப்ஜிய்யா | عَرَبْجِيَّةٌ |
| கோச்சு ஓட்டுநர் — அரப்ஜீ | عَرَبْجِي |
| விமானம் — தய்யாரதுன் | طَيَّارَةٌ |
| தீப்பெட்டி — கிப்ரீதுன் | كِبْرِيتٌ |
| கதவு — பாபுன் | بَابٌ |
| பைசா — ஃபுலூஸுன் | فُلُوسٌ |
| வாழைப் பழம் — மவ்ஜுன் | مَوْزٌ |
| ஆரஞ்சு பழம் — புர்துகாலுன் | بُرْتُقَالٌ |
| அத்திப் பழம் — தீனுன் | تِينٌ |
| பாதாம் பருப்பு — லவ்ஜுன் | لَوْزٌ |
| முலாம் பழம் — ஹப்ஹப் | حَبْحَب |
| ஆப்பிள் — துஃப்ஃபாஹுன் | تُفَّاحٌ |
| பஜார் — சூகுன் | سُوقٌ |

| | |
|---|---|
| கப்பல் — பாகிரதுன் | بَاخِرَةٌ |
| கடல் — பஹ்ருன் | بَحْرٌ |
| தூக்கு — ஷீல் | شِيلْ |
| குடி — இஷ்ரப் | اِشْرَبْ |
| நான் போகிறேன் — அருஹூ | أَرُوحُ |
| போய்விடு — ருஹ் | رُحْ |
| பக்கம் — கரீபுன் | قَرِيبٌ |
| உப்பு — மில்ஹூன் | مِلْحٌ |
| முன்னே — குத்தாமுன் | قُدَّامٌ |
| பெரிய — கபீருன் | كَبِيرٌ |
| சிறிய — சகீருன் | صَغِيرٌ |
| உயர்ந்தது — ஆலீ | عَالِي |
| குழம்பு — மர்கஹ் | مَرْقَه |
| சத்திரம் — ருபாதுன் | رُبَاطٌ |
| பட்டு (சில்க்) — ஹரீருன் | حَرِيرٌ |
| பாஸ்போர்ட் — ஜவாஜூஸ்— ஸஃபர் | جَوَازُ السَّفَرِ |
| வரி — ருசூமுன் | رُسُومٌ |
| நாளை — புக்ரஹ் | بُكْرَةً |

| | |
|---|---|
| இன்று — அல்யவ்மு | اَلْيَوْمُ |
| நேற்று — அம்சி | اَمْسِ |
| வருடம் — ஆமுன் | عَامٌ |
| முழம் — திராவுன் | ذِرَاعٌ |
| நடைபாதை — ரசீபுன் | رَصِيْفٌ |
| கப்பல் தளம் — அஸ்தகீலா | اَسْتَقِيْلَةٌ |
| கப்பல் தளம் — இஸ்திஆலா | اِسْتِعَالَةٌ |
| வெண்டைக்காய் — பாமியா | بَامِيَةٌ |
| தேநீர் — ஷாய் | شَاىْ |
| முள்ளங்கி — ஃபுஜுலுன் | فُجُلٌ |
| வெள்ளைப் பூண்டு — ஃபூமுன் | فُوْمٌ |
| மிளகாய் — ஃபுல்ஃபுல் | فُلْفُلٌ |
| புதினாக் கீரை — நஃநாவு | نَعْنَاعٌ |
| வெற்றிலை — தன்பூல் | تَنْبُوْلٌ |
| பாக்கு — ஃபவ்ஃபில் | فَوْفِلٌ |
| பெட்டி — அலபா | عَلَبَةٌ |
| சாப்பிடு — குல் | كُلْ |
| அண்டா — பர்மீல் | بَرْمِيْلٌ |

| | |
|---|---|
| கோப்பை — ஃபின்ஜான் | فِنْجَانٌ |
| மேலே — ஃபவ்க | فَوْقَ |
| சட்னி — ஜல்தா | زَلْطَةٌ |
| பேரீச்சம்பழம் — தமர் | تَمَرٌ |
| அஞ்சனம் — குஹ்லுன் | كُحْلٌ |
| வா — தஆல் | تَعَالْ |
| நான் புறப்படுவேன் — அம்ஷீ | اَمْشِي |
| விடை கொடு — வத்திஃ | وَدِّعْ |
| பார் — ஷூஃப் | شُفْ |
| மண்ணெண்ணை — காஸ் | كَاسْ |
| (பேட்டரி) செல் — ஹஜர் | حَجَرٌ |
| மீன் — ஸமகுன் | سَمَكٌ |
| சர்க்கரை — சுக்கருன் | سُكَّرٌ |
| உருளைக் கிழங்கு — பதாதீஸ் | بَطَاطِس |
| தக்காளி — தமாதிம் | طَمَاطِمٌ |
| எங்கே — ஃபீன | فِيْنَ |

| | |
|---|---|
| கூலி, இங்கே வா | تَعَالْ هُنَا يَاحَامِلْ |
| இந்த ட்ரங்க் பெட்டியைத் தூக்கு | شِيلْ هٰذَا الصَّنْدُوقْ |
| மேலே தூக்கு | اِرْفَعْ فَوْقْ (فُوقْ) |
| தலைமேல் தூக்கி வைத்துக்கொள் | شِيلْ فَوْقَ رَأْسِكْ<br>(اِرْفَعْ فَوْقَ رَأْسِكْ) |
| முதுகின்மேல் தூக்கி வைத்துக்கொள் | شِيلْ فَوْقَ ظَهْرِكَ<br>(اِرْفَعْ فَوْقَ ظَهْرِكَ) |
| இந்தப் படுக்கை கீழேயே இருக்கட்டும் | خَلِّ اَسْفَلْ هٰذَا الْفِرَاشْ |
| இந்த ட்ரங்க் பெட்டியைக் கீழே வை | نَزِّلْ اَسْفَلْ هٰذَا الصَّنْدُوقْ |
| எங்கள் பெட்டி படுக்கைகளை இங்கே கொண்டுவா | جِئْ بِالْعَفْشْ هُنَا<br>حَقّنَا (حَقِّنَا) |
| நண்பா, குளிர்ந்த தண்ணீர் கொடு | يَارَفِيقْ اَسْقِنِي مُوْيَا مُثَلَّجَة (بَارِدْ) |
| கூலியாள் எங்கே? | فِيْنَ الْحَامِلْ (اَيْنَ الْحَامِلْ) ؟<br>(حَامِلْ فِيْنْ)؟ |
| சகோதரனே, ஒரு டம்ப்ளர் சர்பத் கொடு | يَا اَخُوْيَا اَعْطِنِي وَاحِدْ<br>كَأْسِ شُرْبِيتْ |
| சகோதரனே, கிப்லா எந்தப் பக்கம் உள்ளது? | يَا اَخُوْيَا فِيْنَ الْقِبْلَةْ ؟ |

| | |
|---|---|
| நண்பனே, இந்தப் படுக்கைகளைக் கயிற்றினால் சரியாகக் கட்டு | يَارَفِيقْ اَرْبُطْ هٰذَا الْفِرَاشْ مَضْبُوطْ بِالْحَبْلْ |
| கூலி, பெட்டி படுக்கை அனைத்தையும் ஒரு இடத்தில் சரியாகவை | يَا حَامِلْ لُمْ كُلَّ الْعَفْشْ فِي وَاحِدْ مَحَلْ |
| அந்த ஆள் எங்கே போனான்? | فِينَ رَاحَ الرَّجُلُ ذَا (ذَاكَ)؟ |
| அந்தக் கூலி எங்கே சென்றான்? | فِينَ رَاحَ الْحَامِلْ ذَا ؟ |
| எங்களுடன் வா | إِسْمَعْ اَمْشِي هُنَا |
| கூலி, அடியிலிருக்கும் ட்ரங்க் பெட்டியை எடுத்து இங்கே வை | يَاحَامِلْ نَدِّرْ هٰذَا الصَّنْدُوقْ مِنْ تَحْتْ وَحُطَّ هُنَا |
| சகோதரனே, வா, இங்கே பார்; எல்லாப் பெட்டி படுக்கைகளையும் இந்த அறைக்குக் கொண்டுவா | تَعَالْ يَااَخُويَا شُفْ جِئْ بِكُلِّ الْعَفْشِ هُنَا فِي هٰذِهِ الْغُرْفَة |
| நண்பனே, உணவு எங்கே? | يَاحَبِيبِي فِينَ الاَكْلُ؟ |
| ஐயா, எனக்கு உதவி செய்யுங்கள் | يَا اَبُويَا سَاعِدْنِي |
| இங்கே நில், நான் உன்னுடன் வருகிறேன் | قِفْ اَنَا اَجِيئُ مَعَكْ |

| | |
|---|---|
| என்ன ஹாமித்! (முஅல்லிமின் பெயர்), மக்காவுக்கு நாம் எப்போது செல்கிறோம் ? | يَا حَامِدْ نَحْنُ مَتَى نَمْشِى<br>إِلَى مَكَّةِ الْمُكَرَّمَةْ |
| டிரைவர் எங்கே ? | فِيْنَ السَّوَّاكُ (سَوَّاقُ) ؟ |
| அவன் எப்போது வருவான் ? | هُوَ مَتَى يَجِيْئُ ؟ |
| கதவைத் திற | فَكِّ الْبَابَ |
| என்னுடைய பெல்ட்டை (Waist belt) அங்கேயே மறந்து வைத்துவிட்டேன் | هُنَا اَنَا نَسِيْتُ حِزَامَ حَقِّى |
| சகோதரா, ஒரு கிலோ தக்காளிப் பழமும், அரைக் கிலோ வெண்டைக்காயும் கொடு | يَا اَخُوْيَا اَدِّيْنِى وَاحِدْ<br>كِيْلُو بَاذِنْجَان اَحْمَرْ<br>وَنِصْفَ كِيْلُو بَامِيَةْ |
| ஷேய்க், கால் ரியாலுக்கு எலுமிச்சம் பழமும், இரண்டு குருஷுக்குக் கொத்தமல்லியும் எனக்குக் கொடுங்கள் | يَا شَيْخْ اَعْطِيْنْ رُبْعَ رِيَالْ<br>لِيْمُوْنْ وَقُرُوْشَيْنِ نَعْنَاعْ |
| கோழியின் விலை என்ன ? | بِكَمِ الدُّجَاجُ ؟ |
| எனக்கு ஒரு ஆடு (தும்பா) கொண்டு வா | جِبْ لَنَا وَاحِدْ طَلِى |
| எனக்கு உடல் நிலை சரியில்லை | اَنَا مَرِيْضٌ |
